இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 184 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – மாசி 02 – புதன்கிழமை 14 பிப்ரவரி 2024 – மதுரை 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 184 : Thiruvalluvar Year - 2055 - Maasi 02 - Wednesday 14 February 2024 - Madurai 12 Pages ₹ 5.00

## கிளாம்பாக்கம் - ‘கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையம்’

# பெரும் பிரச்சினைகளையெல்லாம் தீர்த்து வைத்துத்தான் திறக்கப்பட்டது!

## சட்டப்பேரவையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் விளக்கம்!

**சென்னை, பிப். 14 –**

**“பெரிய பெரிய பிரச்சினைகளையெல்லாம் தீர்த்து வைத்துத்தான் கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையம் திறக்கப்பட்டது” என்று சட்டப்பேரவையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கூறினார்.**

சட்டப்பேரவையில் நேற்று, கேள்வி நேரத்தின் போது இதுகுறித்து நடைபெற்ற விவாதம் வருமாறு :–

**செல்லூர் கே.ராஜு** : இன்றைக்கு தொலைக்காட்சிகள், பத்திரிகைகள் அனைத்திலும் போக்குவரத்துத் துறை அமைச்சர் மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் ஆகியோரின் பேட்டிகள்தான் அதிகம் காணப்படுகின்றன. ஆனால், பொதுமக்கள் உண்மையிலேயே மிகவும் சிரமப்படுகிறார்கள். முதலமைச்சர் அவர்களும், போக்குவரத்துத் துறை அமைச்சர் மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் ஆகியோரும் இதன்மீது கவனம் செலுத்தி, மக்கள் சென்னைக்கு வந்தால் எளிதாக பயணிக்கலாம் என்கின்ற நிலை ஏற்படும் வகையில், தென் மாவட்ட மக்களுக்கு இனிப்பான செய்தியைச் சொல்லி, மக்களிடமிருந்து ‘சபாஷ்’ பெறும்வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.

**அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர்** : கிளாம்பாக்கம் இடம் உங்கள் ஆட்சியில்தான் தேர்ந்தெடுக்கப்பட்டது. ஏற்கெனவே இருக்கின்ற இடத்தில் போக்குவரத்து நெரிசல் இருப்பதன் காரணமாக வேறு இடத்திற்கு பேருந்து நிலையத்தை மாற்ற வேண்டுமென்று உங்கள் ஆட்சியில்தான் தேர்ந்தெடுக்கப்பட்டது. எனவே, உங்கள் ஆட்சியில் துவக்கப்பட்ட திட்டத்தை பாதியிலேயே நிறுத்தாமல், எங்களுடைய திராவிட மாடல் முதல்வர் அவர்கள் உங்கள் திட்டத்தை மிகச் சீராகவும், சிறப்பாகவும் நிறைவேற்றி, 30 சதவிகிதத்தில் நீங்கள் விட்டப் பணிகளை முழுமைப்படுத்தி, மேலும் கூடுதல் வசதிகள் என்னென்ன தேவைகள் இருக்கின்றனவோ பார்த்து பார்த்து அவற்றை மேற்கொள்வதற்கு உத்தரவிட்டு, அமைச்சர் சேகர்பாபு அவர்கள் CMDA துறையின் மூலம் பார்த்து பார்த்து செய்துகொண்டிருக்கிறார்கள்.

ஏற்கெனவே, உங்கள் ஆட்சியில்தான் பேருந்து நிலையத்தினை பாரி முனையத்திலிருந்து கோயம்பேட்டிற்கு மாற்றும்போதும், இதேபோன்றுதான் பல்வேறு பிரச்சினைகள் எழுந்தன. அப்போதும் இதேபோன்று பத்திரிகைகளின் தலைப்புச் செய்திகளில் கோயம்பேட்டில் ‘தண்ணீர் வசதி இல்லை, உணவு கிடைக்கவில்லை, ஓட்டுநர்கள் பேருந்துகளின் கீழே படுத்துக்கொண்டிருக்கிறார்கள்’ என்றெல்லாம் வெளிவந்தன. எந்த ஒரு மாற்றமும் வருகின்றபோது, அதனை ஏற்றுக்கொள்வதில் சில நேரங்களில் சில தயக்கங்கள் இருக்கும்தான். ஆனால், கிளாம்பாக்கம் பேருந்துநிலையத்தை மக்கள் முழுவதுமாக ஏற்றுக்கொண்டு அவ்விடத்தில் பயணித்துக்கொண்டுதான் இருக்கிறார்கள். பேருந்துகளில் பயணிக்கின்ற யாரும் இது குறித்து பிரச்சினை எழுப்புவதில்லை.

கோயம்பேடு பேருந்து நிலையத்திலிருந்து இயக்கப்பட்ட 100 சதவிகித பேருந்துகளில், 20 சதவிகித பேருந்துகள் மாதவரம் பேருந்து நிலையத்திலிருந்தும், 80 சதவிகித பேருந்துகளை கிளாம்பாக்கம் கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையத்திலிருந்தும் இயக்கப்படுகின்றன. வடசென்னை பகுதியிலிருக்கின்ற மக்கள் கோயம்பேட்டிற்கு வருவதற்கே சிரமப்பட்டதன் அடிப்படையில், அம்



மக்கள் கிளாம்பாக்கம் செல்வதற்கு மிகவும் சிரமப்படுவார்கள் என்று எண்ணி, அவர்களது பிரச்சினையை உடனடியாக தீர்க்க வேண்டுமென்று, வடசென்னைப் பகுதிகளாகிய திருவொற்றியூர், இராயபுரம், RK நகர், ஆவடி மற்றும் அம்பத்தூர் போன்ற பகுதிகளிலிருக்கின்ற மக்கள் சிரமங்களைப் போக்குகின்றவகையில், அவர்கள் மாதவரத்திலிருந்து எளிதாக பயணிக்கின்றவகையில், அவ்விடத்திலிருந்து பேருந்துகளை இயக்குவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டதன் அடிப்படையில், மாதவரத்திலிருந்து 20 சதவிகித பேருந்துகள் இயக்கும் வாய்ப்பு கிடைக்கப்பெற்றுள்ளது. மீதியுள்ள 80 சதவிகிதப் பேருந்துகள் கிளாம்பாக்கத்திலிருந்து இயக்கப்படுகின்றன.

எனவே, மக்கள் கிளாம்பாக்கத்திலிருந்து தென்மாவட்டங்களுக்கு எந்தப் பிரச்சினையும் இல்லாமல் பயணம் செய்துகொண்டிருக்கின்றார்கள்.

**எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி கே. பழனிசாமி:** சிறு, சிறு பிரச்சினைகளையெல்லாம் சரி செய்து, பயணிகளுக்கு எவ்விதப் பிரச்சினையும் இல்லாமல் பயணம் மேற்கொள்வதற்கு உண்டான வசதியைச் செய்து கொடுக்க வேண்டுமென்பதுதான் எங்களுடைய கருத்து, அந்த அடிப்படையில்தான் நாங்கள் அறிக்கையில் வெளியிட்டோம். ஊடகத்திலும் அந்தச் செய்தியைத்தான் தெரிவித்திருக்கிறோம்.

**அமைச்சர் பி.கே. சேகர்பாபு:** அவசரப்பட்டு இந்த பேருந்து நிலையத்தைத் திறந்துவிட்டதாகச் சொல்கிறார். அவர்கள் செய்ய தவறிய காரியத்தை இந்த ஆட்சி செய்திருக்கின்றது. (குறுக்கீடு) அவர்களுடைய ஒப்பந்த காலம் என்பது (குறுக்கீடு) அவர்களுடைய ஒப்பந்த காலம் என்பது 2021 ஆம் ஆண்டு மார்ச் 13 ஆம் தேதியோடு, அந்தப் பணியின் பணி நிறைவு ஒப்பந்தம் போடப்பட்டிருந்தது. அவர்கள் காலத்தில் 30 சதவிகிதப் பணிகளைத்தான் முடித்திருந்தார்கள். மீதி 70 சதவிகிதப் பணிகளை முடித்ததோடு அல்லாமல், 100 கோடி ரூபாயை ஒதுக்கி, பயணிகளுக்குத் தேவையான அனைத்து வசதிகளையும் செய்து தந்த அரசு, இந்த அரசு என்பதை நான் பதிவு செய்கிறேன். எதிர்க்கட்சித் தலைவரும், மற்ற உறுப்பினர்களும் வந்தால் அந்த கிளாம்பாக்கம் பேருந்து நிலையத்தை முழுமையாகச் சுற்றிப் பார்த்துவிட்டால், நிச்சயம் முதலமைச்சர் அவர்களை, எதிர்க்கட்சித் தலைவர் அவர்களே புகழக்கூடிய அளவிற்கு அந்த கிளாம்பாக்கம் பேருந்து நிலையம் அமைந்திருக்கிறது.

**எடப்பாடி கே. பழனிசாமி:** நீங்களே சொல்லியிருக்கிறீர்கள். சிறு, சிறு பிரச்சினைகள் இருப்பதை, நீங்களே அவையில் இப்போது பேசியிருக்கிறீர்கள். அந்த சிறு, சிறு பிரச்சினைகளும் தீர்க்கப்பட்டு, முழுமையாக பணி நிறைவு செய்யப்பட்ட பிறகு, இந்த பேருந்து நிலையம் திறக்கப்பட்டிருந்தால் இந்த விவாதமே நடைபெற்றிருக்காது. அதைத்தான் நாங்கள் குறிப்பிட்டு அறிக்கை வெளியிட்டிருக்கிறோம்.

**முதல்வர் மு.க.ஸ்டாலின்:** எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னதுபோல, சிறு, சிறு பிரச்சினைகள் மட்டுமல்ல, பெரும்பெரும் பிரச்சினைகள் எல்லாம் இருந்தது. அதையும் தீர்த்து வைத்துதான் திறந்து வைத்திருக்கிறோம். அவரே சொல்லியிருக்கிறார், ‘இன்னும் ஏதேனும் பிரச்சினை இருந்தால் சொல்லுங்கள், நேரிடையாக வாருங்கள், அழைத்துச் செல்கிறோம். நீங்கள் சொல்கின்ற குறைகள் இருந்தால், நாங்கள் தீர்த்து வைக்கக் காத்திருக்கிறோம்’ என்றுதான் பெருந்தன்மையாகச் சொல்லியிருக்கிறார். எனவே, இத்துடன் இந்தப் பிரச்சினையை முடித்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு பேரவையில் விவாதம் நடைபெற்றது.

### பேரவையில் எதிர்க்கட்சித் துணைத் தலைவர் இருக்கை ஒதுக்கீடு விவகாரம்!

## எதிர்க்கட்சித் தலைவரின் கோரிக்கை - மறுபரிசீலனை செய்திடுவீர்!

### பேரவைத் தலைவருக்கு - முதல்வர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தல்!

**சென்னை, பிப். 14 –**

**சட்டப்பேரவையில் எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிச்சாமி, சட்டமன்ற எதிர்க்கட்சித் துணைத் தலைவருக்கு இருக்கை ஒதுக்கீடு செய்வது குறித்த தங்களின் கோரிக்கையினை வலியுறுத்திப் பேசினார்.**

**அவ்விவாதத்தில் குறுக்கிட்டுப் பேசிய முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், “எதிர்க்கட்சித் தலைவர் (எடப்பாடி பழனிச்சாமி) வைத்திருக்கக்கூடிய இக்கோரிக்கையை மறு பரிசீலனை செய்து அதற்கு ஆவன செய்யுமாறு தங்களிடம் (பேரவைத் தலைவரிடம்) நான் உரிமையோடு கேட்டுக் கொள்கிறேன்!” என்று குறிப்பிட்டார்.**

சட்டப்பேரவையில் இதுகுறித்து நடைபெற்ற விவாதம் வருமாறு :–

**எடப்பாடி கே. பழனிசாமி:** எதிர்க் கட்சி சட்டமன்றத் துணைத் தலைவர் இருக்கை குறித்து தங்களிடம், எங்களுடைய சட்டமன்ற கொறடா மற்றும் மூத்த சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கள் அறையிலே நான்கு முறை சந்தித்துக் கடிதம் கொடுத்திருக்கின்றோம். நம்முடைய அவையின் மரபின்படி, சட்டமன்ற எதிர்க் கட்சித் தலைவருக்கு அருகில், சட்டமன்ற எதிர்க் கட்சித் துணைத் தலைவர் இருக்கை ஒதுக்குவது மரபாக இருந்து கொண்டிருக்கின்றது. பல ஆண்டு காலமாக இருந்து வருகின்ற மரபை தாங்கள் நிறைவேற்றித் தரவேண்டுமாய் அன்போடு தங்களை இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கின்றேன்.

அதுமட்டுமல்ல, நாங்கள் பல முறை தங்களிடத்திலே நேரில் வலியுறுத்திச் சொல்லியிருக்கின்றோம். ஆகவே, சட்டமன்ற எதிர்க் கட்சித் தலைவருக்கு அருகில் சட்டமன்ற எதிர்க் கட்சித் துணைத் தலைவர் ஆர்.பி. உதயகுமார் அவர்களை எங்கள் சட்டமன்ற உறுப்பினர்கள் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். அவர்களுக்கு முன்வரிசையில் இருக்கை ஒதுக்கித் தருமாறு அன்போடு இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

**முதல்வர் மு.க. ஸ்டாலின்:** இங்கே எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள், தங்கள் கட்சியின் துணைத் தலைவராகத் தேர்தெடுக்கப்பட்டிருக்கக்கூடிய ஆர்.பி. உதயகுமார் அவர்களுக்கு இடம் ஒதுக்கித்தரும் பிரச்சினை குறித்து, இந்த அவையிலே தொடர்ந்து பேசிக் கொண்டிருக்கிறார்கள். நீங்களும் அது சட்டமன்றத்தின் சபாநாயகரின் உரிமையில் உள்ளது என்று பதில் சொல்லி, ஏற்கெனவே இதே அவையில் அவைத் தலைவராக இருந்த தனபால் அவர்கள் என்ன தீர்ப்பு தந்தாரோ, அதை அடிக்கடி நீங்களும் சுட்டிக்காட்டி பதில் சொல்லியிருக்கிறீர்கள். இருந்தாலும் நான் கேட்டுக் கொள்ள விரும்புவது, நம்முடைய எதிர்க் கட்சித் தலைவர் எடுத்து வைத்திருக்கக்கூடிய கோரிக்கையை மறுபரிசீலனை செய்து, அதற்கு ஆவன செய்யுமாறு தங்களிடம் நான் உரிமையோடு கேட்டுக் கொள்கிறேன்.

**பேரவைத் தலைவர்:** எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுடைய கோரிக்கையை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கனிவோடு பரிசீலனை செய்து நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கோரியிருக்கிறார்கள். நிச்சயமாக தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு பேரவையில் விவாதம் நடைபெற்றது.

### சட்டப்பேரவையில் முன்னாள் ஆளுநர் பாத்திமா பீவி –

## கேப்டன் விஜயகாந்த் மறைவுக்கு இரங்கல் தீர்மானம்!

### முன்னாள் உறுப்பினர்கள் கு.க.செல்வம் உள்ளிட்டோருக்கு பேரவையில் இரங்கல்!

**சென்னை, பிப். 14 –**

**மறைந்த கேப்டன் விஜயகாந்த், முன்னாள் ஆளுநர் பாத்திமா பீவி ஆகியோருக்கு சட்டப்பேரவையில் நேற்று இரங்கல் தீர்மானம் கொண்டுவந்து நிறைவேற்றப்பட்டது.**

இதுகுறித்து பேரவைத் தலைவர் மு.அப்பாவு படித்த இரங்கல் குறிப்புகள் வருமாறு :–

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை முன்னாள் உறுப்பினர்களான ஆர்.வடிவேல் அவர்கள் 27.11.2023 அன்றும், ஏ. தெய்வநாயகம் அவர்கள் 2.12.2023 அன்றும், எம்.தங்கவேல் அவர்கள் 17.12.2023 அன்றும், துரை இராமசாமி அவர்கள் 23.12.2023 அன்றும், கு.க.செல்வம் அவர்கள் 3.1.2024 அன்றும் மற்றும் எஸ். இராசசேகரன் அவர்கள் 31.1.2024 அன்றும் மறைவுற்ற செய்தியினை இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆர். வடிவேல் அவர்கள் 2002–2006 ஆம் ஆண்டுகளில் வாணியம்பாடி தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டு, சிறப்பாகப் பணியாற்றினார்கள். மேலும், 2002–2003 ஆம் ஆண்டுகளில் அமைச்சராகவும் திறம்பட பணியாற்றினார்.

ஏ. தெய்வநாயகம் அவர்கள் 1985–1988, 1991–1996 மற்றும் 1996–2001 ஆகிய ஆண்டுகளில் மதுரை (மத்தி) தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டு, சீரிய முறையில் பணியாற்றினார்.

எம். தங்கவேல் அவர்கள் 1989–1991 மற்றும் 1991–1996 ஆகிய ஆண்டுகளில் முசிறி தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டு, பாராட்டத்தக்க வகையில் பணியாற்றினார்.

துரை இராமசாமி அவர்கள் 1977–1980, 1980–1984, 1985–1988, 1989–1991 மற்றும் 1991–1996 ஆகிய ஆண்டுகளில் வெள்ளக்கோயில் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டு, செவ்வனே பணியாற்றினார்கள். மேலும், 1993–1996ஆம் ஆண்டுகளில் அமைச்சராகவும் நன்கு பணியாற்றியுள்ளார்.

கு.க. செல்வம் அவர்கள் 2016–2021 ஆம் ஆண்டுகளில் ஆயிரம் விளக்கு தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டு, நல்ல முறையில் பணியாற்றினார்.

தொடர்ச்சி 3ஆம் பக்கம்



இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
புதன்கிழமை 14-02-2024

# ஆளுநர் திருந்தவே மாட்டாரா?

தேசிய கீதம் இசைத்து மரியாதையாக அவைக்குள் அழைத்து வருகிறார்கள் ஆளுநரை. ஆனால் அவர் சொல்லிக் கொள்ளாமல் வெளியேறுகிறார். கடந்த முறையும் அதைத்தான் செய்தார். இந்த ஆண்டும் அதையேதான் செய்கிறார். ஆளுநர் திருந்தவே மாட்டார் போலும்!

**ஆண்டுக்கு ஒரு முறை எழுதிக் கொடுப்பதை வாசிப்பதும் இல்லை. சபை நிறைவேற்றி அனுப்பும் சட்ட முன்வடிவுகளுக்கு ஒப்புதல் வழங்குவதும் இல்லை. அரசின் கோப்புகளில் கையெழுத்து போடுவதும் இல்லை. ஆளுநர்களுக்கு இருக்கும் மொத்த வேலைகளே இந்த மூன்றுதான்.** அந்த மூன்றையும் செய்யாமல் சனாதன ஆராய்ச்சி செய்கிறார். திருக்குறள் பொழிப்புரைகளை பிரித்தெடுக்கிறார். குற்ற வழக்கில் கைதாகி சிறையில் இருந்து வெளியே வந்த நபருக்கு ஆதரவாக சேலத்துக்குச் சென்று ஆராய்கிறார். பொது மேடைகளில் அதற்கு தொடர்பு இல்லாத, அரசு விவகாரங்களைப் பேசுகிறார். மாணவர்களை கூட்டி வைத்துக் கொண்டு கோப்புகளுக்கு விளக்கம் சொல்கிறார். உண்மையில் அவரைப் புரிந்து கொள்வது கூட சிரமமாகத்தான் இருக்கிறது.

அவரால் ஒப்புதல் தரப்பட்ட உரையை அவரே வாசிக்க மறுக்கிறார். இதில் உள்ளது தனக்கு உடன்பாடு இல்லாதது என்கிறார். உடன்பாடு இல்லாத உரைக்கு எதற்காக ஒப்புதல் தர வேண்டும்?

**உடன்பாடு இல்லாத உரையை வாசிக்க மறுக்க எதற்காக ஆளுநர் மாளிகையில் இருந்து கிளம்ப வேண்டும்? அதை ஆளுநர் மாளிகையில் இருந்தே சொல்லி அனுப்பி இருக்கலாமே? ஏன் அவர் நேரத்தை அவரே விரயம் செய்து கொண்டார்? அந்த ஒரு மணி நேரத்தை சனாதன ஆராய்ச்சி செய்வதில் கழித்திருக்கலாமே?**

தான் ஒப்புதல் வழங்கிய உரையில், தவறு நிறைய இருக்கிறது என்று, அவரே சொல்கிறார். என்ன தவறு என்பதைச் சொன்னாரா? இல்லை. தவறைக் கண்டுபிடித்திருந்தால்தானே சொல்வார்?

'தேசியகீதம் பாடவில்லை' என்று தனது பழைய தேய்ந்து போன ரெக்கார்டையே பாடினார் ஆளுநர். தேசிய கீதம் இறுதியில்தான் பாடுவார்கள். தமிழ்த்தாய் வாழ்த்தில் தொடங்குவதும் - தேசிய கீதத்தில் முடிப்பதும்தான் தமிழ்நாடு சட்டமன்றத்தின் வழக்கம். அதையே மாற்றச் சொல்கிறார்.

தேசிய கீதம் பாடினால், 'திராவிட உத்கல வங்கா' என்று வரும் போது அவர் காதை மூடிக் கொள்வாரா? தமிழ்த்தாய் வாழ்த்து பாடும் போது, 'அதில் சிறந்த திராவிட நல் திருநாடும்' என ஒலிக்கும் போது காதை மூடிக் கொண்டாரா?

**அவரால் மனதுக்குள் ஏதோ மன்னரைப் போல நினைத்துக் கொண்டு நடந்து கொள்கிறார். அவருக்கு 'தமிழ்நாடு' பிடிக்காது என்றால், 'தமிழ்நாடு' என்று சொல்லக் கூடாது. அவருக்கு ஜி.யு.போப் பிடிக்கவில்லை. அதற்காக போப் சமாதியைத் தோண்ட வேண்டுமா? காந்தி பிடிக்கவில்லை என்பதற்காக இன்னொரு முறை சுடப்பட வேண்டுமா?**

நேதாஜியை நேற்றுதான் படிக்கிறார். அம்பேத்கரை அதற்கு முந்தைய நாள்தான் படிக்கிறார். தமிழ்நாட்டை இப்போது தான் அறிகிறார். அவருக்கு எல்லாமே புதுசா இருக்கிறது. உடனே, 'ஏன் இவர்களை மறைத்தீர்கள்?' என்கிறார். 'தமிழ்நாட்டில் சுதந்திரப் போராட்ட வீரர்களை ஜாதி பார்த்து கொண்டாடுகிறார்களாம்' - இவர் குற்றம் சாட்டினார். காந்தி, திலகர், நேதாஜி போஸ், பகத்சிங், நேரு என மாநிலம் கடந்து பேர் வைத்தவர்கள் நாம். ஜாதியைக் கடந்து, மாநிலம் கடந்த தேச பக்தர்கள் நாம். 'சாவர்க்கர்' என வைப்பது இல்லை என்பது உங்களது கோபமாக இருந்தால் அதற்கு நாம் என்ன செய்ய முடியும்?

இத்தனை ஆண்டு கால வரலாற்றில் முதன்முதலாக ஒரு ஆளுநர், உரையாற்றாமல் போயிருக்கிறார். இது எந்த வகையில் சரியானது?

**அவைக்கு ஒவ்வாத கருத்துகளைப் பேசினால் அவை, அவைக்குறிப்பில் இருந்து நீக்கப்படும். முதன்முதலாக ஆளுநர் பேசியது அவைக் குறிப்பில் இருந்து நீக்கப்பட்டுள்ளது. இது அவர் வகிக்கும் பதவிக்குப் பெருமையல்ல, இழுக்கு ஆகும்.**

**திரும்பத் திரும்ப ஒரே தவறை அவர் செய்து கொண்டு இருக்கிறார். அவர் தனது பதவியில் இருந்து விலகி - கிண்டி ஆளுநர் மாளிகையில் இருந்து வெளியேறி - சைதாப்பேட்டையில் தனியாக வீடு எடுத்துத் தங்கி அரசியல் செய்ய வேண்டும். அதை விட்டு விட்டு ஆளுநர் பதவியில் இருந்து கொண்டு இத்தகைய அருவருப்பான செய்கைகளைச் செய்யக் கூடாது.**

'மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுக்குத்தான் அனைத்து அதிகாரமும் உள்ளது. மாநில ஆளுநர்கள் என்பவர்கள் நியமனங்களே, மாநில அரசுகளின் சிந்தனையை வெளிப்படுத்தும் ஸ்டெனோகிராபர்களே ஆளுநர்கள்' என்று எத்தனையோ முறை உச்சநீதிமன்றம் உச்சந்தலையில் கொட்டி இருக்கிறது. அதன்பிறகும் திருந்தாமல் இருந்தால் என்ன செய்வது? யாரை நொந்து கொள்வது?

தேசிய கீதம் முதலில் பாடவில்லை என்று சொல்லி விட்டு, தேசிய கீதம் முடிவில் பாடும் போது எழுந்து சென்றதை விட தேசிய கீதத்தை அவமானப்படுத்தும் செயல் இருக்க முடியுமா? இந்தக் குற்றத்துக்கு என்ன தண்டனை? தேசபக்தத் திலகங்கள் தான் சொல்ல வேண்டும். இப்படி தேசிய கீதம் பாடப்படும் போது தி.மு.க. அமைச்சர் ஒருவர் எழுந்து போயிருந்தால் தேசியப் பத்திரிக்கைகள் என்ன குதி, குதிக்கும்?

ஆளுநராக இருப்பவர் எதையும் பேசலாம், எப்படியும் நடந்து கொள்ளலாம் என்று விட்டு விடுகிறார்களா? அப்படி விட முடியுமா?

**ஆளுநரின் செயல் என்பது தமிழ்நாட்டை அவமானப்படுத்தும் செயலாகும். தமிழ்நாட்டு மக்களை அவமானப்படுத்தும் செயலாகும். தமிழ்நாடு சட்டமன்றத்தையும், சபை மாண்புகளையும் மதிக்காத தன்மை ஆகும். மக்களாட்சியைப் பற்றி துளியும் கவலைப்படாத செய்கை ஆகும். தான் வகிக்கும் பதவி இன்னது என்று உணராமல், தன்னிஷ்டத்துக்கு சட்டமன்றத்தை கேலிக் கூத்தாக்கும் காரியம் ஆகும்.**

இதற்கு ஆளுநர் பதில் சொல்லியாக வேண்டும். அவரை ஏவிவிடும், ஒன்றிய பா.ஜ.க. தலைமை நிச்சயம் பதில் சொல்லியாக வேண்டும்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (13.2.2024) தலைமைச் செயலகத்தில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சந்தித்து, சென்னையில் நடைபெற்ற 6-வது கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டு போட்டிகள் 2023 நிறைவு விழாவில் ஒட்டுமொத்த தொடரில் இரண்டாமிடம் பிடித்த தமிழ்நாடு அணிக்கு வழங்கப்பட்ட கோப்பையை காண்பித்து வாழ்த்துப் பெற்றார். இந்நிகழ்வின்போது, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.

## தூத்துக்குடியில் பிப்.16–அன்று

# மாபெரும் பொதுக் கூட்டம்! பொன். முத்துராமலிங்கம் சிறப்புரை!

### கழகத்தினருக்கு மாவட்டச் செயலாளர்கள் – அமைச்சர்கள் பி.கீதாஜீவன், அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் வேண்டுகோள்!





தூத்துக்குடி, பிப். 14 - திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவுரைப்படி தூத்துக்குடி வடக்கு - தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில், பிப்ரவரி 16ல் தூத்துக்குடி என். பெரியசாமி கிரிக்கெட் மைதானத்தில் "உரிமைகளை மீட்க ஸ்டாலினின் குரல்" பாசிசம் வீழட்டும்! இந்தியா வெல்லட்டும்! என்ற தலைப்பில் மாபெரும் தேர்தல் பரப்புரை பொதுக்கூட்டம் நடைபெற உள்ளது.

கூட்டத்தில் தி.மு.க. உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினரும், முன்னாள் அமைச்சருமான பொன். முத்துராமலிங்கம் பங்கேற்கிறார் என மாவட்டச் செயலாளர்கள் திருமதி. பி.கீதாஜீவன், அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் கூட்டாக அறிக்கை விடுத்துள்ளனர்.

இதுகுறித்து அவர்கள் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

வரவிருக்கும் 2024 நாடாளுமன்றத் தேர்தலில் கடந்த பத்தாண்டு காலத்தில் ஒன்றிய பா.ஜ.க. அரசு தமிழ்நாட்டிற்கு இழைத்த அநீதிகளையும், ஒன்றிய அரசிடம் மாநிலத்தின் உரிமைகளை அடகு வைத்து, தற்பொழுது நாடகமாடும் அடிமை அ.தி.மு.க.வின் துரோகங்களையும், திராவிட மாடல் அரசின் சாதனைகளையும் மக்களிடம் கொண்டு சேர்க்கும் வகையில், முதற்கட்டமாக "உரிமைகளை மீட்க ஸ்டாலினின் குரல்" பாசிசம் வீழட்டும்! இந்தியா வெல்லட்டும்! என்ற தலைப்பில் கழக பொதுக் கூட்டங்கள், முன்னணியினர் பங்கேற்கும் பரப்புரை நாடாளுமன்ற தொகுதி வாரியாக நடத்திட கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவுறுத்தியுள்ளார்கள்.

கழகத் தலைவரின் அறிவுரைக்கு இணங்க தூத்துக்குடி வடக்கு தெற்கு மாவட்டக் கழகங்களின் சார்பில் வருகிற 16.02.2024 - வெள்ளிக்கிழமை மாலை 6.00 மணி அளவில் அளவில் தூத்துக்குடி மீளவிட்டான் சாலையில் உள்ள என்.பெரியசாமி கிரிக்கெட் மைதானத்தில் பிரம்மாண்ட பரப்புரை பொதுக்கூட்டம் நடைபெற இருக்கிறது.

இக்கூட்டத்தில் தி.மு.க. உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினரும், முன்னாள் அமைச்சருமான பொன். முத்து ராமலிங்கம் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகிறார்.

தமிழ்நாட்டின் உரிமைகளை மீட்டெடுக்க கழகத் தலைவர் அவர்களின் குரலாக நடைபெறும் இந்த பரப்புரைக் கூட்டத்தில் தூத்துக்குடி வடக்கு, தெற்கு மாவட்டக் கழகத்திற்கு உட்பட்ட சட்டமன்ற, நாடாளுமன்ற இந்நாள், முன்னாள் உறுப்பினர்கள், மாவட்டக் கழக நிர்வாகிகள், மாநில அணி நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, நகர, ஒன்றிய, பகுதி, பேரூர், கிளை மற்றும் வார்டு கழகச் செயலாளர்கள், இளைஞரணி, மாணவரணி, மகளிரணி உள்ளிட்ட கழக சார்பு அணிகளின் நிர்வாகி கள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், பூத் கமிட்டி உறுப்பினர்கள், கழக செயல்வீரர்கள் மற்றும் பொதுமக்கள் அனைவரும் இதனையே அழைப்பாக ஏற்று பெருந்திரளாகக் கலந்து கொள்ள அழைக்கிறோம்.

இவ்வாறு அவர்கள் கூட்டாக விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளனர்.





கழகத் தலைவரும் முதல்வருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் அண்ணா அறிவாலய துணை மேலாளர் மறைந்த என்.ஜெயக்குமார் உடலுக்கு மலர்மாலை வைத்து இறுதி அஞ்சலி செலுத்தினார். உடன் கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., மற்றும் கழக இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை, தலைமை நிலையச் செயலாளர் பூச்சி எஸ். முருகன், அண்ணா அறிவாலயம் மேலாளர் பத்மநாபன், மயிலை த.வேலு எம்.எல்.ஏ., ஜெ. கருணாநிதி எம்.எல்.ஏ., உள்ளிட்ட கழக முன்னணியினர் உள்ளனர்.

# தி.மு.க. தலைமைக் கழக அலுவலக துணை மேலாளர் என்.ஜெயக்குமார் மறைவு!

## கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் நேரில் அஞ்சலி!

**சென்னை, பிப்.14-**

**தி.மு.க. தலைமைக் கழக அலுவலக துணை மேலாளர் என்.ஜெயக்குமார் அவர்கள் (வயது 74) நேற்று மறைவுற்றார் என்ற செய்தியை அறிவிக்க பெரிதும் வருந்துகிறோம். செய்தியை அறிந்ததும் கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மறைந்த என்.ஜெயக்குமார் அவர்களின் உடல் மீது மலர் மாலை வைத்து இறுதி அஞ்சலி செலுத்தினார்.**

கழகம் துவக்கப்பட்ட போது, தி.மு.க. தலைமைக் கழக அலுவலகமாக செயல்பட்டு வந்த சென்னை, இராயபுரம், "அறிவகத்தில்" 1970ஆம் ஆண்டு முதல் பணியாற்ற தொடங்கி, சற்றேறக் குறைய 54 ஆண்டு காலமாக, தலைமைக் கழக அலுவலகம் இயங்கி வந்த அறிவகம், அரசினர் தோட்ட சட்டமன்ற அலுவலகம், அன்பகம், அண்ணா அறிவாலயம் ஆகிய அலுவலகங்களில் தொடர்ந்து பணியாற்றி வந்ததுடன், கழகத்தலைவர்களான முத்தமிழறிஞர் கலைஞர், முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆகிய இருபெரும் தலைவர்களின் அன்பை பெற்றதுடன், அவர்கள் எண்ணஓட்டமறிந்து, அதனை உடனே செயல்படுத்தி வந்த தலைமைக் கழகத்தின் துணை மேலாளர் என்.ஜெயக்குமார் அவர்களுக்கு ஓரிரு நாட்களுக்கு முன்பு உடல்நலக் குறைவு ஏற்பட்டு, சிகிச்சைக்காக காவேரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில்,



சிகிச்சை பலனின்றி நேற்று (13.2.2024), காலை 6.45 மணியளவில் மறைவெய்தினார்.

மறைவு செய்தியறிந்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேரில் சென்று மறைந்த என்.ஜெயக்குமார் அவர்களின் உடல்மீது மலர்மாலை வைத்து இறுதி அஞ்சலி செலுத்தினார்.

மேலும் தி.மு.க. பொருளாளர் டி.ஆர்.பாலு, துணைப் பொதுச் செயலாளர்கள் ஆ.ராசா, கனிமொழி கருணாநிதி, அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி, தி.மு.க. செய்தித் தொடர்பு தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன், அமைச்சர்கள் ஐ.பெரியசாமி, எ.வ. வேலு, எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன், உதயநிதி ஸ்டாலின், கே.ஆர். பெரியகருப்பன், செஞ்சி மஸ்தான், மா.சுப்பிரமணியன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் தயாநிதிமாறன், கலாநிதி வீராசாமி, தமிழச்சி தங்கபாண்டியன், என்.ஆர்.இளங்கோ, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் செயலாளர் கி.இராஜமாணிக்கம் ஐ.ஏ.எஸ். (ஓய்வு), அண்ணா அறிவாலயம் மேலாளர் பத்மநாபன், தி.மு.க. இணை அமைப்புச்செயலாளர் அன்பகம் கலை, தலைமை நிலையச் செயலாளர்கள் துறைமுகம் காஜா, பூச்சி முருகன், இயக்குனர் அமிர்தம், நடிகர் அருள்நிதி, சட்டமன்ற உறுப்பினர்கள் மயிலை த.வேலு, அரவிந்த் ரமேஷ் உள்ளிட்டோரும் ஜெயக்குமாரின் உடலுக்கு அஞ்சலி செலுத்தினர்.

ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ, தமிழ்நாடு பாடநூல் கழகத் தலைவர் திண்டுக்கல் ஐ.லியோனி, தமிழ்நாடு வணிகர் சங்க பேரமைப்பு தலைவர் விக்கிரமராஜா உள்ளிட்டோரும் ஜெயக்குமாரின் உடலுக்கு அஞ்சலி செலுத்தினார்கள்.

அன்னாரது உடலுக்கு, சென்னை 600 035, சி.ஐ.டி.நகர், மாடல் அவுஸ் ரோடு, கதவிலக்கம் 22ல் உள்ள அவரது இல்லத்தில் கழக நிர்வாகிகள் மற்றும் தோழர்கள் திரளாகத் திரண்டு இறுதி அஞ்சலி செலுத்தினர். அன்னாரின் இறுதி ஊர்வலம் நேற்று மாலை 3.00 மணி அளவில் அவரது இல்லத்தில் இருந்து புறப்பட்டு சென்னை, தியாகராயர் நகர், கண்ணம்மா பேட்டை இடுகாட்டில் இறுதிச் சடங்குகள் நடைபெற்றன.

மறைந்த என்.ஜெயக்குமார் அவர்களுக்கு திருமதி ரமணி என்ற மனைவியும், ஜெ.கதிரவன், டாக்டர் அருண் என்ற இரு மகன்களும் உள்ளனர்.

## தலைமைக் கழகத்தின்

# தூணாக விளங்கியவர் ஜெயக்குமார்!

## கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் உருக்கமிகு இரங்கல்!

**சென்னை, பிப்.14-**

**"தலைமைக் கழகத்தின் தூணாக விளங்கியவர் ஜெயக்குமார் அவர்கள்" என்று அவரது மறைவு குறித்து கழகத் தலைவரும், முதல்வருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் உருக்கமுடன் கூறியுள்ளார்.**

இதுகுறித்து முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தி வருமாறு:-

"தலைமைக் கழகத்தின் தூணாக விளங்கிய நம் அன்புக்குரிய ஜெயக்குமார் அவர்கள் மறைந்த செய்தி வந்தடைந்து என்னைச்சோகத்தில் ஆழ்த்தியது.

அரை நூற்றாண்டு காலத்திற்கும் மேலாக அவரது உழைப்பையும் வளர்ச்சியையும் அருகிலிருந்து கவனித்து வந்தேன். தலைமைக் கழகம் அறிவகத்தில் செயல்பட்டு வந்த காலத்திலேயே தலைமைக் கழகப் பணிகளுக்காகத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டு செயலாற்றத் தொடங்கினார். அறிவகத்தில் தொடங்கிய பயணம் அரசினர் தோட்ட சட்டமன்ற அலுவலகம், அன்பகம் எனத் தொடர்ந்து, அண்ணா அறிவாலயத்தின் துணை மேலாளர் என உச்சம் பெற்றது. தலைமைக் கழகத்தை நாடி வந்த ஒவ்வொரு உடன்பிறப்பும் அன்போடும் உரிமையோடும் உறவாடி 'அறிவாலயம்' ஜெயக்குமார் எனப் பெயரிட்டனர்.

**பத்மநாபன் – ஜெயக்குமார் இரட்டைத் தூண்கள்!**

அண்ணா அறிவாலயத்தின் மேலாளரான பத்மநாபனும் ஜெயக்குமாரும் இரட்டைத் தூண்களெனத் தலைமைக் கழகப் பணிகளைத் தாங்கி வந்தனர். தலைமைக் கழகத்தால் எடுக்கப்படும் முடிவுகளைப் பிழை திருத்தம் செய்து அவற்றை வெளியிட்டதில் அவர்கள் இருவரது பங்கும் அளப்பரியது. அதில் ஒரு தூண் இன்று சரிந்துவிட்டது என்பது கழகத்திற்கு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பு. பாசத்துடன் பழகிய ஜெயக்குமார் அவர்களது திருமணத்தை நடத்தி வைத்தேன்; அவரது குழந்தைகளுக்குப் பெயரிட்டேன்; அவரது குடும்பத்தினரின் திருமணங்களை நடத்தி வைத்தேன்; அவரது குடும்பத்தில் ஒருவனாய் இருந்தேன். உடன்பிறப்பு என்ற சொல்லுக்கேற்ப உடன்பிறப்பாய் துணை நின்ற அறிவாலயம் ஜெயக்குமார் அவர்களை வழியனுப்பும் துயர நிலைக்கு இன்று ஆளாகிவிட்ட கொடுமையும் வந்து சேர்ந்துவிட்டது. கலங்கி நிற்கும் உங்கள் அனைவருக்கும் ஆறுதல் சொலித் தேற்ற வேண்டிய நிலையில் இருக்கிறேன்.

அறிவாலயம் ஜெயக்குமார் அவர்களது மறைவுக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்வதோடு, அவரது பிரிவால் வாடும் குடும்பத்தினர், கழக உடன்பிறப்புகள் என அனைவருக்கும் ஆறுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தமது இரங்கல்செய்தியில்கூறியுள்ளார்.

# பேரவையில் இரங்கல் தீர்மானம்... முதல் பக்கத் தொடர்ச்சி

எஸ். இராசசேகரன் அவர்கள் 2006–2011 ஆம் ஆண்டுகளில் ஆலங்குடி தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டு, சிறப்புற பணியாற்றினார்கள்.

இம்முன்னாள் உறுப்பினர்களது மறைவால் அவர்களைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மறைந்த இப்பெருந்தகைகளுக்கு மரியாதை செலுத்தும் வகையில் உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று

இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)

2. இரங்கல் தீர்மானங்கள்

**எஸ். வெங்கிடரமணன்**

இந்திய ரிசர்வ் வங்கியின் முன்னாள் ஆளுநர் திரு. எஸ். வெங்கிடரமணன் அவர்கள் 18.11.2023 அன்று மறைவுற்ற செய்தியறிந்து இப்பேரவை அதிர்ச்சியும் ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது.

எஸ். வெங்கிடரமணன் அவர்கள் இந்திய ரிசர்வ் வங்கியின் ஆளுநராகவும், 1985–1989 ஆம் ஆண்டுகளில் ஒன்றிய அரசின் நிதித் துறைச் செயலாளராகவும் திறம்படப் பணியாற்றியவர்.

அன்னாரது மறைவால் அவரை இழந்து வாடும் அவர்தம் குடும்பத்தினர் உள்ளிட்ட அனைவருக்கும் இப்பேரவை தனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தினையும் தெரிவித்துக்கொள்கிறது.

**மருத்துவர் எஸ்.எஸ். பத்ரிநாத்**

புகழ்பெற்ற கண் மருத்துவரும், சங்கர நேத்ராலயா மருத்துவமனை நிறுவனருமான மருத்துவர் எஸ்.எஸ். பத்ரிநாத் அவர்கள் 21.11.2023 அன்று மறைவுற்ற செய்தியறிந்து இப்பேரவை அதிர்ச்சியும், ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது.

குறைந்த செலவில் கண் சிகிச்சை அளிக்க வேண்டும் என்ற உயரிய நோக்கில் சங்கர நேத்ராலயா மருத்துவமனையை தொடங்கிய மருத்துவர் எஸ்.எஸ். பத்ரிநாத், அவர்கள் பல்லாயிரக்கணக்கான மக்கள் கண் சிகிச்சை பெற வித்திட்டவர். இத்தகைய மகத்தான சேவைக்காக பத்ம ஸ்ரீ மற்றும் பத்ம பூஷன் போன்ற உயரிய விருதுகள் பெற்ற பெருமைக்குரியவர்.

அன்னாரது மறைவால் அவரை இழந்து வாடும் அவர்தம் குடும்பத்தினர் உள்ளிட்ட அனைவருக்கும் இப்பேரவை தனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தினையும் தெரிவித்துக்கொள்கிறது.

**செல்வி எம். பாத்திமா பீவி (தமிழ்நாடு முன்னாள் ஆளுநர்)**

தமிழ்நாடு முன்னாள் ஆளுநரும், உச்சநீதிமன்ற ஓய்வுபெற்ற நீதிபதியுமான செல்வி எம். பாத்திமா பீவி அவர்கள் 23.11.2023 அன்று மறைவுற்ற செய்தியறிந்து இப்பேரவை அதிர்ச்சியும் ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது.

1997–2001 ஆம் ஆண்டுகளில் தமிழ்நாடு ஆளுநராக பணியாற்றிய செல்வி எம். பாத்திமா பீவி அவர்கள் உச்சநீதிமன்ற முதல் பெண் நீதிபதி என்ற பெருமைக்குரியவர். தேசிய மனித உரிமைகள் ஆணைய உறுப்பினர், கேரள பிற்படுத்தப்பட்டோர் ஆணையத் தலைவர் உள்ளிட்ட உயர் பொறுப்பு வகித்த செல்வி எம். பாத்திமா பீவி அவர்கள் இந்த ஆண்டிற்கான பத்ம பூஷன் விருதுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள பெருமைக்குரியவர்.

அன்னாரது மறைவால் அவரை இழந்து வாடும் அவர்தம் குடும்பத்தினர் உள்ளிட்ட அனைவருக்கும் இப்பேரவை தனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தினையும் தெரிவித்துக்கொள்கிறது.

**எம்.எம். இராஜேந்திரன்**

தமிழ்நாடு அரசின் முன்னாள் தலைமைச் செயலாளரும், ஒடிசா மாநில முன்னாள் ஆளுநருமான எம்.எம்.இராஜேந்திரன் அவர்கள் 23.12.2023 அன்று மறைவுற்ற செய்தியறிந்து இப்பேரவை அதிர்ச்சியும் ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது.

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவராக பணியாற்றியபோது 1964 ஆம் ஆண்டு தனுஷ்கோடியில் ஏற்பட்ட இயற்கைச் சீற்ற மீட்புப் பணிகளை திறம்பட செயல்படுத்தியவர். 1988–1991ஆம் ஆண்டுகளில் தமிழக அரசின் தலைமைச் செயலாளராகவும், 1999–2004 ஆம் ஆண்டுகளில் ஒடிசா மாநில ஆளுநராகவும் திறம்பட பணியாற்றியவர்.

அன்னாரது மறைவால் அவரை இழந்து வாடும் அவர்தம் குடும்பத்தினர் உள்ளிட்ட அனைவருக்கும் இப்பேரவை தனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தினையும் தெரிவித்துக்கொள்கிறது.

**விஜயகாந்த்**

தேசிய முற்போக்குத் திராவிடக் கழகத்தின் தலைவரும், பிரபல நடிகரும், முன்னாள் எதிர்க்கட்சித் தலைவருமான விஜயகாந்த் அவர்கள் 28.12.2023 அன்று மறைவுற்ற செய்தியறிந்து இப்பேரவை அதிர்ச்சியும் ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது'.

நூற்றுக்கும் மேற்பட்ட திரைப்படங்களில் நடித்து, தென்னிந்திய திரைப்பட நடிகர்கள் சங்கத்தின் தலைவராகப் பொறுப்பேற்று, பொது வாழ்விலும் தம்மை ஈடுபடுத்திக் கொண்டு 'கேப்டன்' என அனைவராலும் அன்போடு அழைக்கப்பெற்ற விஜயகாந்த் அவர்கள் இந்த ஆண்டின் பத்ம பூஷன் விருதுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள பெருமைக்குரியவர்.

2006–2011 ஆம் ஆண்டுகளில் விருத்தாச்சலம் தொகுதியிலிருந்தும், 2011–2016 ஆம் ஆண்டுகளில் ரிஷிவந்தியம் தொகுதியிலிருந்தும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டு, 2011–2016ஆம் ஆண்டுகளில் எதிர்க்கட்சித் தலைவராகவும் திறம்பட பணியாற்றியவர்.

அன்னாரது மறைவால் அவரை இழந்து வாடும் அவர்தம் குடும்பத்தினருக்கும், திரைத் துறையினருக்கும், தேசிய முற்போக்குத் திராவிடக் கழகத்தைச் சார்ந்தவர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் இப்பேரவை தனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தினையும் தெரிவித்துக்கொள்கிறது.

இந்த இரங்கல் தீர்மானங்களை நிறைவேற்றும் முகத்தானும், மறைந்த இப்பெருந்தகைகளுக்கு மரியாதை செலுத்தும் வகையிலும் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்ததன்மூலம் தீர்மானங்கள் நிறைவேற்றப்பெற்றன.)

## வருகிற நாடாளுமன்றத் தேர்தலில்

# தி.மு.க. கூட்டணி அமோக வெற்றி பெறுவது உறுதி!

## அமைச்சர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான் பேச்சு!

திண்டிவனம், பிப்14-

எதிர்வரும் பாராளுமன்ற தேர்தலில் திமுக கூட்டணி அமோக வெற்றி பெறுவதுடன் எதிர்த்து நிற்கின்ற வேட்பாளர்கள் டெபாசிட் இழப்பது உறுதி என்றும் டெபாசிட் இழக்கின்ற பட்டியலில் பிரதமர் மோடியும் ஒருவர் என அமைச்சர் செஞ்சி மஸ்தான் மயிலம் தெற்கு ஒன்றிய திமுக சார்பில் நடைபெற்ற செயல் வீரர்கள் கூட்டத்தில் உறுதிபட தெரிவித்தார்.

விழுப்புரம் வடக்கு மாவட்டம், மயிலம் தெற்கு ஒன்றிய தி.மு.க. செயல் வீரர்கள் கூட்டம் மயிலத்தில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு ஒன்றிய அவைத் தலைவர் சுப்பிரமணி தலைமை தாங்கினார். ஒன்றிய நிர்வாகிகள் பாலசுந்தரம், இந்திரா சுரேஷ், ஆறுமுகம் ,விஜயன் ,சசிகுமார், கோபாலகிருஷ்ணன், மனோன்மணி முருகன், ஆகியோர் முன்னிலை வகித்தனர்.மயிலம் தெற்கு ஒன்றிய செயலாளரும், மாநிலத் தீர்மானக் குழு உறுப்பினருமான வழக்கறிஞர் சேதுநாதன்அனைவரையும் வரவேற்றார்.

கூட்டத்தில் மாவட்ட கழக செயலாளர், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சருமான செஞ்சி கே.எஸ். மஸ்தான் சிறப்பு விருந்தினராக கலந்து



கொண்டு சிறப்புரையாற்றினார்.

அப்போதுஅமைச்சர் செஞ்சி மஸ்தான் பேசுகையில்:

பிரதமர் நரேந்திர மோடி பேசுகிறார் உலகத்திலேயே இந்தியாவை முதல் இடமாக இந்தியாவை உருவாக்க போகிறேன் என்று. டில்லியிலே மக்கள் மாத்திவிட்டார்கள். அவருடைய லட்சணம் முகமூடியை கிழிக்கிறார்கள். மாநகராட்சி தேர்தலில் டெல்லியிலே பி.ஜே.பி. வர முடியவில்லை. காங்கிரஸும், ஆம் ஆத்மி கட்சியும் அங்கு போட்டியிட்டு மாபெரும் வெற்றி பெற்ற காரணத்தினால்பிரதமர் மோடி அவர்கள் ஒரு பிரதமராக இருந்து கொண்டு மாநகராட்சியில் ஜனநாயக ரீதியாக தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் அந்த மேயரை தேர்ந்தெடுக்கக் கூடிய தேர்தலில் உங்களுடைய கட்சிக்கு ஆதரவு இல்லை என்பதற்காக அந்தத் தேர்தலை ஒத்தி வைத்தீர்களே அது தான் ஜனநாயகமா? முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் இந்தியாவில் உள்ள அனைத்து கட்சிகளையும் ஒன்று சேர்த்து விட்டார் என்பதற்காக பிரதமர்மோடிக்கு ஜுரம் வந்துவிட்டது.

விரைவில் பிரதமர் மோடியின் நாட்கள் எண்ணப்படுகிறது வருகின்ற நாடாளுமன்றத் தேர்தலில் இந்தியா கூட்டணிக்குவாக்காளர்கள் மாபெரும் ஆதரவு தர இருக்கிறார்கள்.

தி.மு.க. கூட்டணி அமோக வெற்றி பெறுவதுடன் எதிர்த்து நிற்கின்ற வேட்பாளர்கள் டெபாசிட் இழப்பது உறுதி என்றும் டெபாசிட் இழக்கின்ற பட்டியலில் பிரதமர் மோடியும் ஒருவர் என அமைச்சர் செஞ்சி மஸ்தான் உறுதிபட தெரிவித்தார்.

தொடர்ந்து செய்தியாளர்கள் சந்திப்பில் அ.ம.மு.க பொதுச் செயலாளர் இந்தியா கூட்டணியில் தேர்தல் நேரத்தில் கடைசியாக ஸ்டாலின் மட்டுமே இருப்பார் என்ற பேச்சுக்கு பதிலடி கொடுக்கும் வகையில், இந்தியா கூட்டணியில் ஸ்டாலின் மட்டும் தான் இருப்பதாக டிடிவி தினகரன் அறிவு சிந்தனையில் அவரே சொல்கிறார். இந்தியா கூட்டணிக்கு ஸ்டாலின்தான் தலைமை ஏற்கப் போகிறார் என்பதை அவர் சொல்லியிருக்கிறார்.

ஜனநாயகத்தை யார் இழிவு படுத்தினாலும், ஜனநாயகத்தை யார் படுகொலை செய்தாலும், இந்திய மக்கள் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள், இதற்கு முத்தமிழ் அறிஞர் கலைஞர் இருந்த காலகட்டத்தில் ஜனநாயகத்தை படுகொலை செய்த காரணத்தினால் எமர்ஜென்சியை கொண்டு வந்த காரணத்தினால் இந்தியாவில் வல்லமை படைத்த இந்திரா காந்தி அவர்களும், சஞ்சய் காந்தி அவர்களும் படு தோல்வியை அடைந்தார்கள். அப்பொழுது கலைஞர் அவர்கள் தலைமையில் இருந்த கூட்டணி தான் இந்தியாவை ஆளத் தொடங்கியது. அதே நிலை தான் இன்றைக்கு மோடிக்கும் வரும் என்பதை அந்த நம்பிக்கையோடு கூறிக் கொள்ள கடமைப்பட்டுள்ளேன்.

கூட்டத்தில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் மாசிலாமணி, சீத்தாபதி சொக்கலிங்கம், மாவட்ட அவைத்தலைவர் டாக்டர் சேகர், ஒன்றிய செயலாளர்கள் மணிமாறன், செழியன், மாவட்ட துணை செயலாளர் அருணகிரி, பொதுக்குழு உறுப்பினர் ரவி, ஒன்றிய துணை சேர்மன் புனித ராமஜெயம், மாவட்ட கவுன்சிலர் மகேஸ்வரி குமரேசன், மாவட்ட அணி அமைப்பாளர்கள் அன்சாரி, ரகுபதி, செந்தில்குமார், சுப்பிரமணியன், உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர் ஒன்றிய துணை செயலாளர் செல்வகுமார் நன்றி கூறினார்.



விழுப்புரம் மாவட்டம் வளத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மேல்மலையனூர் தாலுகாவிற்கு உட்பட்ட 512 பயனாளிகளுக்கு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் இலவச வீட்டு மனை பட்டாக்களை வழங்கினார். உடன் விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் பழனி, ஒன்றிய பெருந்தலைவர் கண்மணி நெடுஞ்செழியன் உள்ளனர்.

## சென்னை - சென்னை புறநகர் பகுதிகளில் வாழும்

# 2 லட்சம் குடும்பங்களின் நீண்டநாள் பட்டா பிரச்சினைக்கு விரைந்து தீர்வு காண்பீர்!

## அமைச்சர்கள், அதிகாரிகள் ஆலோசனைக் கூட்டத்தில் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அறிவுறுத்தல்!

**சென்னை, பிப்.14 -**

**பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் சென்னை புறநகர் பகுதிகளில் உள்ள வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்குவது தொடர்பான ஆலோசனைக் கூட்டம் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (12.02.2024) நடைபெற்றது.**

பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் சென்னை புறநகர் பகுதிகளில் உள்ள வீட்டுமனை களுக்கு பட்டாக்கள் வழங்குவது குறித்து விவாதிப்பதற்காக முதலமைச்சர் அவர் களின் அறிவுறுத்தலின்படி இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை - சிறப்புத் திட்ட செயலாக்கத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் 12.02.2024 அன்று தலைமைச் செயலகத்தில் உயர்நிலை ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

வருவாய் மற்றும் பிற துறைகளில் உள்ள நிலங்களை நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத் திட்டங்கள் நடைபெறும் இடங்களில், நிலஉரிமை மாற்றம் செய்வது குறித்தும், பயனாளிகளுக்கு விற்பனைப் பத்திரம் வழங்குவது, பட்டாக்கள் வழங்குவது மற்றும் சென்னை மாநகராட்சி மற்றும் சென்னை புறநகர் பகுதிகளில் உள்ள பட்டா வழங்குவதில் உள்ள நடைமுறை சிக்கல்கள் குறித்தும் விரிவாக விவாதிக்கப்பட்டது.



சென்னை தலைமைச் செயலகத்தில் நேற்று முன்தினம் (12.02.2024) இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் சென்னை புறநகர் பகுதிகளில் வீட்டு மனைப் பட்டா வழங்குவது குறித்து சம்பந்தப்பட்ட அலுவலர்களுடன் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் சு. முத்துசாமி, குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள், அரசு செயலாளர்கள், உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### ஆக்கப்பூர்வமான கருத்துகள்!

மேலும், சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் உள்ள சட்டமன்ற உறுப்பினர்கள் அவர்கள் தொகுதிகளில் உள்ள நில உரிமை மற்றும் வாழ்விட உரிமை தொடர்பான பிரச்சனைகளை குறித்து எடுத்துரைத்தனர். இது குறித்து அமைச்சர் பெருமக்கள் தங்களது ஆக்கபூர்வமான கருத்துகளை எடுத்துரைத்தனர்.

இதில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-

“சென்னை எனும் பழமையான நகரம், நமது பெருமைகளில் ஒன்றாக உள்ளது. உலகின் மிகச் சிறந்த நகரமாகவும் உள்ளது என்பதை நாம் அனைவரும் அறிவோம். ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்திலிருந்து படிப்படியாக வளர்ந்து இன்று கிட்டத்தட்ட ஒரு கோடி மக்களுக்குமேல் வாழக்கூடிய ஒரு மிகப்பெரிய மாநகரமாக நம் சென்னை மாநகரம் திகழ்ந்து கொண்டிருக்கிறது.

இதே வளாகத்தில் உள்ள செயின்ட் ஜார்ஜ் கோட்டை ஆங்கிலேயர்களால் கட்டப்பட்ட முதல் கோட்டை. இந்தக் கோட்டைதான், இப்போது நம் தலைமைச் செயலகமாக இயங்கி வருகின்றது. இங்கு அனைத்துத் துறைகளும் இயங்குவதற்குப் போதுமான இடம் இல்லாததால்தான், நாம் தற்போது இந்தக் கூட்டத்தைக்கூட நடத்திக் கொண்டிருக்கக் கூடிய `நாமக்கல் கவிஞர் மாளிகை’ முத்தமிழறிஞர் கலைஞரின் ஆட்சியில் கூடுதலாகக் கட்டப்பட்ட இடம்.

### நீதிக்கட்சி காலத்தில் திட்டங்கள்!

இப்படி ஒவ்வொரு காலகட்டத்திலும் சென்னை நகரம் தேவைக்கேற்ப புதிய குடியிருப்புகளாலும் கட்டுமானங்களாலும் விரிவடைந்து வந்துகொண்டிருக்கிறது. மக்களுக்கு நில உரிமை தரப்பட வேண்டும். அவர்களுக்கு என்று சொந்த வீடு இருப்பதை உறுதி செய்யவேண்டும் என்றுதான் நீதிக் கட்சிக் காலத்திலேயே பல திட்டங்கள் தீட்டப்பட்டன. இன்றைய தியாகராயர் நகர் என்பது நீதிக் கட்சிக் காலத்தில் உருவாக்கப்பட்ட பகுதி. அது தான் குடியிருப்புக்காக வடிவமைக்கப்பட்ட, சென்னையின் முதல் லேஅவுட் என்றுகூட சொல்லலாம்.

அனைத்தையும் சமூக நீதி கண்கொண்டு பார்த்து ஆட்சி செய்த கலைஞர் அவர்கள் ஏழை, எளிய, ஒடுக்கப்பட்ட, பிற்படுத்தப் பட்ட மக்களுக்காகக் கொண்டு வந்ததுதான் குடிசை மாற்று வாரியக் குடியிருப்புகள்.

`சென்னை மக்கள் எவரும் குடிசையில் இருக்கக்கூடாது, அவர்களுக்கென்று சொந்தமாக ஒரு நிரந்தர வீடு இருக்க வேண்டும்’ என்று கலைஞரின் முற்போக்குச் சிந்தனையால் `குடிசை மாற்று வாரியம்’ மூலம் சென்னை நகரம் முழுவதும் பல குடியிருப்புகள் கட்டப்பட்டு மக்கள் அங்கே குடியேற்றப்பட்டனர்.

`குடிசைகள் இல்லாத மாநகரம்’ என்ற லட்சியத்துடன் குடிசை மாற்று வாரியக் குடியிருப்புகளை அமைத்த கலைஞர் அவர்கள், குடிசைகள் இல்லாத கிராமங்களை அமைக்க கலைஞர் வீடு வழங்கும் திட்டத்தையும் தொடங்கினார். இப்படி மக்களின் வாழ்விட உரிமையை உறுதிசெய்ய கலைஞர் அவர்கள் தன்னுடைய ஆட்சிக் காலம் முழுவதும் பல்வேறு திட்டங்களைத் தொடர்ந்து செயல்படுத்தி வந்தார்.

### முதல்வரின் தொலைநோக்குப் பார்வை!

பெரியார், அண்ணா, கலைஞர் அவர்களின் மொத்த உருவமாக இருக்கக்கூடிய நம்முடைய முதலமைச்சர் அவர்கள் மக்களின் வசிப்பிடம் தொடர்பான பிரச்சினைகளைத் தொலைநோக்குப் பார்வையுடன் பல திட்டங்களையும் தீட்டி வருகின்றார்கள்.

குடிசை மாற்று வாரியக் குடியிருப்பு என்பதை நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் எனப் பெயர் மாற்றி, மக்களுக்கு மேம்பட்ட வாழ்விடத்தை அமைத்துத் தர தொடர்ந்து புதிய திட்டங்களை அமைத்து வருகின்றார்.

நம்முடைய அரசு அமைந்த பிறகு, ஏற்கெனவே வீடு கட்டிக் குடியிருக்கும் பிற்படு த்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்களுக்கு 2 லட்சம் ‘இபட்டா’க்களை நாம் வழங்கி இருக்கின்றோம். இவை தவிர, 60 ஆயிரத்துக்கும் மேற்பட்ட விளிம்பு நிலை மக்களின் குடும்பங்க ளுக்கு, காலி மனைப் பட்டா வழங்கியுள்ளது நம்முடைய திராவிட மாடல் அரசு.

நத்தம் நிலப் பட்டாக்கள் கணினியில் ஏறாமல் இருந்தன. 300 வருவாய் வட்டங்களில் இந்த நத்தம் பட்டா இருக்கின்றது. கிட்டத்தட்ட ஒரு கோடியே 40 லட்சம் பட்டாக்கள். இவற்றில் 121 வருவாய் வட்டங்களின் இணைய வழியில் பட்டா மாறுதலை நாம் செய்து முடித்துள்ளோம். மீதியுள்ள வருவாய் வட்டங்களில் உள்ள நத்தம் பட்டாக்களும் இந்த ஆண்டு இறுதிக்குள் இணையத்தில் ஏற்றி முடிக்கப் படும். இப்படி நம்முடைய கழக அரசு மக்களுடைய வாழ்விட உரிமையை உறுதி செய்யத் தொடர்ந்து நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது.

ஆனால் தொடர்ந்து வேகமாக நடைபெறும் குடியேற்றங்கள், நாம் முன்னெடுக்கும் திட்டங்களை அடுத்தடுத்து வருகின்ற அரசு, முறையாக எடுத்துச் செல்லாததால் சென்னையில் சில இடங்களில் பட்டா வாங்கும் நடைமுறையில் சில குழப்பங்கள் நிலவுகின்றன.

வீட்டு வசதி வாரியத்திலிருந்து விற்பனைப் பத்திரம் பெற்றும் சிலருக்கு நில உரிமை மாறாமல், அரசின் பெயரிலேயே அந்த நிலம் இருப்பதாக, பட்டாவில் காட்டுகின்றது என்று பரவலாக ஒரு புகார் வந்து கொண்டிருக்கிறது.

ஆலந்தூர், மதுரவாயல், சோழிங்கநல்லூர், மாதவரம் எனப் புறநகரங் கள் சென்னையுடன் இணைக்கப்பட்ட இந்தப் பகுதிகளுக்கு ‘டவுன் செட்டில்மென்ட்’ எனப்படும் நகர நில அளவுத் திட்டம் நடந்து கொண்டுள்ளது.

இதில் மூன்று லட்சத்து 20 ஆயிரம் பட்டாக்கள் வழங்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால், இதுவரை ஒரு லட்சத்து 80 ஆயிரம்தான் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது. மீதமுள்ள பட்டாக்கள் விரைவில் கொடுக்கப் பட வேண்டும் என்பதுதான் நம்முடைய அரசினுடைய நோக்கம்.

எதிர்க்கட்சியாக இருந்தாலும் சரி, ஆளும் கட்சியாக இருந்தாலும் சரி, திராவிட முன்னேற்றக் கழக அரசு மக்களின் வாழ்விட உரிமையை உறுதி செய்திட வேண்டும் என்பதில் மிகுந்த முனைப்பு டன் செயல்பட்டு வருகிறது என்பதைப் பதிவு செய்ய விரும்புகின் றேன்.

### மக்கள் பிரதிநிதிகள் - அரசு அதிகாரிகள் ஆலோசனை!

இது போன்ற பட்டா பிரச்சினையால், சென்னை மற்றும் சென்னையின் புறநகர்ப் பகுதிகளில் சுமார் 2 இலட்சம் குடும்பங்கள் நிரந்தரத் தீர்வு கிடைக்காமல் அவதிப்பட்டு வருகின்றார்கள். இது வருவாய்த்துறை, வீட்டுவசதித் துறை, நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம், மாநகராட்சி, பொதுப் பணித் துறை, கால்நடைத் துறை எனப் பல துறைகள் தொடர்புடையதாக இருப்பதால், இதை ஒரு சிறப்புத் திட்டமாகக் கருதி சம்பந்தப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் அரசு அதிகாரியுடன் கலந்து ஆலோசனை செய்து அறிக்கையாகத் தயார் செய்து தரும்படி முதலமைச்சர் அவர்கள் நம்மிடத்தில் அறிவுறுத்தினார்கள். அதன் பிறகுதான் இந்தக் கூட்டம் இன்றைக்கு இவ்வளவு சிறப்பாக நடந்து முடிந்திருக்கின் றது.

ஏற்கெனவே சென்னையில் உள்ள அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களும் உங்களின் தொகுதி சார்ந்த, பட்டா சார்ந்த கோரிக்கைகளை இங்கே தெரிவித்திருக்கிறீர்கள். இவை அனைத்தும் அறிக்கையாகத் தயாரிக்கப்பட்டு முதலமைச்சர் அவர்களின் கவனத்துக்கு எடுத்துச் செல்லப்படும் என்று கூறிக்கொள்கிறேன்.

ஆலோசனைக் கூட்டம் நிச்சயம் 2 லட்சம் குடும்பங்களின் நீண்ட நாள் பிரச்சினைக்குத் தீர்வுகாண வைக்கப்படும் தொடக்கப் புள்ளியாக இருக்கும் என்ற நம்பிக்கை எங்கள் அனைவருக்கும் இருக்கிறது. முதலமைச்சர் அவர்களின் அறிவுரையைப் பெற்று இந்த 2 லட்சம் குடும்பங்களுக்கும் நில உரிமையும், வாழ்விட உரிமையும் உறுதி செய்யும் வகையில் சிறப்புத் திட்ட செயலாக்கத்துறை தொடர்ந்து செயல்படும் என்ற உறுதியை அளித்து,

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தில் நிலம் கையகப்படுத்துதல் தொடர்பாக உள்ள 4 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கோரிக்கைகள் மீது நடவடிக்கை எடுக்க, நில நிர்வாக ஆணையர் (சி.எல்.ஏ) தலைமையில் ஒரு கமிட்டி சென்ற அக்டோபர் மாதத்தில் அமைக்கப்பட்டது. இந்த கமிட்டி சிறப்புக் கவனம் செலுத்தி இந்தக் கோரிக்கைகள் மீது விரைந்து நடவடிக்கைகள் எடுக்க, வீட்டு வசதித்துறைச் செயலாளர் மற்றும் சி.எல்.ஏ அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

பட்டா தொடர்பாக மக்களுடைய கோரிக்கையின் மீது நடவடிக்கை எடுக்கச் சிறப்புத் திட்ட செயலாக்கத்துறை செயலாளர் கேட்கும் தகவல்களை காலம் தாழ்த்தாமல் வழங்க வேண்டும் என்றும் நான் கேட்டுக் கொள்கிறேன். மேலும், நம் சிறப்புத் திட்ட செயலாக்கத் துறையின் செயலாளர் அவர்கள் இந்தப் பணி முன்னேற்றம் குறித்து, வாரம் ஒரு முறை ஆய்வு செய்து எனக்கு அறிக்கை வழங்கும் படியும் கேட்டுக் கொள்கிறேன்.


இந்த ஆலோசனைக் கூட்டத்தில் கலந்து கொண்ட அமைச்சர் பெருமக்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், அரசு அதிகாரிகள் அனைவருக்கும் மீண்டும் என்னுடைய நன்றியைக் கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

இக்கூட்டத்தில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை அமைச்சர் எஸ்.முத்துசாமி, குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் உள்ள சட்டமன்ற உறுப்பினர்கள், அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்கள், அரசு முதன்மைச் செயலாளர்கள், அரசு செயலாளர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



புதுக்கோட்டை நகர தி.மு.க. சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா மற்றும் கழக இளைஞரணி செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பிறந்த நாள் விழாவை முன்னிட்டு புதுக்கோட்டை திலகர் திடலில் வடக்கு மாவட்டச் செயலாளர் வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன் தலைமையிலும், புதுக்கோட்டை நகர தி.மு.க. செயலாளர் ஆ.செந்தில் வரவேற்புரையிலும் நடைபெற்ற மாபெரும் பொதுக்கூட்டத்தில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி சிறப்புரையாற்றினார். இந்நிகழ்வுகளில் தலைமைக் கழக வழக்கறிஞர் சூர்யா வெற்றிகொண்டான், கவிச்சுடர் கவிதைப்பித்தன், த.சந்திரசேகரன், அரு.வீரமணி, எம். லியாகத் அலி, கே.ஆர்.என்.போஸ், சு.சண்முகம், எம்.எஸ்.அசோக் பாண்டியன், கீரை.தமிழ் ராஜா, க.மதியழகன், பெ ராஜேஸ்வரி, எஸ்.எஸ்.கருப்பையா, தவ . பாஞ்சாலன், ஜெயலெட்சுமி தமிழ்ச்செல்வன், மு.க.ராமகிருஷ்ணன், என்.சாத்தையா, எம்.எம்.பாலு, என்.சேட்டு, எம்.பரமசிவம், மு.பி.ம.சத்தியசீலன், ஆர்.ஆர்.எஸ்.மாரிமுத்து, ஓ.எஸ்.வெங்கடாச்சலம், வெ.முத்துகிருஷ்ணன். சி.சண்முகம், ஆர்.சாமிநாதன், எம்.எம்.பாலு, அ.ரெத்தினம் மற்றும் மாவட்ட, ஒன்றிய , நகர,பேரூர், வட்ட, கிளைக் கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் பங்கேற்றனர்.



ஈரோடு அந்தியூர் பெரிய ஏரியில் சுற்றுலா துறை மற்றும் சுற்றுலா வளர்ச்சி கழகம் சார்பில் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் படகு குழாம் அமைக்கும் பணியினை வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, மதுவிலக்கு ஆயத்தீர்வை துறை அமைச்சர் சு.முத்துசாமி துவக்கி வைத்தார். நிகழ்வில் ஈரோடு வடக்கு மாவட்டக கழகச் செயலாளர் என்.நல்லசிவம், அந்தியூர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஜி.வெங்கடாசலம், மகளிர் ஆணைய உறுப்பினர் கீதா நடராஜன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (13.2.2024) தலைமைச் செயலகத்தில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சந்தித்து, மும்பையில் நடைபெற்ற “SPORTSTAR ACES – 2024” விருது வழங்கும் விழாவில், விளையாட்டை ஊக்குவிப்பதில் சிறந்த மாநிலம் (Best State for Promotion of Sports) என்ற பிரிவில் தமிழ்நாடு தேர்வு செய்யப்பட்டு வழங்கப்பட்ட விருதினை காண்பித்து வாழ்த்துப் பெற்றார். இந்நிகழ்வின்போது, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (13.2.2024) தலைமைச் செயலகத்தில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சந்தித்து, இந்திய தொழிற்கூட்டமைப்பின் சார்பில் 2023ஆம் ஆண்டிற்கான ‘விளையாட்டை ஊக்குவிக்கும் சிறந்த மாநிலம்’ பிரிவின் கீழ் தமிழ்நாட்டிற்கு வழங்கப்பட்ட விருதினை காண்பித்து வாழ்த்துப் பெற்றார். இந்நிகழ்வின்போது, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

### மின்வாரியத்தில் ஓய்வு பெற்ற

# 2 லட்சம் பணியாளர்கள் வாழ்வில் விடியலை ஏற்படுத்திய முதல்வருக்கு நன்றி!

## மின்கழக தொ.மு.ச.பொதுச் செயலாளர் பா.மணிமாறன் அறிக்கை!

சென்னை, பிப்.14-

மின்வாரியத்தில் 2 லட்சம் பணியாளர்கள் வாழ்வில் விடியலை ஏற்படுத்தி முத்தரப்பு ஒப்பந்தம் வழங்கிய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து மின்கழகத் தொ.மு.ச. பொதுச்செயலாளர் பா.மணிமாறன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தமிழ்நாடு மின்வாரி யத்தில் பணிபுரியும் 2 லட்சம் தொழிலாளர்கள், பொறியாளர்கள், அலுவலர்கள் மற்றும் ஓய்வூதியதாரார்களின் நலன் பாதுகாக்கும் முத்தரப்பு ஒப்பந்ததை 14 ஆண்டு காலமாக ஏற்படுத்தாமல் இருந்து வந்தது. தமிழ்நாடு முதலமைச்சர் ஆணைக்கிணங்க மின் துறை அமைச்சர் ஒப்புதலுடன் 12.02.2024 அன்று தமிழ்நாடு அரசு, தமிழ்நாடு மின்சார வாரியம் மற்றும் மின்வாரிய தொழிற்சங்கங்களுடன், முத்தரப்பு ஒப்பந்தம் மின்வாரியத் தலைமை அலுவலகத்தில் கையெழுத்தானது.

**மின்சார சட்டம் 2003**

ஒன்றிய அரசின் மின்சார சட்டம் 2003ன்படி, தமிழ்நாடு மின்சார வாரியம், (1) தமிழ்நாடு மின்வாரிய நிறுவனம் 2) தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் மற்றும் 3) தமிழ்நாடு மின்தொடரமைப்புக்கழகம் என மூன்றாக பிரிக்கப்பட்டது.

**அரசாணை எண் 100 நாள்: 19.10.2010**

ஒன்றிய அரசின் மின்சார சட்டத்தினால், மின்சாரவாரியத்தில் பணிபுரிகின்ற 85 ஆயிரம் தொழிலாளர்கள், பொறியாளர்கள் மற்றும் அலுவலர்கள் மற்றும் பணிபுரிந்து ஓய்வு பெற்று ஓய்வூதியம் பெறும் 1.15 இலட்சம் ஓய்வூதியதாரார்களின் எதிர்காலத்தை நினைத்து, கவலை அடைந்து மன உளைச்சலுக்கு ஆளாகியிருந்த வேலையில், தமிழ்நாடு முதலமைச்சராக 5வது முறையாக அரியணையில் அமர்ந்த முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள், அரசாணை எண்.100, நாள்.19.10.2010 மூலம் மின்வாரியத்தில் பணிபுரிபவர்களின் பணி பாதுகாப்பு, சலுகைகள், சம்பளம் மற்றும் ஓய்வூதியம் பெறுவதை உறுதி செய்து முத்தரப்பு ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொள்ளலாம் என்று உத்தரவு வழங்கினார்கள்.

**தொழிலாளர்களின் விரோத அ.தி.மு.க. அரசு**

ஆட்சி மாற்றத்தின் மூலம் 2011 முதல் 2021 வரை தமிழ்நாட்டின் ஆட்சி புரிந்த தொழிலாளர் விரோத அதிமுக ஆட்சியில், முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் அரசாணை எண் 100 மூலம் முத்தரப்பு ஒப்பந்தம் ஏற்பட எந்த விதமான முயற்சியும் செய்யாமல் தொழிலாளர்கள், பொறியாளர்கள், அலுவலர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்களை வஞ்சித்தார்கள். மின்வாரிய தொழிற்சங்கங்கள் பலமுறை எதிர்த்து போராடியும் அதிமுக அரசு எந்தவித நடவடிக்கையும் எடுக்காமல் இருந்தார்கள்.

2011 முதல் 2021 வரை 10 ஆண்டுகளாக, மின்வாரியத்தில் பணிபுரிகிறவர்கள் எதிர்காலத்தை அச்சத்திலேயே வைத்திருந்தார்கள். மேலும், அவர்களை மிகுந்த மனஉளைச்சலுக்கு ஆளாக்கினார்கள்.

**நலன் பாதுகாக்கும் திராவிட மாடல் அரசு!**

தொழிலாளர் விரோத அதிமுக ஆட்சியை, தமிழ்நாட்டு மக்கள் வீட்டுக்கு



அனுப்பி, தொழிலாளர்கள் நலன் பாதுகாக்கும் திராவிட மாடல் அரசின் தமிழ்நாடு முதலமைச்சர் அன்புத் தளபதி அவர்கள் 07.05.2021 அன்று பொறுப்பு ஏற்றவுடன், மின்வாரியத்தில் தொழிலாளர்கள், பொறியாளர்கள், அலுவலர்கள் மற்றும் ஓய்வூதியம்

பெறுபவர்களை அதிமுக அரசு வஞ்சித்து பறித்த, சலுகைகளை, மீண்டும் கிடைக்கும் என்று எதிர்பார்த்திருந்தார்கள். அவர்களின் எதிர்பார்ப்பை பூர்த்தி செய்வது போல, தமிழ்நாடு முதலமைச்சர் அன்புத் தளபதி அவர்கள், மின்வாரியத்தில் பணிபுரிபவர்கள் மற்றும் ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு உடனுக்குடன் அகவிலைப்படி, கருணைத் தொகையுடன் போனஸ், வரலாறு காணாத ஊதிய உயர்வு நிலுவைத்தொகையுடன், உள்ளிட்ட பல சலுகைகளை அனைவரும் மனம் மகிழும் வண்ணம் மீண்டும் வழங்கினார்கள். அதே போல பணிபாதுகாப்பை உறுதிச்செய்யும் முத்தரப்பு ஒப்பந்தை ஏற்படுத்திட ஒப்புதல் வழங்கினார்கள்.

**முத்தரப்பு ஒப்பந்தம் :**

முத்தரப்பு ஒப்பந்தம் ஏற்படுத்துவதற்கு, மின்சார வாரியம் அழைப்பை ஏற்று 12.02.2024 அன்று, மின்வாரிய தலைமை அலுவலகத்தில் மின்வாரிய தொழிற்சங்கத்தினர் கையெழுத்திட்டனர்.

தமிழ்நாடு அரசு, தமிழ்நாடு மின்சார வாரியம் மற்றும் மின்வாரிய தொழிற்சங்கங்களுடன் ஏற்படுத்திய முத்தரப்பு ஒப்பந்தம் மூலம் பணி பாதுகாப்பு, ஊதிய உயர்வு, சலுகைகள், சம்பளம், ஓய்வூதியம் அனைத்திற்கும் உத்தரவாதம் வழங்கியுள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சர் அன்புத்தளபதி வழங்கிய முத்தரப்பு ஒப்பந்தம் மூலம் மின்வாரிய பணியாளர்களின் எதிர்கால அச்சத்தை போக்கி, அவர்களுக்கு மகிழ்ச்சி ஏற்படுத்தி 2 லட்சம் மின்வாரிய தொழிலாளர்கள், பொறியாளர்கள், அலுவலர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்கள் வாழ்வில் விடியலை ஏற்படுத்தியுள்ளது.

தமிழ்நாட்டு மக்களுக்கு வெளிச்சம் கொடுக்கும் மின்வாரிய பணியாளர்களின் வாழ்வில் வெளிச்சம் ஏற்படுத்திய தொழிலாளர்களின் வாழ்வாதாரம் உயர பாடுபடும், திராவிட மாடல் அரசின் தமிழ்நாடு முதலமைச்சர் அன்புத்தளபதி அவர்களுக்கு, மின்வாரிய அனைத்து தொழிற்சங்கங்களின் சார்பிலும், பணிபுரியும் தொழிலாளர்கள், பொறியாளர்கள், அலுவலர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்களின் சார்பாகவும் தமிழ்நாடு மின் கழகத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கம், எங்களின் வாழ்நாள் நன்றியினை தெரிவித்து கொள்வதோடு, அதற்கு உறுதுணையாக இருந்த மின்துறை அமைச்சர் அவர்களுக்கும், வாரியத் தலைவர் அவர்களுக்கும், அதிகாரிகளுக்கும் எங்களது நன்றியினை தெரிவித்துக்கொள்கிறோம்.

இவ்வாறு பா.மணிமாறன் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### இந்திய இராணுவத்தில்

# செயற்கை நுண்ணறிவுத் தொழில் நுட்பம் பயன்படுத்தப்படுகிறதா?

## மக்களவையில் தயாநிதி மாறன் கேள்வி!

புதுடெல்லி, பிப். 13 -

இந்திய இராணுவத்துடன் இணைந்து செயல்படும் ஒன்றிய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சகம், இந்திய இராணுவத்தில் செயற்கை நுண்ணறிவுத் (AI) தொழில்நுட்பத்தை பயன்படுத்துகிறதா என நாடாளுமன்றத்தில் மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன் கேள்வி எழுப்பினார். அதன் விவரங்கள் பின்வருமாறு:

தொழில்நுட்பத்தின் குறிப்பிட்ட பகுதிகளில் அதீத கவனம் செலுத்தி வரும் ஒன்றிய அரசு, இந்திய இராணுவத்துடன் இணைந்து அவர்கள் தயாரிக்கும் அதிநவீன இராணுவ தரத்திலான மென்பொருளை உருவாக்குவதிலும் ஒத்துழைப்பு தருகிறதா என்றும், அவ்வாறெனில் அதன் தெரியப்படுத்தவும் எனக் கேள்வி எழுப்பினார். விவரங்களைத்

ஒன்றிய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சகம், செயற்கை நுண்ணறிவு மூலம் இயங்கும் முடிவெடுக்கும் அமைப்புக் கருவிகள் மற்றும் முன்கணிப்பு பகுப்பாய்வுகளை தயாரிப்பதில், இந்திய இராணுவத்துடன் இணைந்து செயல்படுகிறதா என்றும் அவ்வாறெனில் போர்க்களத்தில் இந்தக் கருவிகள் எதன் அடிப்படையில் தன் நுண்ணறிவு மற்றும் செயல்பாட்டுத் திறனை மேம்படுத்திக் கொள்ளும் என்பது குறித்த விரிவான தகவலை தெரிவிக்க வேண்டும் எனக் கேள்வி எழுப்பினார்.

பாதுகாப்பு செயல்பாட்டு மையம் 2.0 எனும் திட்டத்தின் மூலம் இந்திய இராணுவ செயல்பாடுகளில் ஒருங்கிணைக்கப்படும் இணைய பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் கருவிகளின் விவரங்களைத் தெரியப்படுத்தவும் எனவும், டிஜிட்டல் தளங்களில் பெருகிவரும் பல்வேறு அச்சுறுத்தல்களை இந்தப் பாதுகாப்பு செயல்பாட்டு மையம் எந்த வகையில் நிவர்த்தி செய்யும் எனவும் கேள்வி எழுப்பினார்.

இராணுவத் தொலைத்தொடர்பு பொறியியல் கல்லூரி செயற்கை நுண்ணறிவு (AI) ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டிற்கான மையமாக செயல்படுகிறதா என்றும் அவ்வாறெனில் அதன் விவரங்களைத் தெரியப்படுத்தவும் எனக் கேள்வி எழுப்பினார்.

ஒன்றிய அரசானது, உள்நாட்டுத் தொழில்நுட்பத்திற்கான தீர்வுகள் மற்றும் அறிவுசார் சொத்துரிமைகளை மேம்படுத்துகிறதா என்றும் அவ்வாறெனில் அதன் விவரங்களைத் தெரியப்படுத்தவும் என தயாநிதி மாறன் கேள்வி எழுப்பினார்.


### ஆவடி திண்ஊர்த் தொழிலக தொ.மு.ச.

### டி.கே.எஸ்.இளங்கோவன் அறிவிப்பு

ஆவடி திண் ஊர்த்த் தொழிலக தொ.மு.ச. சங்கத்தின் பொதுக்குழு கூட்டம் 29.01.2024 திங்கட்கிழமை மாலை 6 மணிக்கு OCF தொ.மு.ச. அலுவலகத்தில் நடைபெற்றது. அதில் ஐ.செல்வராஜ் உள்ளிட்டவர்கள் கடந்த சங்க சரிபார்ப்பு தேர்தலில் சங்கத்திற்கு எதிராக செயல்பட்டதால், சங்க அடிப்படை உறுப்பினர்களில் இருந்து நீக்கி உள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

அதன் விவரம் வருமாறு: 1. ஐ.செல்வராஜ், 2. ஆர். திருமுருகன் 3.எஸ்.ராமசாமி 4.டி.அர்ஜுனன் 5. திருவேங்கடம்.

**டி.கே.எஸ்.இளங்கோவன்**
தலைவர்
ஆவடி திண்ஊர்த்த் தொழிலக தொ.மு.ச.


### சு.சுப்பிரமணியன் தலைமை! நெல்லை மத்திய மாவட்டத்தில்

# இளைஞரணி 2வது மாநில மாநாட்டு தீர்மான விளக்க கூட்டம்!

## நெல்லை முத்தையா - முன்னணியினர் பங்கேற்பு!

நெல்லை.பிப்.14-

முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க கழக இளைஞர் அணி செயலாளரும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி நிதி மற்றும் மனிதவள மேம்பாட்டு துறை அமைச்சர் தங்கம் தென்னரசு அறிவுறுத்தலின்படி நெல்லை மத்திய மாவட்ட இளைஞரணி மற்றும் மாநகர இளைஞரணி சார்பில் சேலத்தில் நடைபெற்ற கழக இளைஞர் அணி 2வது மாநில உரிமை மீட்பு மாநாடு தீர்மான விளக்க தெருமுனை பொதுக்கூட்டம் 9.2.2024 அன்று தச்சநல்லூர் சிந்து பூந்துறையில் வைத்து நடைபெற்றது.

இந்நிகழ்வு மாநகர இளைஞரணி துணை அமைப்பாளர் அன்பழகன் ரவி தலைமையில் மாவட்ட துணை செயலாளர் எஸ். வி.சுரேஷ்,பகுதி செயலாளர்கள் பூ.சுப்பிரமணியன்,

செல்லத்துரை (பாளை) மாநகர துணை செயலாளர் அப்துல் கையூம், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் வில்சன்மணித்துரை, துணை அமைப்பாளர் மாயா,மாநகர இளைஞரணி துணை அமைப்பாளர்கள் அலிப்மீரான்,இனியன் ஆகியோர் முன்னிலை நடைபெற்றது.30வது வட்டச் செயலாளர் தென்கரை முத்து வரவேற்புரையாற்றினார்.மாநகர கலை இலக்கியப் பகுத்தறிவு பேரவை அமைப்பாளர் வினோத் நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார்.

நிகழ்வில் மாநகர செயலாளர் சு.சுப்பிர மணியின்,தலைமை கழக பேச்சாளர் நெல்லை முத்தையா ஆகியோர் உரையாற்றினார்.

இந்நிகழ்வில் மாவட்ட பிரதிநிதி வெங்கடேஷ், வட்ட செயலாளர்கள் சடாமுனி,பிரேம் கணேசன்,மனோகர், சிந்து, முருகன், சுப்ரித் சுப்பிரமணியன், காஜா மைதீன், மாநகர நிர்வாகிகள் ஸ்டார் முருகன், ஷெட்டி, சிவா, பார்துரை, பத்மா,மேரி உலக ராஜ்,பிந்து செய்யது, ஆனி ரேக்லண்ட், ஏஞ்சலின், சித்ரா, தேவகனி,வள்ளியின் செல்வன், செந்தில், மகாராஜன்,சித்திக்,கணேச பெருமாள், ராமச்சந்திரன்,சங்கர் கணேஷ்,சக்தி முருகன்,மில் குமார், பாம்பு கிருஷ்ணன்,திராவிட மணி, விநாயகம்,சங்கர்,குருநாதன்,அக்பர்அலி, உள்பட மாவட்ட,மாநகர,பகுதி, வட்ட நிர்வாகி கள், மாநகர சார்பு அணி நிர்வாகிகள்,பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சி நிறைவில் வட்ட பிரதிநிதி ராஜேந்திரன் நன்றியுரையாற்றினார்.

# இராமநாதபுரம் மாவட்டக் கழக செயற்குழு கூட்டம்!

## மாவட்டக் கழக செயலாளர் காதர்பாட்சா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ. அறிவிப்பு!

இராமநாதபுரம், பிப்.14-

இராமநாதபுரம் மாவட்டக் கழக செயற்குழுகூட்டம் வருகின்ற (15.02.2024 -வியாழக்கிழமை) மாலை 4.00 மணி அளவில் இராமநாதபுரம், பாரதி நகர், பீமாஸ் வைஸ்ராய் மகாலில், மாவட்ட அவைத்தலைவர் வ.சத்தியமூர்த்தி தலைமையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் உயர் கல்வித்துறை மற்றும் பிற்படுத்தப்பட்டோர் நலத்



துறை அமைச்சர், கழக தேர்தல் பணிக் குழு தலைவர் ஆர்.எஸ்.இராஜகண்ணப்பன் கலந்து கொள்ள இருக்கிறார்.ஆகவே இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள மாநில, மாவட்ட நிர்வாகி கள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், அனைத்து அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் ஆகியோர் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொருள் :

1.கழக இளைஞரணி செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கலந்து கொள்ளும் கழக மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்குதல்.

2. உரிமைகளை மீட்க ஸ்டாலினின் குரல் பொதுக் கூட்டம்.

3. கழக ஆக்க பணிகள்.

இவ்வாறு அவர் அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

### முதிர்வடைந்த கடன் பத்திரங்களுக்கான

# முதிர்வைத் தொகை பெறுவதற்கான விதிமுறைகள்!

## அரசு நிதித்துறை முதன்மைச் செயலாளர் அறிவிப்பு!

சென்னை, பிப். 14-

தமிழ்நாடு அரசு நிதித்துறையின் 07.03.2014 ஆம் நாளிட்ட 262(L)/W&MII/2014 அறிவிக்கையின் வரையறைகளின்படி வழங்கப்பட்ட 9.65% தமிழ்நாடு மாநில வளர்ச்சிக் கடன் 2024 நிலுவைத் தொகையானது 12.3.2024 அன்று 11.3.2024 ஆம் நாள் உட்பட்ட உரிய நாளது வரையிலான வட்டித் தொகையுடன் திருப்பிச் செலுத்தப்படும் என்று பொதுத் தகவலுக்காக அறிவிக்கப்படுகிறது.

யாதொரு மாநில அரசால், 1881 ஆம் ஆண்டு செலாவணி முறிச்சட்டத்தின் கீழ், மேற்சொன்ன நாளினை விடுமுறை நாளாக அறிவிக்கப்பட்டிருப்பின், அந்த மாநிலத்தின் தொகை செலுத்தும் அலுவலகங்களால், முந்தைய அலுவலகப்பணிநாளில் திருப்பிச்செலுத்தப்படும். 12.03.2024 ஆம் நாளிலிருந்தும் அதற்கு பின்னரும் இக்கடனுக்கு வட்டித் தொகை சேராது.

2007ஆம் ஆண்டு அரசு கடன் பத்திரங்களின் ஒழுங்குமுறை விதிகளிலுள்ள 24(2) மற்றும் 24(3) ஆம் துணை ஒழுங்குமுறை விதிகளின்படி, பொது துணை பேரேட்டுப் படிவத்தில் அல்லது மூலப் பொது துணைப் பேரேட்டுக் கணக்கில் அல்லது பங்கு முதல் சான்றிதழில், அரசு கடன் பத்திரங்களை வைத்திருக்கும் பதிவு பெற்ற நபர் ஒருவருக்கு, அவருடைய வங்கி கணக்கில் அல்லது மின்னணுப் பதிவுமூலம் நிதிகளை வரவு வைக்கும் வசதியுள்ள யாதொரு வங்கியில் கணக்கு வைத்திருக்கும் அவருடைய வரவுக் கணக்கில் உரிய விவரங்களை சேர்த்து, தொகை செலுத்துவதற்கான ஆணை வழங்குவதன் மூலம் முதிர்வுத் தொகை வழங்கப்படும்.

கடன் பத்திரங்களைப் பொறுத்தமட்டில், தொகை செலுத்தும் நோக்கத்திற்காக, நேர்விற்கேற்ப அசல் சந்தாதாரர் அல்லது இத்தகைய அரசு கடன் பத்திரங்களை வைத்திருப்பவர் வட்டித்தொகை செலுத்துவதற்காக முகப்பிடப்பட்டுள்ள/பதிவு செய்யப்பட்டுள்ள வங்கிக்கு அல்லது கருவூலத்திற்கு மற்றும் சார் கருவூலத்திற்கு அல்லது பாரத ஸ்டேட் வங்கியின் கிளைக்கு நேர்விற்கேற்ப அவர்களுடைய வங்கிக் கணக்கின் உரிய விவரங்களை அளிக்க வேண்டும்.

இருப்பினும், வங்கிக் கணக்கில் உரிய விவரங்கள் இல்லாத / மின்னணு மூலம் நிதிகளை வரவு வைப்பதற்கு ஆணை பிறப்பிக்கப் படாத நேர்வில், உரிய நாளில் தொகையை திருப்பிச் செலுத்துவதற்கு ஏதுவாக, ‘9.65% தமிழ்நாடு மாநில வளர்ச்சிக் கடன், 2024’ தொடர்பான கடன் பத்திரங்களை வைத்திருப்பவர்கள், அவர்களுடைய கடன் பத்திரங்களை, 20 நாட்களுக்கு முன்னதாகவே, பொதுக் கடன் அலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டும். கடன் தொகையை திருப்பிச் செலுத்துவதற்காக கொடுக்கப்படும் கடன் பத்திரங்களின் பின் பக்கத்தில், கீழேகுறிப்பிடப்பட்டுள்ளவாறு உரியமுறையில் எழுதி கையொப்பமிட வேண்டும்.

கடன் தொகை திருப்பிச் செலுத்தக் கோரி, கடன் பத்திரங்கள் முகப்பிடப்பட்டுள்ள இடங்கள் நீங்கலாக பிற இடங்களில் தொகையைப் பெற விரும்புவோர், கடன் பொறுப்பைத் தீர்க்கும் வாசகத்தை அப்பத்திரங்களின் பின்புறம் உரியவாறு எழுதி கையொப்பமிட்டு, சம்மந்தப்பட்ட பொதுக்கடன் அலுவலகத்திற்கு பதிவு அஞ்சல் மற்றும் காப்புறுதி அஞ்சல் மூலம் அனுப்பவேண்டும். தமிழ்நாடு மாநிலத்தில், அரசு கருவூலகப் பணிகளை மேற்கொள்கின்ற யாதொரு கருவூலம் / சார் கருவூலம் அல்லது பாரத ஸ்டேட் வங்கியின் கிளைகளில் செலுத்தத் தக்க கேட்புக் காசோலை ஒன்றை வழங்குவதன் மூலம், பொதுக் கடன் அலுவலகம், தொகை வழங்கும்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.


### ஆவடி திண்ஊர்த் தொழிலக தொ.மு.ச.நிர்வாகிகள்!

### டி.கே.எஸ்.இளங்கோவன் அறிவிப்பு

சென்னை, பிப்.14-

ஆவடி திண் ஊர்த்த் தொழிலக தொ.மு.ச. சங்கத்தின் பொதுக்குழு கூட்டம் மாலை 6 மணிக்கு OCF தொ.மு.ச. அலுவலகம் 29.01.2024 திங்கட்கிழமை அறிவகத்தில் நடைபெற்றது. இந்தப் பொதுக்குழுக் கூட்டத்தில் நடைபெற்ற தேர்தலில் கீழ்க்கண்ட நிர்வாகக்குழு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

அதன் விவரம் வருமாறு:

தலைவர்: டி.கே.எஸ். இளங்கோவன், உதவித் தலைவர்கள்- 1.டி. விமல் ராஜ், 2. பி.பால் தர்மராஜ், 3.டி.இராஜா ராமன், பொதுச் செயலாளர் லூ.இரட்சக ராஜா துணைச் செயலாளர்கள்: 1. எம். பிரபு, 2. ஜி.செந்தில் மோகன், 3. ஜி.கோவர்தனன், 4.டி.ஸ்ரீதர், 5. வி.சந்திரன், அமைப்புச் செயலாளர்கள்: 1. எம்.கணேசன், 2.டி.குகன், 3.எஸ்.தமிழ் செல்வன்,4.ஆர். மகேந்திரன், 5. கே. சிரஞ்சீவி, 6. எஸ்.வெங்கடேசன்,

பொருளாளர்: பி. ஞானமணி, துணைப் பொருளாளர்: ராஜசேகர், அலுவலகச் செயலாளர்கள்: 1.பி.தினகரன், 2.எஸ்.வெங்கடேசன் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

# தண்டிக்கப்படுகின்றனவா தென் மாநிலங்கள்?

‘வடக்கு வாழ்கிறது, தெற்கு தேய்கிறது’ என்பது அண்ணாவின் முழக்கங்களில் முக்கியமானது. காலம் மாறிவிட்டது. இன்று தென் மாநிலங்கள் வளர்ந்துவருகின்றன. ஆனால், அந்த வளர்ச்சியின் காரணமாகவே ஒன்றிய அரசு தென் மாநிலங்களுக்கு உரிய நிதியை ஒதுக்குவதில்லை என்பதுதான் இப்போதைய குற்றச்சாட்டு. ஒன்றிய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் இந்தக் குற்றச்சாட்டை மறுத்தார். எல்லா மாநிலங்களுக்கும் நிதி ஆணையத்தின் (Finance Commission) பரிந்துரையின் படியே நிதி பகிர்ந்தளிக்கப்படுகிறது என்றார் அவர். அமைச்சரின் கூற்றை எந்த மாநில அரசும் மறுத்ததாகத் தெரியவில்லை. அப்படியானால், அவர் பேசியது சரியானது என்று எடுத்துக்கொள்ளலாமா?

**நடைமுறை என்ன? -**

நமது அரசமைப்புச் சட்டத்தின் 280ஆவது கூறு, ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை நிதி ஆணையம் நிறுவப்பட வேண்டும் என்று விதித்திருக்கிறது. இந்த ஆணையம்தான், ஒன்றிய அரசு மக்களிடமிருந்து வசூலிக்கிற வரி வருவாயை மாநிலங்களுக்கு எவ்விதம் பங்கிட வேண்டும் என்று அறிவுறுத்துகிறது.

முதல் கட்டமாக வரி வருவாயிலிருந்து எத்தனை சதவீதம் மாநிலங்களுக்குக் கட்டாயமாக ஒதுக்கப்பட வேண்டும் என்றும், இரண்டாம் கட்டமாக அவ்விதம் ஒதுக்கப்பட்ட நிதியில் ஒவ்வொரு மாநிலத்துக்கும் எவ்வளவு பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்றும் ஆணையம் பரிந்துரைக்கிறது.

13ஆவது நிதி ஆணையம் (2010-15) மாநிலங்களுக்கு ஒதுக்கிய நிதி 32% மட்டுமே. 14ஆவது நிதி ஆணையம் (2015-20) இதை 42%ஆக உயர்த்தியது. இப்போதைய 15ஆவது நிதி ஆணையம் (2020-26, ஆறு ஆண்டுகள்) இந்த விகிதத்தைக் கூட்டவில்லை. 14ஆவது ஆணையத்தின் பரிந்துரைப்படி மாநிலங்களுக்குக் கிடைத்த மொத்த நிதியில் 10% கூடியிருக்க வேண்டும். ஆனால், அது அப்படி நடக்கவில்லை.

ஒன்றிய அரசு மாநில அரசுகளுடன் பகிர்ந்துகொள்ளத் தேவையற்ற சில ‘சிறப்பு வரி’ வகைகள் இருக்கின்றன. இவை ‘சிறப்பு மேல் வரி’ (செஸ்), ‘கூடுதல் மேல் வரி’ (சர்சார்ஜ்) என்று அழைக்கப்படுகின்றன. 2011-12 நிதியாண்டில் இந்தச் ‘சிறப்பு’ வகைமைகளின் கீழ் வசூலிக்கப்பட்ட வரி, மொத்த வரி வருவாயில் 10.4%ஆக இருந்தது.

2019-20ஆம் நிதியாண்டில் ஒன்றிய அரசு இதன் விகிதத்தை 20.2%ஆக உயர்த்தியது. அதாவது, ‘சிறப்பு வரி’யின் பங்கு சுமார் 10% உயர்த்தப்பட்டது. இதையே வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால், வரி வருவாயில் மாநிலங்களுடன் பகிர்ந்துகொள்ள வேண்டிய நிதி 10% குறைந்தது. அப்படி குறைக்கப்பட்ட வருவாயில் மாநிலங்களுக்கான நிதி 10% கூட்டப்பட்டது. அதற்கு இது சரியாகப் போய்விட்டது. இப்படியாக 14ஆவது ஆணையம் பரிந்துரைத்த 10% கூடுதல் நிதி மாநிலங்களின் வாய்க்கு எட்டவில்லை.

**இரண்டாம் கட்டம் பகிர்வு:**

ஒவ்வோர் ஆணையமும் நிறுவப்படும்போது அவை நிதியை எங்ஙனம் பங்கிட வேண்டும் என்பதற்கான அடிப்படை விதிமுறைகளை (Terms of ReferenceToR) ஒன்றிய அரசுதான் தீர்மானிக்கிறது. 15ஆவது நிதி ஆணையத்துக்கு ஒன்றிய அரசால் வழங்கப்பட்ட விதிமுறைகளில் (ToR) ஒன்றுதான் இப்போதைய பிரச்சினைகள் பலவற்றுக்கும் ஊற்றுக்கண்.

2011 மக்கள்தொகைக் கணக்கெடுப்பின் அடிப்படையில், மாநிலங்களுக்கு நிதியைப் பகிர்ந்தளிக்க வேண்டும் என்பதுதான் சர்ச்சைக்குள்ளான அந்த விதிமுறை (ToR). அதற்கு முந்தைய ஆணையங்கள் 1971 மக்கள்தொகையைத்தான் கணக்கில் கொண்டன. மக்கள்தொகைக் கட்டுப்பாடு ஒரு பிரதான தேசியக் கொள்கையாக உருவெடுப்பதற்கு முன்னால், அந்தக் கணக்கெடுப்பு நடத்தப்பட்டது என்பதுதான் காரணம்.

இந்த இடத்தில் 2011க்கு முந்தைய 40 ஆண்டுகளின் மக்கள்தொகைப் பெருக்கத்தின் சில கூறுகளைப் பார்ப்பது மிகவும் அவசியம். 1971இல் இந்திய மக்கள்தொகை 54.8 கோடியாக இருந்தது. 2011இல் இது 121 கோடியாக உயர்ந்தது. 1971இல் மக்கள்தொகையில் உத்தரப் பிரதேசத்தின் வீதம் 16%ஆக இருந்தது. 2011இல் இது 16.5%ஆக உயர்ந்தது. இதே காலகட்டத்தில் பிஹாரின் மக்கள்தொகை 8.6%இலிருந்து 10.3%ஆக உயர்ந்தது.

அதாவது, சராசரி இந்திய மக்கள்தொகை கூடிவந்த விகிதத்தைவிட உத்தரப் பிரதேசம், பிஹார் போன்ற வட மாநிலங்களின் மக்கள்தொகைப் பெருக்கம் அதிகமாக இருந்தது. இதே 40 ஆண்டுகளில் அனைத்துத் தென் மாநிலங்களின் ஒட்டுமொத்த வீதம் 24.7%இலிருந்து 17.8%ஆகக் குறைந்தது.




**மு.இராமனாதன்**
*எழுத்தாளர்,*


அதாவது, தென் மாநிலங்களின் மக்கள்தொகை அதிகரிக்கும் விகிதம் கணிசமாகக் குறைந்து வந்தது. மக்கள்தொகைக் கட்டுப்பாட்டுத் திட்டத்தைத் தென் மாநிலங்கள் தீவிரமாக அமல்படுத்தியதுதான் காரணம். கூடவே, அவை மக்களின் கல்வியிலும் உடல்நலத்திலும் வேலைவாய்ப்பிலும் கவனம் செலுத்தின. இதுதான் தென் மாநிலங்கள் வளர்ந்து வருவதற்கான காரணம்.

**சொன்னதும் நடந்ததும்:** ஆகவே, 2011 மக்கள்தொகையின் அடிப்படையில் நிதி பங்கிடப்பட்டால் மக்கள்தொகையைக் கட்டுக்குள் வைத்திருக்கும் தென் மாநிலங்கள் தண்டிக்கப்படும் என்பதும், அவ்விதம் கட்டுப்படுத்தாத பல வட மாநிலங்கள் பலன் பெறும் என்பதும் எல்லோருக்கும் தெரிந்தே இருந்தது. எனவே, பல வளர்ந்த மாநிலங்கள் 15ஆவது நிதி ஆணையத்திடம் தங்கள் எதிர்ப்பைப் பதிவுசெய்தன.

அவர்களுக்கு ஆணையம் ஓர் உறுதிமொழி வழங்கியது. 2011 மக்கள்தொகைக் கணக்கெடுப்பின் அடிப்படையில் மாநிலங்களுக்குப் புள்ளிகள் வழங்கப்படும். அதே வேளையில், மக்கள்தொகையைக் கட்டுப்படுத்திய மாநிலங்களுக்கு அதற்கேற்ற வகையில் புள்ளிகள் வழங்கப்படும். இரண்டையும் கணக்கில் கொண்டே நிதி பகிர்ந்தளிக்கப்படும். இந்த உறுதிமொழியைத் தென் மாநிலங்கள் நம்பின. ஆனால், நடந்தது வேறு.

15ஆவது நிதி ஆணையம் மக்கள்தொகைக் கட்டுப்பாட்டுக்கான அடிப்படை ஆண்டாக 1971ஐ அல்ல, 2011 மக்கள்தொகையை எடுத்துக்கொண்டது. இதனால், மக்கள்தொகையைக் கட்டுப்படுத்திய மாநிலங்களுக்கு எந்தப் பலனும் விளையவில்லை. மாறாக, அவை பெறும் நிதி வெகுவாகக் குறைந்தது.

மக்கள்தொகை அதிகமுள்ள பல வட மாநிலங்களோ அதிகப் பலன் பெற்றன. ஐந்து தென் மாநிலங்களுக்கும் சேர்த்து 13.7% நிதியை ஒதுக்கிய 15ஆவது நிதி ஆணையம், உத்தரப் பிரதேசம் எனும் ஒரு மாநிலத்துக்கு மட்டும் 17.94% நிதியை ஒதுக்கியது. இந்த அடிப்படையில்தான், நிதிநிலை அறிக்கையில், 2024-25ஆம் நிதியாண்டுக்கு ஐந்து தென் மாநிலங்களுக்கும் சேர்த்து ரூ.1,92,722 கோடியும் உத்தரப் பிரதேசத்துக்கு மட்டும் ரூ.2,18,816 கோடியும் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

**பாரபட்சமா? -**

வரி வருவாயில் 42% மட்டுமே ஆணையத்தின் பரிந்துரைப்படி பகிர்ந்தளிக்கப்படுகிறது என்று பார்த்தோம். எஞ்சிய வருவாயில் ஒருபகுதியை ஒன்றிய அரசு மானியங்களாகவும் நிவாரணங்களாகவும் திட்டப் பணிகளுக்காகவும் மாநிலங்களுக்கு வழங்குகிறது. இதிலும் தாங்கள் வஞ்சிக்கப் படுவதாகத் தென் மாநிலங்கள் குமுறுகின்றன.

ஒரு புள்ளிவிவரத்தின்படி ஒன்றிய அரசுக்குத் செலுத்தும் ஒவ்வொரு ரூபாய்க்கும் 29 காசுகள் மட்டுமே திரும்பப் பெறுகிறது தமிழ்நாடு. அதே வேளையில், உத்தரப் பிரதேசம் ஒரு ரூபாய் செலுத்தி ரூ 2.73 பெறுகிறது; பிஹார் ரூ.7.06 பெறுகிறது. இது மக்கள்தொகையைக் கட்டுப்படுத்திய தென் மாநிலங்களுக்குத் தண்டனையாக அமைகிறது.

பல மேலை நாடுகளில் பாதுகாப்பு, அயலுறவு, ரயில்வே, பேரிடர் நிவாரணம், மானியங்கள் முதலானவை மட்டுமே ஒன்றிய அரசின் கட்டுப்பாட்டில் இருக்கின்றன. இந்தியா அந்த நிலையை எட்டுவது இப்போதைக்கு சாத்தியமல்ல.

**என்ன செய்யலாம்?** 16ஆவது நிதி ஆணையம் (2026-31) நிறுவப்பட்டுவிட்டது. ஒன்றிய அரசு புதிய ஆணையத்துக்கு வழங்கவிருக்கும் விதிமுறைகளில் (ToR) மீண்டும் 1971 மக்கள்தொகை அடிப்படையில் வரி வருவாய் பகிர்ந்தளிக்கப்படுவதற்கு வகைசெய்ய வேண்டும்.

வளர்ச்சி குன்றிய, மக்கள்தொகை மிகுந்த மாநிலங்களுக்கு அதிக நிதி வழங்கலாம். அது தென் மாநிலங்களின் வளர்ச்சியைப் பாதிக்காத வகையில் இருக்க வேண்டும். கூடவே, ஒன்றிய அரசு ‘சிறப்பு வரி’களைக் குறைத்து, மாநிலப் பங்கீட்டுக்கான நிதியை அதிகரிக்க வேண்டும். இவைதான் மக்கள்தொகையைக் கட்டுக்குள் கொண்டுவந்திருக்கும், வளர்ச்சிப் பாதை யில் முன்னேறி வரும் தென் மாநிலங்களுக்கு ஒன்றிய அரசு செய்யும் நீதியாக இருக்கும்.

நன்றி :
**‘தி இந்து தமிழ்திசை’**
13.02.2024

---

### திண்டுக்கல் மாவட்டத்தில் சிறுபான்மையினர் நலத்துறை கட்டுப்பாட்டில் உள்ள பள்ளிகள் - விடுதிகள்

## அமைச்சர்கள் அர.சக்கரபாணி - செஞ்சி கே.எஸ்.மஸ்தான் ஆய்வு!

*திண்டுக்கல், பிப்.14 -*

அமைச்சர்கள் அர.சக்கரபாணி, செஞ்சி கே.எஸ்.மஸ்தான் ஆகியோர் திண்டுக்கல் நகர் பேகம்பூர், மேட்டுப்பட்டி, நத்தம் ரோடு ஆகிய பகுதிகளில் சிறுபான்மையினர் நலத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள பள்ளி மற்றும் விடுதிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர்.

இந்த ஆய்வின் போது சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் தெரிவித்ததாவது :-

தமிழ்நாடு முதலமைச்சர் தமிழகத்தில் கல்வி வளர்ச்சிக்காக தொடர்ந்து பல்வேறு திட்டங்களை அறிவித்து தொடர்ந்து செயல் படுத்தி வருகிறார்கள். மாணவ, மாணவிகளின் கல்வி மேம்பாட்டிற்காகவும், படித்த இளைஞர்களின் வேலை வாய்ப்பிற்காகவும் பல்வேறு திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார். குறிப்பாக பெண்கள் உயர் கல்வி பெறுவதற்கான வழிவகைகள், வசதிகளை தமிழக அரசு செயல்படுத்தி வருகிறது.

சிறுபான்மையின மக்களின் மேம்பாட்டிற்காகவும், கல்வி மேம்பாட்டிற்காகவும் தமிழக அரசு சார்பில் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. பள்ளிவாசல்கள், தேவாலயங்கள், அடக்கஸ் தலங்களில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்வதற்காக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ரூ.10.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்து உத்தரவிட்டுள்ளார்கள். அந்த நிதியிலிருந்து சிறுபான்மையின மக்களின் கோரிக்கைகளை நிறைவேற்றும் வகையில் பல்வேறு பணிகளை மேற்கொள்ள நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது.

சிறுபான்மையினர் கல்வி மேம்பாட்டிற்காக சிறுபான்மையினர் சார்பில் செயல்படும் பள்ளிகளின் உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தவும், மாணவ, மாணவிகளுக்கான விடுதிகளில் அடிப்படை வசதிகளை நிறைவேற்றவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

திண்டுக்கல் மாவட்டம், பேகம்பூர் ஒரியண்டல் அமிருன்நிஷா உயர்நிலைப் பள்ளி, மேட்டுப்பட்டி புனித பிலோமினாள் நடுநிலைப் பள்ளி, நத்தம் ரோட்டில் அமைந்துள்ள அரசு பள்ளி சிறுபான்மையினர் நல விடுதி ஆகிய பள்ளி மற்றும் விடுதிகளில் இன்று ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. பள்ளிகளில் மாணவ, மாணவிகளுக்கான குடிநீர் வசதி, வகுப்பறை, கழிவறைகள், பள்ளி உட்கட்டமைப்பு, தேவையான அடிப்படை வசதிகள், மாணவர்களின் வருகை பதிவேடு, ஆசிரியர்களின் வருகை பதிவேடு, மாணவர்களுக்கு வழங்கப்படும் உணவின் தரம் போன்றவை குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

விடுதியில் தங்கியுள்ள மாணவிகளுக்குத் தேவையான அடிப்படை வசதிகளான குடிநீர் வசதி, உணவு வசதி, படுக்கை அறை, கட்டில், பெட்சீட், கழிவறை வசதி, படிப்பதற்கு காற்றோட்டமான அறை போன்ற வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. காலை, மதியம், இரவு ஆரோக்கியமான உணவு வழங்கப்படுவதுடன், பள்ளிக்கு மதிய உணவு சாப்பிடும் வகையில் மதிய உணவு எடுத்துச் செல்லவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேலும், விடுதி கட்டடம், சமையலறை, சுற்றுப்பு றச்சூழல், சுகாதார வசதிகள், குளியலறை, கழிவறை வசதிகள், விடுதியில் குப்பை, செடிகள், கொசுவினால் நோய் பரவாமல் இருப்பதற்கு விடுதியினை சுத்தம் மற்றும் சுகாதாரம் குறித்தும், விடுதியில் மாணவிகளின் வருகை பதிவேடு, பொருள் இருப்பு பதிவேடு, காப்பாளர் வருகை பதிவேடு, சமையல் செய்யும் அறையின் சுத்தம், உணவு தரம் குறித்தும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

திண்டுக்கல் மாவட்டத்தில் கொல்லபட்டி வக்பு கபர்ஸ்தான் சுற்றுச்சுவர் கட்ட ரூ.5.00 இலட்சம், கொசவபட்டி ஜிம்மா பள்ளவாசல் வக்பு கபர்ஸ்தான் சுற்றுச்சுவர் கட்ட ரூ.6.75 இலட்சம், ஜவ்வாதுபட்டி புதூர் பள்ளிவாசல் மற்றும் மதரஸா பள்ளிவாசல் மராமத்துப்பணிகள் மேற்கொள்ள ரூ.5.00 இலட்சம், விருப்பாட்சி பள்ளிவாசல் வக்பு பள்ளிவாசல் மராமத்துப் பணிக்கு ரூ.3.00 இலட்சம், மார்க்கம்பட்டி பள்ளிவாசல் வக்பு பள்ளிவாசலில் கழிப்பறைக் கட்ட ரூ.3.00 இலட்சம் வழங்கிடும் பொறுட்டு, அதற்கான ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன. இந்த பள்ளிவாசல்களின் தலைவர்கள் அல்லது முத்தவல்லிகள் விரை வில் மானியத்தை பெற்று பள்ளிவாசல் பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ள வேண்டும், என சிறு பான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சிகளில், மாநகர செயலாளர் ராஜப்பா திண்டுக்கல் மாநகராட்சி மேயர் இளமதி ஜோதிபிரகாஷ், கிழக்கு மாவட்ட துணைச் செயலாளர் பிலால்உசேன், உட்பட பலர் கலந்து கொண்டனர்.

---

<u>தமிழ்நாட்டின் வளர்ச்சிக்காக எந்த முயற்சியும் செய்யாத</u>

## ஆளுநரின் செயல்பாடுகள் மக்களுக்கு வெறுப்பைத்தான் அதிகரிக்கச் செய்யும்!

### ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் விமர்சனம்!

சென்னை, பிப். 14 -

“தமிழ்நாட்டின் வளர்ச்சிக்காக இதுவரை எந்த ஒரு முயற்சியும் செய்யாத ஆளுநரின் செயல்பாடுகள் மக்களுக்கு நாளுக்கு நாள் வெறுப்பைத்தான் அதிகரிக்க செய்யும்” என ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் விமர்சித்துள்ளது.



தினகரன்
பிப்ரவரி 13, 2024 செவ்வாய்க்கிழமை
அதிகரிக்கும் வெறுப்பு
எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களில் கவர்னர்களை வைத்து பா.ஜ. மற்றும் ஆர்.எஸ்.எஸ் தலையீடு செய்து வருகிறது. இதில் அதிகம் பாதிக்கப்படுவது தமிழகம், கேரளா, மேற்கு வங்கம், டெல்லி, பஞ்சாப் அரசுகள். தமிழக அரசியல் வரலாற்றில் சர்ச்சைக் கருத்துகளுக்குப் பஞ்சமில்லாத ஓர் ஆளுநராக உள்ளார் ஆர்.என்.ரவி. ஆளுநராகப் பொறுப்பேற்றதில் இருந்து நீட், மும்மொழித்திட்டம், புதிய கல்விக்கொள்கை, சனாதனம், கால்டுவெல், திராவிடம் என அவர் பேசிய சர்ச்சைப் பேச்சுகள்

இது குறித்து 13.02.2024 தேதிய ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் கூறியிருப்பதாவது:

எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களில் கவர்னர்களை வைத்து பா.ஜ. மற்றும் ஆர்.எஸ்.எஸ் தலையீடு செய்து வருகிறது. இதில் அதிகம் பாதிக்கப்படுவது தமிழகம், கேரளா, மேற்கு வங்கம், டெல்லி, பஞ்சாப் அரசுகள். தமிழக அரசியல் வரலாற்றில் சர்ச்சைக் கருத்துகளுக்குப் பஞ்சமில்லாத ஓர் ஆளுநராக உள்ளார் ஆர்.என்.ரவி. ஆளுநராகப் பொறுப்பேற்றதில் இருந்து நீட், மும்மொழித்திட்டம், புதிய கல்விக்கொள்கை, சனாதனம், கால்டுவெல், திராவிடம் என அவர் பேசிய சர்ச்சைப் பேச்சுகள் ஏராளம். சமீபத்தில் கூட மகாத்மா காந்தியால் சுதந்திரம் கிடைக்கவில்லை என அவர் கூறிய சர்ச்சை பேச்சு ஒருபுறம் இருந்தாலும் மறுபுறம் சட்டசபையில் நிறைவேற்றிய மசோதாக்களுக்கு அனுமதி கொடுக்காமல் தமிழ்நாடு அரசுக்கு பல தொல்லைகளை கொடுத்து வருகிறார்.

இந்நிலையில் நேற்று மரபை மீறி ஆளுநர் உரையை வாசிக்காமல் இருந்து அட்டகாசம் செய்துவிட்டார். ஆளுநர் உரையுடன் தமிழ்நாடு சட்டப்பேரவை நேற்று கூடியது. சட்டப்பேரவைக்கு வந்த ஆளுநர் ஆர்.என்.ரவி, அனைவருக்கும் வணக்கம் என தமிழில் பேசி தனது உரையைத் தொடங்கினார். “பிணியின்மை செல்வம் விளைவின்பம் ஏமம் அணியென்ப நாட்டிவ் வைந்து” என்ற திருக்குறளை வாசித்தார். “வாழ்க தமிழ்நாடு, வாழ்க பாரதம்” என்று மட்டும் கூறி உரையை முற்றிலும் வாசிக்காமல் புற க்கணித்து அமர்ந்தார். மூன்றே நிமிடங்களில் ஆளுநர், தமது உரையை படித்துள்ளார்.

தொடர்ந்து ஆளுநரின் உரையை முழுமையாக அவைக்குறிப்பில் ஏற்றுவதற்கான தீர்மானத்தை அவை முன்னவர் அமைச்சர் துரைமுருகன் கொண்டு வந்தபோது அதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் அவையிலிருந்து ஆளுநர் வெளிநடப்பு செய்தார். இதுபோல் கடந்த ஆண்டும் சட்டசபையில் இருந்து வெளிநடப்பு செய்தார் ஆளுநர். அரசின் உரையை படிக்காமல் ஆளுநர் புறக்கணிப்பது தமிழ்நாட்டு வரலாற்றில் இதுவே முதல்முறையாகும். ஆளுநர் உரைக்கு முன்பு தேசிய கீதம் இசைப்பது தமிழக மரபல்ல என்பது மாணவ பருவத்தில் இருந்தே நாம் அனைவரும் கடைபிடிக்கின்ற விஷயமாகும்.

ஆனாலும் நடைமுறையில் இல்லாத மரபுகளை கடைப்பிடிக்க வேண்டிய அவசியம் என்ன? இந்த அரசுக்கு ஏதாவது ஒருவழியில் குடைச்சல் கொடுக்க வேண்டும் என்ற எண்ணம் தான் ஆளுநருக்கு உள்ளது. சட்டப்பேரவை மாண்புகளை சீர்குலைக்க ஆளுநர் ரவி முடிவு செய்துவிட்டு தான் பேரவைக்கு வந்துள்ளதாக நடுநிலையாளர்கள் கருத்து தெரிவிக்கின்றனர். இதுபோன்று பேரவையில் ஆளுநர் செயல்பாடுகளை பா.ஜ.வை தவிர்த்து எதிர்க்கட்சிகள் கடுமையாக விமர்சனம் செய்தனர்.

ஆளுநர் உரைக்கு முன்பு தேசிய கீதம் இசைப்பது தமிழக மரபல்ல என்று ஆளுநர் அலுவலகத்துக்கு தமிழக சட்டப்பேரவைச் செயலகம் சார்பில் விளக்கம் அளித்துள்ளது. அதன்பிறகும் அவையில் உரையை வாசிக்காததும் வெளிநடப்பு செய்ததும் நியாயப்படுத்த முடியாதவை என எதிர்க்கட்சிகளான தே.மு.தி.க., பா.ம.க. கண்டனம் தெரிவித்துள்ளன.

தமிழகத்தின் வளர்ச்சிக்காக இதுவரை ஆளுநர் எந்த முயற்சியும் செய்யவில்லை. மாறாக தமிழ்நாடு அரசுக்கு நல்ல பெயர் வந்துவிடக்கூடாது என்பதில் தான் கவனம் செலுத்துகிறார் என பொதுமக்களும் சமூக ஆர்வலர்களும் கவலை தெரிவிக்கின்றனர். எத்தனை எதிர்ப்புகள் வந்தாலும் அதைச் சட்டை செய்யாமல் இருக்கும் ஆளுநரின் செயல்பாடுகள், தமிழக மக்களுக்கு, நாளுக்கு நாள் அவர் மீதான வெறுப்பைத் தான் அதிகரிக்க செய்யுமே தவிர கொஞ்சம் கூட குறையாது என்பது தான் நிதர்சனமான உண்மை.

இவ்வாறு அத்தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளது.



முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, கழகத் துணை பொதுச்செயலாளர் முனைவர் க.பொன்முடியின் வழிகாட்டுதலோடு, விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதி, விக்கிரவாண்டி ஊராட்சி ஒன்றியம், பொன்னங்குப்பம் ஊராட்சியில் விவசாயிகளின் பயன்பாட்டிற்காக தமிழ்நாடு அரசின் சார்பில் நேரடி நெல் கொள்முதல் நிலையத்தை விழுப்புரம் தெற்கு மாவட்டச் செயலாளர் நா.புகழேந்தி எம்.எல்.ஏ. திறந்து வைத்தார். உடன் ஒன்றிய குழு தலைவர் சங்கீதாஅரசி ரவிதுரை, ஒன்றியச் செயலாளர்கள் வேம்பி ரவி, ஜெ.ஜெயபால், மேற்பார்வையாளர் சத்தியமூர்த்தி, ஒன்றிய கவுன்சிலர்கள் சாவித்திரி பாலு, ரவிச்சந்திரன், ஊராட்சி மன்ற தலைவர் விசாலாட்சி வேலு, மாவட்ட கண்காணிப்பு குழு எத்திராஜன், ஒன்றிய அவைத்தலைவர் முரளி, ஒன்றிய துணை செயலாளர் ராம்குமார், மாவட்ட இலக்கிய அணி துணை அமைப்பாளர் கலைச்செல்வன், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் ப.அன்பரசு, ஊராட்சி மன்ற துணை தலைவர் பால கிருஷ்ணன், ஒன்றிய இளைஞர் அணி சங்கர், மணிவண்ணன், கண்ணதாசன், ஒன்றிய தகவல் தொழில்நுட்ப அணி புஷ்பராஜ், வீரப்பன், விஸ்வநாதன் மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### வேலூர் பி. சண்முகம்
### பிப்ரவரி 14 (2006)



**வேலூர் மாவட்டக் கழகச் செயலாளராக பொறுப்பு வகித்தவர். 1996ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் வேலூர் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றவர்.**

**தமது சொந்த ஊரான அகரம்சேரியில் ஊராட்சி மன்றத் தலைவராக தேர்ந்தெடுக்கப் பட்டு பணியாற்றியவர்.**

**கழகம் நடத்திய பல்வேறு அறப்போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**“அடக்குமுறைகள் ஏற்றவர் – கழகம் காத்தவர் – கண்ணியமானவர் – கட்டுப்பாடு மிக்கவர் – குறிப்பாக கூறவேண்டுமாயின் மென்மையானவர் – மேன்மையானவர்” என தலைவர் கலைஞர் அவர்களால் புகழப்பட்டவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**



சென்னை, கிண்டி, தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகத்தில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் நேற்று முன்தினம் (12.02.2024) நடைபெற்ற விழாவில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், கொரோனா பெருந்தொற்றுக் காலத்தில் தற்காலிக அடிப்படையில் பணிபுரிந்த 977 செவிலியர்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் பணி நியமன ஆணைகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகத்தின் துணை வேந்தர் மரு.கே.நாராயணசாமி, மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்ககத்தின் இயக்குநர் மரு. ஆர்.இளங்கோ மகேஸ்வரன், மருத்துவக்கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்ககத்தின் இயக்குநர் மரு. ஜெ.சங்குமணி மற்றும் அரசு அலுவலர்கள் கலந்துகொண்டனர்.



விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் சேலத்தில் நடைபெற்ற கழக இளைஞரணி மாநாட்டு தீர்மான விளக்கப் பொதுக்கூட்டம் திண்டிவனம் வ. உ . சி. திடலில் நடைபெற்றது.கூட்டத்தில் அரசு தலைமை கொறடா கோ.வி. செழியன் சிறப்புரை ஆற்றினார். உடன் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான், தலைமைக் கழக வழக்கறிஞர் – செய்தி தொடர்பாளர் வெற்றி கொண்டான், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள்டாக்டர் மாசிலாமணி, சேது நாதன், சீத்தாபதி சொக்கலிங்கம், மாவட்ட அவை தலைவர் டாக்டர் சேகர்,பொருளாளர் ரமணன், நகர செயலாளர் ஆசிரியர் கண்ணன், நகர அவைத் தலைவர்ரவிச்சந்திரன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆனந்த் உள்ளனர்.

## முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில்

# கட்டுமானத் தொழிலாளர் நல வாரியத் தலைவர் பொன்குமார் புதல்வி மணவிழா!

### அமைச்சர் பெருமக்கள் - அனைத்துக் கட்சித்தலைவர்கள் வாழ்த்துகின்றனர்!



சென்னை, பிப்.14 -

தமிழ்நாடு விவசாயிகள் - தொழிலாளர்கள் கட்சியின் நிறுவனத் தலைவரும், தமிழ்நாடு அரசின் கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத் தலைவருமான பொன்குமார் - திருமதி மைதிலி பொன்குமார் ஆகியோரின் புதல்வி செல்வி கே. திவ்யாவுக்கும், சென்னை மாங்காடு பி.கிருஷ்ணன் - திருமதி. கே.கீதா ஆகியோரின் புதல்வர் செல்வன் கே.ரஞ்சித்குமாருக்கும் மணவிழா நாளை (15.2.2024 - வியாழன்) காலை 9 மணியளவில், சென்னை - நீலாங்கரையிலுள்ள ஆர்.கே.கன்வென்சன் சென்டரில் நடைபெறுகிறது.

இந்த மணவிழாவினை தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையேற்று நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்துகிறார்.

மணவிழா வரவேற்பு நிகழ்ச்சி இன்று ( 14.2.2024 - புதன்) மாலை 6 மணியளவில் நீலாங்கரை, ஆர். கே.கன்வென்சன் சென்டரில் நடைபெறுகிறது.

இம்மணவிழா மற்றும் மணவிழா வரவேற்பு நிகழ்ச்சியில் அமைச்சர் பெருமக்கள், அனைத்துக் கட்சித் தலைவர்கள், சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், தமிழ்நாடு விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சி நிர்வாகிகள், தமிழ்நாடு கட்டடத் தொழிலாளர்கள், மத்திய சங்க நிர்வாகிகள், ஆன்றோர், சான்றோர் உள்ளிட்டோர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர்.

பொறியாளர் எல்.நந்தகுமார், என்.லட்சுமி, சி. காளிமுத்து, கே.கமலா, சி.டில்லிபாபு, டி.சுமதி, ஆர்.செந்தில்நாதன், எஸ். விஜி, எல்.தேவராசன், டி.மாலதி, எம்.பார்த்தசாரதி, பி.மாலதி, என்.லட்சுமிநாராயணன், டாக்டர் என்.ராதா, கோ.பழனி, பி.நிர்மலா உள்ளிட்டோர் வரவேற்கின்றனர்.

நிறைவில் கட்டுமானத் தொழிலாளர்கள் நலவாரியத் தலைவர் பொன்குமார், திருமதி மைதிலி பொன்குமார், கே. வினோத்குமார், திருமதி. ரேவதி வினோத் குமார் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

## நாட்டில் ‘செமி கண்டக்டர் துறை’ மேம்பட

# ஒன்றிய அரசு மேற்கொண்ட நடவடிக்கை என்ன?

### நாடாளுமன்றத்தில் தயாநிதி மாறன் கேள்வி!

புதுடெல்லி, பிப். 14 -

நாட்டில் குறைக்கடத்தி (Semiconductor) உற்பத்தியை மேம்படுத்தும் வகையில் ஐரோப்பிய ஒன்றியத்துடன் மேற்கொண்ட ஒப்பந்தம் குறித்தும், குறைக்கடத்தி உற்பத்திக்காக தேர்ந்தெடுக்கப்பட்ட மாநிலங்கள் எவை மற்றும் அதன் காரணங்கள் என்ன போன்ற பல்வேறு கேள்விகளை ஒன்றிய மின்னணு மற்றும் தகவல் தொழில் நுட்பத்துறை அமைச்சகத்திடம் மத்திய சென்னை தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன் கேள்வி எழுப்பினார்.

அதன் விவரங்கள் பின்வருமாறு:

குறைக்கடத்தி (Semiconductor) ஆராய்ச்சி மற்றும் கண்டுபிடிப்பு தொடர்பாக இந்தியாவிற்கும் ஐரோப்பிய ஒன்றியத்திற்கும் இடையே கையெழுத்தான புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்(MoU) விவரங்களைத் தெரியப்படுத்தவும் எனக் கேள்வி எழுப்பினார்

குறைக்கடத்தியின் உற்பத்தி திட்டத்திற்காக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள மாநிலங்கள் எவை என்றும் எந்த அடிப்படையில் அந்த மாநிலங்கள் தேர்வு செய்யப்பட்டது என்றும் கேள்வி எழுப்பினார்.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் குறிப்பிட்டுள்ளவைகளை திறம்பட செயல்படுத்துவதை உறுதி செய்வதற்காக ஒன்றிய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் என்ன என்றும் மேலும் ஒன்றிய மின்னணு மற்றும் தகவல் தொழில் நுட்பத்துறை அமைச்சகம் மேற்கொண்டு வரும் மின்னணு பொருட்கள் உற்பத்திக்கு இந்த ஒப்பந்தம் எந்த வகையில் பொருந்தும் எனவும் கேள்வி எழுப்பினார்.



குறைக்கடத்தித் துறையில் தொழில்நுட்ப முன்னேற்றம் மற்றும் உலகளாவிய ஒத்துழைப்புக்கான இந்தியாவின் மேலான வியூகத்திற்கு இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒத்துப்போகிறதா என்றும், அவ்வாறெனில் அதன் விவரங்களைத் தெரியப்படுத்தவும் என கேள்வி எழுப்பினார்.

குறைக்கடத்தித் துறையில் அத்தொழில் சார்ந்தவர்களுக்கும் கல்வி நிலையங்களும் அதன் மீதான திறனை வளர்த்துக் கொள்ள ஒன்றிய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் என்ன என்று கேள்வி எழுப்பினார்.

## தமிழ்நாட்டுக்கு எதிராக செயல்படும் ஆர்.என்.ரவி – சட்டப்பேரவையில்

# ஆளுநர் உரையை வாசிக்க மறுத்திருப்பது அநாகரிகத்தின் உச்சம்!

### ‘தீக்கதிர்’ நாளேடு தலையங்கத்தில் கண்டனம்!

சென்னை, பிப். 14 -

“தமிழ்நாட்டுக்கு எதிராக செயல்படும் ஆர்.என்.ரவி, சட்டப்பேரவையில் ஆளுநர் உரையை வாசிக்க மறுத்திருப்பது அநாகரிகத்தின் உச்சம்” என்று ‘தீக்கதிர்’ நாளேடு தலையங்கத்தில் கண்டித்துள்ளது.

இதுகுறித்து 13.02.2024 தேதிய ‘தீக்கதிர்’ நாளேடு தலையங்கத்தில் கூறியிருப்பதாவது:



தீக்கதிர்

2024 பிப்ரவரி 13 செவ்வாய்க்கிழமை

அட்டூழியத்தின் உச்சம்

தமிழ்நாடு சட்டப் பேரவையில் இந்தாண்டுக்கான முதல் கூட்டத் தொடரில் ஆளுநர் ஆர்.என்.ரவி நடந்து கொண்ட விதம் முற்றிலும் மக்களாட்சி மரபுக்கு எதிரானது. கூட்டாட்சி கோட்பாட்டுக்கு குந்தகம் விளைவிக்கும் வகையில் தொடர்ந்து செயல்பட்டு வரும் ஆர்.என்.ரவி ஆளுநர் உரையை வாசிக்க மறுத்திருப்பது அநாகரிகத்தின் உச்சம். அவர் தமிழ்நாட்டு

தமிழ்நாடு சட்டப் பேரவையில் இந்தாண்டுக்கான முதல் கூட்டத் தொடரில் ஆளுநர் ஆர்.என்.ரவி நடந்து கொண்ட விதம் முற்றிலும் மக்களாட்சி மரபுக்கு எதிரானது. கூட்டாட்சி கோட்பாட்டுக்கு குந்தகம் விளைவிக்கும் வகையில் தொடர்ந்து செயல்பட்டு வரும் ஆர்.என். ரவி ஆளுநர் உரையை வாசிக்க மறுத்திருப்பது அநாகரிகத்தின் உச்சம். அவர் தமிழ்நாட்டு மக்களை மட்டுமல்ல, இந்திய அரசியல் சாசனத்தையும், இந்திய தேசிய கீதத்தையும் ஒருசேர அவமதிக்கும் பெரும் குற்றத்தை செய்துள்ளார்.

மாநில அரசு தயாரித்த உரைக்கு ஆளுநரும் ஒப்புதல் அளித்துள்ளார். ஆனால் அவை துவங்கும் போது தேசிய கீதத்தை துவக்கத்திலும், இறுதியிலும் பாட வேண்டும் என்று தாம் வலியுறுத்தியதாகவும், அதை மாநில அரசு ஏற்க மறுத்ததால் உரையை முழுமையாக வாசிக்க தமக்கு உடன்பாடு இல்லையென்றும் கூறியி ருக்கிறார். இது தன்னுடைய அட்டூழியத்திற்கு பொருத்தமற்ற ஒரு காரணத்தை கூறுவதே ஆகும். சட்டப் பேரவை துவங்கும் போது தமிழ்த்தாய் வாழ்த்தும், நிறைவடையும் போது தேசிய கீதமும் இசைக்கப்படுவதுதான் காலம் காலமாக பின்பற்றப்படும் மரபு.

அதன்படி தமிழ்த்தாய் வாழ்த்து பாடப்பட்டுள்ளது. இறுதியில் தேசிய கீதம் இசைக்கப்படுவதற்கு முன்பே ஆளுநர் அவையிலிருந்து வெளிநடப்பு செய்துள்ளார். இதிலிருந்து தேசிய கீதத்தை இழிவுபடுத்துவது அவர்தான் என்பது தெளிவாகிவிட்டது. ஆளுநர் உரையில் கூறப்பட்டுள்ள சில விசயங்கள் தமக்கு உடன்பாடு இல்லை என்றும் அவர் கூறியிருக்கிறார். இதை கூறுவதற்கு அவ ருக்கு எந்த உரிமையும் இல்லை. ஆளுநர் உரை என்பது மாநில அரசால் தயாரிக்கப்படுவதேயன்றி இவருடைய சொந்தச் சரக்கிற்கான சுருக்குப் பை அல்ல. ஆளுநர் ஆர்.என். ரவி இதை அறியாதவர் அல்ல. மக்களால் தேர்வு செய்யப்பட்ட தி.மு.க. தலைமையிலான மாநில அரசு அமைந்ததில் இருந்து இவருக்கு கருத்தியல் ஒவ்வாமை இருக்கிறது.

அப்படியென்றால் அவர் தமது பதவியை ராஜினாமா செய்துவிட்டு ஆர்.எஸ்.எஸ். அமைப்புக்கு சேவை செய்யப் போய்விடலாம். அதை விடுத்து தொடர்ந்து சர்ச்சைக்குரிய கருத்துக்களை வெளியிட்டு வரும் ஆளுநர் மாநில அரசின் செயல்பாடுகளை முடக்க முயல்கிறார். மக்களால் தேர்வு செய்யப்பட்ட அரசை சீர்குலைப்பது பற்றியே சிந்திக்கிறார். அதன் வெளிப்பாடுதான் அவருடைய ஆணவப் போக்கு. கேரள ஆளுநர் ஆரிப் முகமதுகானும் இப்படித்தான் சண்டித்தனம் செய்கிறார். இத்தகைய ஆளுநர்கள் போட்டி அரசியல் செய்ய நினைத்தால் தங்கள் பதவியை ராஜினாமா செய்துவிட்டு தேர்தல் களத்தில் போட்டியிடட்டும். இல்லையேல் அரசியல் சாசன மரபை இழிவுபடுத்தாமல் இருக்கட்டும்.

இவ்வாறு தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளது.

## தமிழ் வளர்ச்சித் துறை சார்பில்

# ஐந்து தமிழறிஞர்களின் அனைத்துப் படைப்புகளும் நாட்டுடைமை!

### மரபுரிமையர்களுக்கு நூலுரிமைத் தொகையை - அமைச்சர் மு.பெ.சாமிநாதன் வழங்கினார்!

சென்னை, பிப்.14 -

தமிழ் வளர்ச்சித் துறையால் தமிழ்ச் சான்றோர்களின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டு அவரவர் எழுதிய நூல்களின் எண்ணிக்கை, சிறப்பு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு அவர்தம் மரபுரிமையர்களுக்கு நூலுரிமைத் தொகை வழங்கப்பட்டு வருகிறது. இதுவரை 174 தமிழறிஞர்களின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டு அவர்தம் மரபுரிமையர்களுக்கு ரூபாய் 13.97 கோடி நூலுரிமைத் தொகை தமிழ்நாடு அரசால் ஒப்பளிப்பு செய்யப்பட்டு வழங்கப்பட்டுள்ளது.

இதில் முத்தமிழறிஞர் கலைஞரின் ஆட்சிக்காலத்தில் மட்டும் 140 தமிழறிஞர்களின் நூல்கள் நாட்டுடையாக்கப்பட்டு அவர்தம் மரபுரிமையர்களுக்கு 9.71 கோடி நூலுரிமைத் தொகை ஒப்பளிப்பு செய்யப்பட்டு வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சர் பொறுப்பேற்ற பின்பு நாளிதுவரை 17 தமிழறிஞர்களின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டு அவர்தம் மரபுரியையர்களுக்கு ரூ.2.50 கோடி ஒப்பளிப்பு செய்யப்பட்டு வழங்கப்பட்டுள்ளது.

இதன் தொடர்ச்சியாக தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் அவர்களால் இலக்கிய இலக்கணப் படைப்புக்களாகவும் ஆய்வாகவும் தமிழன்னைக்குத் தொண்டறம் பூண்டு வாழ்ந்து மறைந்த ஐந்து தமிழறிஞர்களின் அனைத்துப் படைப்புகளையும் அறிவுப் பொதுவுடைமை செய்யும் வகையில் மறைந்த தமிழறிஞர்களான இலக்கியத் திறனாய்வர் இராவ் சாகேப் கு.கோதண்டபாணி பிள்ளை அவர்களின் அனைத்துப் படைப்புகளையும் (33 நூல்கள்) நாட்டுடைமையாக்கப்பட்டு அவர்களின் மரபுரிமையர்களான திருமதி ஜா.ரா. புனிதவதி, கோவிந்தசுவாமிநாதன் அவர்களுக்கு நூலுரிமைக்கான தொகை ரூபாய் பத்து இலட்சத்திற்கான காசோலையும், பேராசிரியர் முனைவர் இரா.மோகன் அவர்களின் அனைத்துப் படைப்புகளையும் (88 நூல்கள்) நாட்டுடைமையாக்கப்பட்டு அவர்களின் வாழ்விணையரான பேராசிரியர் நிர்மலா மோகன் அவர்களுக்கு நூலுரிமைக்கான தொகை ரூபாய் பத்து இலட்சத்திற்கான காசோலையும், சொல்லாக்க அறிஞர் கோ.முத்துப்பிள்ளை அவர்களின் அனைத்துப் படைப்புகளையும் (8 நூல்கள்) நாட்டுடைமையாக்கப்பட்டு அவர்களின் மரபுரிமையர்களான பா. எழிலரசு, பா.தமிழரசு, திருமதி த.அறிவரசி, திருமதி கோ.ஞானாம்பாள், திருமதி தே.தங்கம் ஆகியோருக்கு நூலுரிமைக்கான தொகை ரூபாய் பத்து இலட்சத்திற்கான காசோலையும், இதழியல் வல்லுநர் மா.சு.சம்பந்தன் அவர்களின் அனைத்துப் படைப்புகளையும் (10 நூல்கள்) நாட்டுடைமையாக்கப்பட்டு அவர்களின் மரபுரிமையர்களான மா.ச.இளங்கோவன், மா.ச.மணிவண்ணன், மா.ச.உதயகுமார், மா.ச வெற்றிவேல், மா.ச.செல்வ குமார் ஆகியோருக்கு நூலுரிமைக்கான தொகை ரூபாய் பத்து இலட்சத்திற்கான காசோலையும், மகளிர் படைப்பாளராகிய திருமதி அம்சவேணி அவர்களின் அனைத்துப் படைப்புகளையும் (36 நூல்கள்) நாட்டுடைமையாக்கப்பட்டு அவர்களின் வாழ்விணையரான முனைவர் கோ.பெரியண்ணன் அவர்களுக்கு நூலுரிமைக்கான தொகை ரூபாய் ஐந்து இலட்சத்திற்கான காசோலையும் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதனால் வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அரசு செயலாளர் மரு.இல.சுப்பிரமணியன், தமிழ் வளர்ச்சித்துறை இயக்குநர் ஔவை அருள் மற்றும் அரசு அலுவலர்கள் ஆகியோர் பங்கேற்றுச் சிறப்பித்தனர்.

# திருத்தணி தொகுதியில் திட்டப் பணிகள்!

திருவள்ளூர், பிப். 14 -

திருவள்ளூர் மாவட்டம் திருத்தணி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பள்ளிப்பட்டு ஒன்றியங்களில் பொது மக்கள் பல்வேறு கோரிக்கை விடுத்துள்ள நிலையில் பள்ளிப்பட்டு ஒன்றியத்துக்கு உட்பட்ட பகுதிகளில் 1 கோடியே 20 லட்சத்து 35 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் பல்வேறு திட்டம் பணிகள் திருத்தணி சட்டமன்ற உறுப்பினர் எஸ்.சந்திரன் துவக்கி வைத்தார்

பள்ளிப்பட்டு ஒன்றியம் கொத்த குப்பம் ஊராட்சியில் உள்ள ஒன்றிய தொடக்கப்பள்ளியில் 33 ரூபாய் லட்சத்தில் புதிதாக பள்ளி கட்டிடம் அடிக்கல்

அத்திமஞ்சேரி பேட்டையில் நாடாளுமன்ற மேம்பாட்டு நிதியிலிருந்து 12 லட்ச ரூபாய் மதிப்பீட்டில் புதிய கலையரங்க கட்டிடம் அமைக்கும் பணி,

கர்லபாக்கம் ஊராட்சியில் திருத்தணி சட்டமன்ற தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து 15 லட்சத்தி 35 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய அங்கன்வாடி மையம் கட்டிட கட்ட பணி

கர்லபாக்கம் ஊராட்சியில் 32 லட்சம் மதிப்பீட்டில் ஊராட்சி மன்ற அலுவலக கட்டிடம் கட்டுமான பணி

தாங்கல் காலனியில் 28 லட்ச ரூபாய் மதிப்பீட்டில் இரண்டு கூடுதல் வகுப்பறை கொண்ட புதிய பள்ளி கட்டிடம் திறப்பு விழா உள்ளிட்ட நிகழ்ச்சி நடைபெற்றது.

இதில் திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழக செயலாளர் திருத்தணி சட்டமன்ற உறுப்பினருமான திருத்தணி எஸ் சந்திரன் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு கட்டிடங்கள் கட்டுவதற்கான பணிகளை துவக்கி வைத்து பள்ளி கட்டிடத்தை திறந்து வைத்தார்.

இதில் பள்ளிப்பட்டு மத்திய ஒன்றிய கழகச் செயலாளர் பிடி சந்திரன், மாவட்ட பொதுக்குழு உறுப்பினர் ராஜேஸ்வரி ரவீந்திரநாத் ஒன்றிய குழு துணை தலைவர் பொன்சு பாரதி, மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் முரளி சேனா, திருமலை லோகநாதன் கதிரவன் கோவர்தன், மோகன், குமரேசன், சிவக்குமார், வி.வி.மணி, சுப்பிரமணியம் , தேவராஜன், சுரேஷ் , செல்வம் , ரகுவரால் மற்றும்கழக நிர்வாகிகள் உள்ளாட்சி பிரதிநிதி கள் வார்டு உறுப்பினர்கள் பொதுமக்கள் அரசு அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்.




தி.மு.க.
இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

**மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்களின் செயல்பாடுகள் குறித்த ஆய்வுக் கூட்டம்**

**இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு**

கழக இளைஞர் அணியின் மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் ஆற்றிய கழகப்பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம் மாவட்ட வாரியாக, எனது தலைமையில், மாநிலத் துணைச் செயலாளர்கள் முன்னிலையில் குறிஞ்சி இல்லத்தில் வருகிற 14 மற்றும் 15–ஆம் தேதிகளில் நடைபெற உள்ளது. இக்கூட்டத்தில் மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் அனைவரும் தாங்கள் பராமரித்து வரும் மினிட் புத்தகம், கழகப் பணிகள் குறித்த பத்திரிகைச் செய்திகள், புகைப்படங்கள் ஆகியவற்றுடன் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டு கொள்ளப்படுகிறார்கள்.

ஆய்வுக் கூட்ட விவரம் வருமாறு :

| நாள் | மண்டலம் | நேரம் |
|---|---|---|
| 14.02.2024 புதன்கிழமை | 1 | மாலை 4.00 – 6.00 மணி |
| | 2 | மாலை 6.00 – 8.00 மணி |
| 15.02.2024 வியாழக்கிழமை | 3 | மாலை 4.00 – 6.00 மணி |
| | 4 | மாலை 6.00 – 8.00 மணி |

அன்பகம்
சென்னை – 18.
நாள் : 10–02–2024.

உதயநிதி ஸ்டாலின்
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி



திருச்செந்தூர் ஊராட்சி ஒன்றியத்துக்குட்பட்ட மேலத்திருச்செந்தூர் பஞ். நா.முத்தையாபுரம் உள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் ரூ. 28.05 லட்சத்தில் புதிய வகுப்பறைகள் புதிய கட்டடங்களை அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் திறந்து வைத்தார். நிகழ்ச்சியில், திருச்செந்தூர் ஆர்.டி.ஓ. குருச்சந்திரன், தாசில்தார் பாலசுந்தரம், ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் அன்றோ, வட்டார வளர்ச்சி அலுவலர்(ஊராட்சிகள்) இப்ராஹிம் சுல்தான், திருச்செந்தூர் நகராட்சி துணைத்தலைவர் செங்குழி ரமேஷ், பஞ்சாயத்து தலைவர்கள் ராஜேஸ்வரன்(காயாமொழி), மகாராஜன்(மேலத்திருச்செந்தூர்), திலகவதி பாலன் (பள்ளிப்பத்து), தி.மு.க. வர்த்தக அணி இணை செயலாளர் உமரிசங்கர், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ராமஜெயம், முன்னாள் அமைப்பாளர் பில்லா ஜெகன், திருச்செந்தூர் நகராட்சி கவுன்சிலர் செந்தில்குமார், நகர செயலாளர் வாள்சுடலை, முன்னாள் பேரூராட்சித் தலைவர்கள் செந்தமிழ் சேகர், மாமல்லன், மாவட்ட பஞ்சாயத்து கவுன்சிலர் செல்வகுமார், மேல திருச்செந்தூர் கவுன்சிலர்கள் சின்னத்துரை, சுதா, ஜெயக்கொடி, மீனவர் நல வாரிய உறுப்பினர் ஜெபமாலை, வார்டு செயலாளர்கள் முருகன், அமலிநகர் சந்திரன், இளைஞரணி சிவராசன், வி.சி.க. இளஞ்சிறுத்தைகள் மாவட்ட அமைப்பாளர் விடுதலைசெழியன், பள்ளி தலைமையாசிரியர் செல்வகுமார் மற்றும் பள்ளி ஆசிரியர்கள், மாணவ, மாணவிகள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

### சிவகங்கை மாவட்டத்தில் வருகிற 17ஆம் தேதி அமைச்சர் உதயநிதி ஸ்டாலின்

# 1500 கழக முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்கல்!

## அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் அறிவிப்பு!

சிவகங்கை. பிப்.14-

சிவகங்கை மாவட்டக் கழக செயலாளரும், கூட்டுறவுத்துறை அமைச்சருமான கே.ஆர்.பெரியகருப்பன் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது. கழக தலைவர் தளபதி தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் எண்ணத்தினை நிறைவேற்றும் வகையில் செயல்பட்டு வரும் கழக இளைஞர் அணி செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வருகிற 17ஆம் தேதி சிவகங்கை மாவட்டத்தில் சுற்றுப்பயணம் செய்கிறார். 17ஆம் தேதி சனிக்கிழமை காலை 10 மணி அளவில் திருப்பத்தூர் தாலுகா வைரவன் பட்டியில் அமைந்துள்ள பிரம்மாண்டமான திடலில் நான்கு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட 1500 கழக மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்கி விழா சிறப்புரையாற்றுகிறார் .

அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இளைஞர் அணி செயலாளராகவும் அமைச்சராகவும் பொறுப்பேற்ற நாள் முதல் தமிழகமக்களின் உரிமைக்காகவும் தமிழ்நாட்டின் முன்னேற்றத்திற்காகவும் குரல் கொடுத்து வருகிறார். நாட்டின் ஒருமைப்பாட்டினை காக்கும் வகையில் சிறப்பான முறையில் மாநில உரிமைகளைப் பேசி பணியாற்றி வருகிறார். உதய நிதிஸ்டாலின் அவர்களின் பேச்சுக்கள் இந்திய அளவில் அனைவராலும் ஈர்க்கப்பட்டு அனைத்து அரசியல் தலைவர்களின் கவனத்திற்கு உள்ளாகியுள்ளது. அத்தகைய இளம் தலைவர் அவர்கள் நமது மாவட்டத்திற்கு 17ம்தேதி சனிக்கிழமை வருகை தருகிறார். தலைவர் கலைஞர் நூற்றாண்டினை முன்னிட்டு கழகத்தின் வளர்ச்சிக்காக அயராது உழைத்த கழக மூத்த முன்னோடி களின் கழகப் பணியினை பாராட்டி பொற்கிழி வழங்கி சிறப்புரை யாற்றுகிறார். 1500 முன்னோடிகளுக்கு தங்க முலாம் பூசிய மெடல், நிதி உதவி,வேட்டி ஆகியவைகள் தலைவர் கலைஞர் தளபதி முதல்வர் இளைஞரணி செயலாளர், அமைச்சர் உதயநிதி ஆகியோரின் உருவப் படத்துடன் உள்ள வண்ணபையில் இத்தகைய உதவிகளை வழங்கி அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களால் பாராட்டப்படுகிறார்கள். விரைவில் நடைபெற உள்ள பாராளுமன்ற தேர்தலில் இண்டியா கூட்டணி வெற்றி பெற்று. மக்கள் விரோத பாசிச ஆட்சி நடத்தி வரும் ஒன்றிய பா.ஜ.க. அரசை அகற்றுவதற்காக கழகத் தொண்டர்கள் ஆற்றவேண்டிய தேர்தல் பணி குறித்து சிறப்புரையாற்றிட உள்ளார். எனவே இந்த நிகழ்ச்சிக்கு மாவட்ட கழக நிர்வாகிகள், செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், சார்புஅணி நிர்வாகிகள், கூட்டணி கட்சி நிர்வாகிகள், பொதுமக்கள் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்போடு கேட்டுக் கொள்கிறேன். முன்னதாக 16ஆம் தேதி வெள்ளிக்கிழமை மாலையில் மதுரையிலிருந்து கார் மூலம் மூலம் திருப்பத்தூர் வருகைதரும் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சிவகங்கை வடக்கு ஒன்றியம் பெருமாள் பட்டியில் அமைந்துள்ள தலைவர் கலைஞர் நூற்றாண்டு விழா100அடி உயர நினைவு கொடி கம்பத்திலும், சிங்கம்புணரி வடக்கு ஒன்றியம் அரளிக்கோட்டையில் அமைந்துள்ள கலைஞர் நூற்றாண்டு 100 அடி நினைவு கம்பத்திலும் கழக கொடியினை ஏற்றி வைத்து சிறப்புரை ஆற்றுகிறார். தொடர்ந்து 17ஆம்தேதி சனிக்கிழமை காலையில் வைரவன் பட்டியில் பொற்கிழி வழங்கும் நிகழ்ச்சியில் பங்கேற்கிறார். பிற்பகல் 12.30மணி அளவில் தேவகோட்டையில் முன்னாள் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் வே.ருசோவின் வீட்டிற்கு செல்கிறார். அதை தொடர்ந்து ராமநாதபுரம் செல்கிறார். இத்தகவலை மாவட்டக் கழகச் செயலாளரும், அமைச்சருமான கே.ஆர்.பெரியகருப்பன் தெரிவித்துள்ளார்.



# நெல்லை மத்திய மாவட்ட அவசர செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டப் பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன்கான் அறிக்கை!

நெல்லை.பிப்.14-

நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க. அவசர செயற்குழு கூட்டம் இன்று (14.2.2024 - புதன்கிழமை) மாலை 5 மணி அளவில் மத்திய மாவட்ட கழக அலுவலகத்தில் மாவட்ட அவை தலைவர் வி.கே.முருகன் தலைமையில் நடைபெறுகிறது.என நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன் கான் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் அறிவிப்பில் தெரிவித்திருப்பதாவது.

முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் வழி காட்டுதலின்படி நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம் இன்று (4ஆம் தேதி புதன் கிழமை) மாலை 5 மணி அளவில் நெல்லை மத்திய மாவட்டக் கழக அலுவலகத்தில் நடைபெறுகிறது.

கூட்டத்தில் 16.2.2024 அன்று மாலை நெல்லையில் நடைபெறும் 2024 நாடாளுமன்ற தேர்தல்”உரிமைகளை மீட்க ஸ்டாலினின் குரல் ”பாசிசம் வீழட்டும் இந்தியா வெல்லட்டும் என்ற தலைப்பில் நடைபெறும் மாபெரும் பொதுக் கூட்டத்தில் கழக துணை பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரை யாற்ற இருக்கிறார்கள். இந்த கூட்ட ஏற்பாடுகள் குறித்தும்.



வருகிற 18.2.2024 ஞாயிற்றுக்கிழமை அன்று கழக இளைஞர் அணி செயலாளரும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நெல்லையில் நடைபெறும் கழக முன்னணியினர் இல்ல திருமண விழாக்களிலும்,அரசு சார்பில் சீர்மிகு நகர திட்டத்தின் கீழ் முடிவுற்ற சந்திப்பு பேருந்து நிலையம் மற்றும் மற்ற பணிகளையும்,பொது மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தும் அடிக்கல் நாட்டியும் சிறப்பிக்க உள்ளார்கள்.

இந்த இரு நிகழ்வுகள் குறித்தும் மற்றும் கழக வளர்ச்சிப் பணிகள் குறித்தும் ஆலோசிக்கப்பட உள்ளது.

எனவே மத்திய மாவட்டத்திற்கு உட்பட்ட தலைமைக் கழக நிர்வாகிகள், மாவட்ட, மாநகர, நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு,உறுப்பினர்கள், பகுதி,ஒன்றிய,பேரூர், கழக செயலாளர்கள்,கழக சார்பு அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் ஆகியோர் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்க கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# மதுரை மாநகர் மாவட்டக் கழக செயற்குழு கூட்டம்!

## மாவட்ட செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ. அறிவிப்பு!

மதுரை, பிப்.14-

மதுரை மாநகர் மாவட்ட கழக செயற்குழு கூட்டம் நாளை (15.02.2024-வியாழக்கிழமை) அன்று மாலை 6.00மணி அளவில் பசுமலை கோபால்சாமிதிருமண மண்டபத்தில்அவைத்தலைவர் மா.ஒச்சு பாலு தலைமையில்நடைபெற இருப்பதால் மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி கழக, வட்ட கழக செயலாளர்கள், ஒன்றிய, பேரூர், கிளை கழக செயலாளர்கள், அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் கழகமுன்னோடிகள் அனைவரும் தவறாது கலந்து




கொண்டு சிறப்பிக்க வேண்டுகிறேன்.

பொருள்: நாடாளுமன்ற தேர்தல் சம்பந்தமாக கழக வளர்ச்சி பணிகள் குறித்து

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



தேனி வடக்கு மாவட்டம் கழகச் செயற்குழுக் கூட்டம் வடக்கு மாவட்டச் செயலாளர் தங்க தமிழ்ச்செல்வன் தலைமையில் நடைபெற்றது. மாவட்டப் பொருளாளர் சுரேஷ் மாவட்டத் துணைச் செயலாளர் கண்ணன் பொதுக்குழு உறுப்பினர்கள ரமேஷ் முருகேசன், நகரச் செயலாளர் நாராயண பாண்டியன் மற்றும் ஒன்றியச் செயலாளர்கள், நகரச் செயலாளர் பேரூர் செயலாளர்கள், கழக மூத்த முன்னாடிகள் கலந்து கொண்டனர்.

பழக்கடை–மாவீரன்
கி.ஜெயராமன்
(முன்னாள் பகுதிச்செயலாளர்-தியாகராயநகர் பகுதி)
40–ம் ஆண்டு நினைவஞ்சலி
நாள் : 14-02-2024 புதன்கிழமை
இதயத்தை இனிய தலைவருக்கு தந்துவிட்டு
எங்களை விட்டுச்சென்ற சுயமரியாதை வீரரே!...
நீங்கள் காட்டிய
கலைஞரின்
பாதையில்...
உங்கள் வார்ப்புகள் நாங்கள் நடக்கும் போது
உங்கள் இலட்சிய பயணம் எப்படி முடியும்?
நினைவில் வாழும்
ஜெ.அன்பழகன் B.A.,M.L.A.,
மு.செயலாளர்-சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க
பேரன். ராஜாஅன்பழகன் B.Com., MC,
சென்னை தென்மேற்கு மாவட்ட இளைஞர்அணி அமைப்பாளர்
நியமனக்குழு உறுப்பினர் – பெருநகர சென்னை மாநகராட்சி



நாடாளுமன்றத் தேர்தலில் தொகுதிப் பங்கீடு குறித்து கூட்டணிக் கட்சிகளுடன் கழகத்தின் சார்பில் பேச்சுவார்த்தை நடத்திட கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்டுள்ள குழுவினரான துணைப் பொதுச் செயலாளர்கள் இ.பெரியசாமி, க.பொன்முடி, ஆ.இராசா எம்.பி., கழக கொள்கைப் பரப்புச் செயலாளர் திருச்சி சிவா எம்.பி., கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் ஆகியோர் அண்ணா அறிவாலயத்தில் நேற்று முன்தினம் மாலை இந்திய யூனியன் முஸ்லீம் லீக் தேசியத் தலைவர் பேராசிரியர் கே.எம்.காதர் மொகிதீன், மாநில பொதுச் செயலாளர் கே.ஏ.எம்.முஹம்மது அபுபக்கர், மாநில பொருளாளர் எம்.எஸ்.ஏ.ஷாஜஹான்,, தேசிய செயலாளர் எச்.அப்துல் பாஸித், மாநில தேர்தல் பணிக்குழுச் செயலாளர் ஆடுதுறை ஏ.எம்.ஷாஜஹான் ஆகியோருடன் பேச்சுவார்த்தை நடத்தினர்.



நாடாளுமன்றத் தேர்தலில் தொகுதிப் பங்கீடு குறித்து கூட்டணிக் கட்சிகளுடன் கழகத்தின் சார்பில் பேச்சுவார்த்தை நடத்திட கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்டுள்ள குழுவினரான கழக முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு, துணைப் பொதுச் செயலாளர்கள் இ.பெரியசாமி, க.பொன்முடி, ஆ.இராசா எம்.பி., கழக கொள்கைப் பரப்புச் செயலாளர் திருச்சி சிவா எம்.பி., கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் ஆகியோர் அண்ணா அறிவாலயத்தில் நேற்று முன்தினம் மாலை கொங்குநாடு மக்கள் தேசிய கட்சி பொதுச் செயலாளர் ஈ.ஆர்.ஈஸ்வரன் எம்.எல்.ஏ., ஆர்.சக்தி நடராஜன், ஏ.கே.பி.சின்ராஜ் எம்.பி., கே.நித்தியானந்தம், எஸ்.சூரியமூர்த்தி, 'ஜி.அசோகன் ஆகியோருடன் பேச்சுவார்த்தை நடத்தினர்.

### ஆண்டுக்கு 2 கோடி வேலை வாய்ப்புகளை உருவாக்குவோம் எனக் கூறி ஆட்சிக்கு வந்தீர்கள்-

# வேலை வாய்ப்புகளை உருவாக்கவும் இல்லை - வேலை கொடுக்கவும் இல்லை!

## மாநிலங்களவையில் கழகக் குழு தலைவர் திருச்சி சிவா குற்றச்சாட்டு!

புதுடெல்லி, பிப். 14-

பி.ஜே.பி. அரசு ஆட்சி முடிகின்ற காலகட்டத்தில் மக்களின் வரிப் பணத்தை வீணடித்து, நாடாளுமன்ற கூட்டத் தொடரை ஒருநாள் நீட்டித்து, தன்னுடைய தேர்தல் பிரச்சாரத்திற்கு இந்த அவையையும் பயன்படுத்திக் கொள்கிறது. உங்களுடைய அரசின் 10 ஆண்டு சாதனைகள் என்றும், முந்தைய ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசின் 10 ஆண்டு பின்னடைவு என்றும் நீங்கள் சமர்ப்பித்துள்ள வெள்ளை அறிக்கை மீதான இந்த முக்கியமான விவாதத்தில் பங்கேற்பதில் ஆர்வம் கொள்கிறேன். ஆனால் இந்த விவாதத்தில் நாங்கள் பேச போதுமான நேரம் வழங்கப்படவில்லை. விவாதத்தில் பேச நேரத்தை ஒதுக்குவது, நீங்கள் பேசுவதற்கு அதிக நேரம் எடுத்துக் கொள்வது, கூட்டத் தொடரை ஒருநாள் நீட்டிப்பது என அனைத்திலும் உங்கள் அரசு தன்னிச்சையாகவே நடந்து கொள்கிறது. ஆனால் 2024 தேர்தலுக்குப் பின்னர் ஐ.என்.டி.ஐ.ஏ. கூட்டணி ஆட்சி அமைக்கும், அப்போது இந்த அரசின் செயல்பாடுகள் பற்றி வெள்ளை அறிக்கை சமர்ப்பிப்போம், அப்போது உங்களுக்கு அந்த அறிக்கை பற்றி பேசுவதற்கு போதுமான அளவு நேரம் வழங்கப்படும்.



எதிர்க்கட்சியின் குரலை நெரிக்க மாட்டோம். எதிர்க்கட்சியினரின் குரலை நெரிக்கக் கூடாது. நாடாளுமன்ற தொலைக்காட்சி எங்களை காட்டுவதில்லை, நாங்கள் பேசுவதற்கு ஒலி வாங்கி கொடுப்பதில்லை, அப்படி என்றால் நாங்கள் எங்கு பேசுவது? எப்படி பேசுவது? நாங்கள் எதற்காக இங்கு வருகிறோம்? மாநிலங்களின் பிரதிநிதியாக, மக்களின் பிரதிநிதியாக இங்கு வந்திருக்கிறோம். குறைந்த பட்சம் எங்களுடைய உணர்வுகளை வார்த்தைகளால் வெளிப்படுத்துவதற்கு போதுமான நேரம் ஒதுக்குங்கள். ஆளும் கட்சியினரையும் எதிர்க்கட்சியினரையும் வேறுபாடின்றி நாடாளுமன்றத்தில் சமமாக நடத்துங்கள். முந்தைய அரசை குற்றம் சாட்டி இந்த அரசு இந்த வெள்ளை அறிக்கையை கொண்டு வந்திருக்கிறது. நாம் ஒருவரை ஒற்றை விரலை நீட்டி குற்றம் சொல்லும் பொழுது மூன்று விரல்கள் நம்மை நோக்கி இருக்கிறது என்பதை இங்கு உள்ள அனைவரும் அறிவார்கள் நிதியமைச்சரும் அறிவார். முந்தைய ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு பல்வேறு நிலைகளில் தோல்வி அடைந்து விட்டதாக நீங்கள் சொன்னீர்கள். நான் முதலில் உங்களுக்கு ஒன்றை தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

**அறிஞர் அண்ணாவின் பொறுப்புணர்ச்சி!**

எங்களது திராவிட முன்னேற்றக் கழகத்தின் நிறுவனர் அண்ணா முதலில் இந்த ராஜ்யசபாவில் உறுப்பினராக இருந்துவிட்டு பின்னர் தமிழ்நாடு முதலமைச்சரானவர். அவர் தமிழ்நாட்டின் முதலமைச்சராக ஆட்சி செய்து கொண்டிருந்த பொழுது மாணவர்கள் போராட்டம் வெகு தீவிரமடைகிறது. காவல்துறையால் போராட்டத்தை கட்டுக்குள் வைத்திருக்க முடியவில்லை. முதலமைச்சரிடம் துப்பாக்கிச் சூடு நடத்த அனுமதி கேட்கிறார்கள். ஆனால் முதலமைச்சர் அண்ணா அனுமதி தர மறுக்கிறார். ரயில்வே நிலையத்திற்குள் புகுந்து விட்டார்கள் மாணவர்கள், ரயிலை முற்றுகையிட்டு விட்டார்கள், அவர்கள் ரயில் பெட்டிக்கு தீ வைக்கக் கூடும் என்று காவல்துறை சொன்னபோது, அவர்கள் ரயில் பெட்டிக்கு தீ வைத்தால் ஒன்றோ இரண்டோ ரயில் பெட்டிகள் எரிந்து சாம்பலாகலாம்; அப்படி சாம்பல் ஆனால் நாம் புதிய ரயில் பெட்டியை உற்பத்தி செய்து கொள்ளலாம். ஆனால் துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்தால், உயிரை யார் திருப்பித் தர முடியும்? அவர்கள் பெற்றோருக்கு யார் பதிலளிப்பது? என்று அண்ணா பதிலளித்தார். அண்ணாவின் இந்த பதில் ஆட்சியில் இருப்பவர்களின் பொறுப்புணர்ச்சிக்கு எடுத்துக்காட்டு.

**போராடிய விவசாயிகள் 700 பேர் மாண்டு மடிந்தார்கள்!**

அவசர அவசரமாக எதிர்க்கட்சியினரின் குரலையும் காதில் வாங்காமல், முறையற்ற முறையில் இந்த நாடாளுமன்றத்தில்நிறைவேற்றப்பட்ட வேளாண் சட்டங்கள் பின்னர் திரும்பப் பெறப்பட்டது. அந்த சட்டங்களை எதிர்த்து வீதிக்கு வந்து போராடிய விவசாயிகள் 700 பேர் மாண்டு மடிந்தார்கள். இது இந்த அரசின் பொறுப்புணர்ச்சியா?

700 விவசாயிகளின் மரணத்திற்கான பொறுப்பு இந்த அரசுக்கே சேரும். இதையும் வெள்ளை அறிக்கையில் சேர்த்திருக்கலாமே!

பணமதிப்பிழப்பு நடவடிக்கையின் போது 500 ரூபாய் தாளை, 1000 ரூபாய் தாளை மாற்றுவதற்கு வரிசையில் நின்றவர்கள் வங்கி வாசலிலே நூற்றுக்கணக் கில் செத்தார்களே! இதுவும் இந்த அரசின் சாதனையில் தானே சேரும். முதல் கட்ட கொரோனா ஊரடங்கு நான்கு மணி நேரத்திற்கு முன்னால் அறிவிக்கப்பட்டதால் தங்கள் சொந்த ஊருக்குத் திரும்ப முடியாமல் நூற்றுக்கணக்கான புலம்பெயர் தொழிலாளர்கள் செத்தார்களே, அதுவும் இந்த அரசின் சாதனைகளில் தானே சேரும்.

நான் இரண்டு கருத்துக்களை பதிவு செய்ய விரும்புகிறேன். முதலாவதாக விவசாயத்துறை. தேசிய குற்ற ஆவண காப்பக அறிக்கையின் படி, 2020-22 ஆண்டுகளில் விவசாயத் துறையில் மட்டும் 11,290 பேர் தற்கொலை செய்துள்ளனர். இவர்களில் 5207 பேர் விவசாயிகள். 6083 பேர் விவசாயக் கூலி தொழிலாளர்கள். இவ்வளவு தற்கொலைகள் விவசாயத் துறையில் நடைபெற்றுக் கொண்டிருந்த காலகட்டத்தில் தான் தனியார் காப்பீட்டு நிறுவனங்கள் பிரதம மந்திரி பசல் பீமா யோஜனா திட்டத்தின் கீழ் 40,000 கோடி லாபம் ஈட்டியுள்ளனர். நிதிநிலை அறிக்கையில் கடந்த இரண்டு ஆண்டுகளாக விவசாயத் துறைக்கான நிதி ஒதுக்கீடு குறைந்து கொண்டே வருகிறது.

**விவசாயம் சார்ந்த பொருட்களுக்கு அதிக வரி விதிப்பு!**

விவசாயம் சார்ந்த பொருட்களுக்கு அதிக அளவு ஜி.எஸ்.டி. வரி விதிக்கப்படுகிறது. வேளாண் கருவிகளுக்கு 12 சதவீதம், டிராக்டர் உதிரிபாகங்கள், வேளாண் பொருட்களை பிரித்தெடுக்கும் இயந்திரங்கள் ஆகியவற்றிற்கு 18 சதவீத ஜி.எஸ்.டி. வரி விதிக்கப்படுகிறது. உரங்களுக்கு ஐந்து சதவீதமும் பூச்சிக்கொல்லிகளுக்கு 15 சதவீதமும் ஜி.எஸ்.டி. வரி விதிக்கப்படுகிறது. உரங்களுக்கான மானியம் 13 சதவீதத்திலிருந்து குறைக்கப்பட்டு விட்டது. வேளாண்துறைக்கான ஒதுக்கீடு 2.67 சதவீதமாக குறைக்கப்பட்டுள்ளது. இந்தியா அடிப்படையில் ஒரு விவசாய நாடு; ஆனால் இந்த அரசு விவசாயத் துறை மீது கவனம் செலுத்தவில்லை. உலகளாவிய பொருளாதார நெருக்கடி 2008 (GFC Global Financial Crisis) அதைப் பற்றி இந்த நேரத்தில் பேசுவது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன். நீங்கள் கூட அதைப் பற்றி வெள்ளை அறிக்கையில் குறிப்பிட்டு இருக்கிறீர்கள்.

ஒட்டுமொத்த உலகமும் ஐரோப்பிய நாடுகளும் முடங்கிப் போனபோது அமெரிக்காவின் ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP Gross domestic Production) 0.8 சதவீதமாக இருந்தது. இங்கிலாந்தின் ஜி.டி.பி. 1.7 சதவீதமாகவும், ஜெர்மனியின் ஜி.டி.பி. 1 சதவீதமாகவும் , ஜப்பானின் ஜி.டி.பி. 1.5 சதவீதமாகவும், பிரான்ஸின் ஜி.டி.பி. 1.4 சதவீதமாகவும் , கனடாவின் ஜி.டி.பி. 1.9 சதவீதமாகவும் இருந்த அந்த நெருக்கடியான காலகட்டத்தில் இந்தியாவின் ஜி.டி.பி. 8 சதவீதமாக இருந்தது. அது ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சியில் முதன் முறையாக இருந்தபோது, இந்த பொருளாதார நெருக்கடியில் இந்தியா நிலைத்திருந்ததற்கு காரணம் அன்றைக்கு வேளாண் துறை, பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் சிறு குறு தொழில்கள் துறை. ஆனால் இன்றைக்கு இந்த மூன்று துறைகளுமே ஒடுக்கப்படுகின்றன. லாபம் ஈட்டிய பொதுத்துறை நிறுவனங்களின் பங்குகள் விலக்கிக் கொள்ளப்படுகின்றன. சிறு குறு தொழில்கள் துறை ஜி.டி.பி.யில் 29 சதவீத பங்கு வகித்தது. பத்து கோடி பேருக்கு வேலை வாய்ப்பு கொடுத்தது. 45 சதவீதம் ஏற்றுமதி அளித்தது. ஆனால் இந்தத் துறை இன்று கவனிப்பாரற்று கிடக்கிறது.

அடுத்ததாக வேலைவாய்ப்பின்மை. ஆண்டுக்கு 2 கோடி புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்குவோம் என்று தேர்தல் அறிக்கையில் சொல்லி ஆட்சிக்கு வந்தீர்கள் அது அனைவருக்கும் தெரியும். ஆனால் அப்படி இரண்டு கோடி வேலை வாய்ப்புகளை உருவாக்கவும் இல்லை - வேலை கொடுக்கவும் இல்லை. 2012 இல் வேலை வாய்ப்பின்மை ஒரு கோடியாக இருந்தது. ஆனால் அது தற்போது நான்கு கோடியாக உயர்ந்திருக்கிறது. ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சிக் காலத்தில் விவசாயம் சாராத வேலை வாய்ப்புகள் 79 லட்சம் உருவாக்கப்பட்டது. ஆனால் அது தற்போது 25 லட்சமாக குறைந்து விட்டது.

**வேலையில்லாத் திண்டாட்டம்!**

நம்முடைய நாட்டில் மூன்றில் ஒருவர் வேலைக்காக அலைந்து கொண்டிருக்கிறார். ஓர் ஆண்டில் இரண்டு பேர் வேலை இல்லாமல் தற்கொலை செய்திருக்கிறார்கள். ஒன்றிய அரசு அலுவலகங்களில் 75 லட்சம் காலிப் பணியிடங்கள் நிரப்பப்படாமல் உள்ளன. ( அவைத் துணைத் தலைவர் மணி ஒலிக்கிறார். இது முக்கியத்துவம் வாய்ந்த விவாதம். நேரத்தைக் காட்டி எங்களது குரல் வளையை மீண்டும் நெரிக்கிறீர்கள் என்று திருச்சி சிவா அவர்கள் பதில் உரைக்க, திருச்சி சிவா அவர்களே நீங்கள் இந்த அவையில் மிக மூத்த உறுப்பினர், 1:30 மணி நேரம்தான் இந்த விவாதத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. நேரத்தை புரிந்து கொள்ளுங்கள் என்று அவைத் துணைத்தலைவர் சொல்ல, ஏன் குறுகிய நேர விவாதமாக எடுத்துக் கொண்டீர்கள் என்று திருச்சி சிவா அவர்கள் கேட்க, சரி பேச்சை தொடருங்கள் ஒரு நிமிடம் அனுமதிக்கிறேன் என்று அவையின் துணைத் தலைவர் சொல்கிறார்). நிறைய நேரம் ஒதுக்குங்கள். இங்குள்ள அனைவரையும் அவர்களது கருத்துக்களை தெளிவாக எடுத்துரைக்க விடுங்கள். நேரம் கொடுங்கள் எங்களது கருத்துக்களை கேளுங்கள். நாடு முழுவதும் 30 லட்சம் பணியிடங்கள் காலியாக உள்ளது. ஆனால் அவற்றை இன்னும் நிரப்ப வில்லை. இதுதான் இன்றைக்கு நாட்டின் நிலைமை. இந்திய ரயில்வே துறையில் 2023ல் 17 லட்சம் பணியிடங்கள் 11 லட்சம் பணியிடமாக குறைக்கப்பட்டுள்ளது.

பொதுத்துறை நிறுவனங்களில் பணியிடங்கள் 17.3 லட்சத்திலிருந்து 14.6 லட்சமாக குறைக்கப்பட்டு விட்டது. பணி பாதுகாப்பில்லாத ஒப்பந்த தொழிலாளர்களின் எண்ணிக்கையும் 17.2 லட்சத்திலிருந்து 2 மடங்காக அதிகரித்து விட்டது. வேலையில்லாத் திண்டாட்டம் பெருகுகிறது. விவசாயத் துறையில் விவசாயிகள் தற்கொலை செய்கிறார்கள். பொதுத்துறை நிறுவனங்களின் பங்கு விலக்கப்படுகிறது. (நன்றி முடியுங்கள் என்று அவை துணைத்தலைவர்சொல்ல, சரி நான் முடிக்கிறேன் என்கிறார் திருச்சி சிவா) 2023 டிசம்பரில் தமிழ்நாடு மிக மோசமாக வெள்ளத்தால் பாதிக்கப்பட்டதால் தமிழ்நாடு அரசு நிவாரணம் கோரியது. தமிழ்நாட்டின் முதலமைச்சர் பிரதமரைச் சந்தித்தார் பயனில்லை. நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்துறை அமைச்சரை சந்தித்தார்கள் பயனில்லை. ராஜ்நாத்சிங் வந்து பார்வையிட்டு சென்றார் பயனில்லை . நாங்கள் பலமுறை கேட்டுப் பார்த்தோம் கொடுக்கவில்லை.

அதை கண்டித்து திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்கிறோம்!

என்று அறிவித்த பின் மாநிலங்களவை கழக உறுப்பினர்கள் அனைவரும் குழுத்தலைவர் திருச்சி சிவா தலைமையில் வெளிநடப்பு செய்தனர்.

# நெல்லை கிழக்கு மாவட்டச் செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன் அறிக்கை!

*நெல்லை, பிப்.14 -*

*நெல்லை கிழக்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம் இன்று (14.02. 2024 - புதன்கிழமை) காலை 10 மணிக்கு நெல்லை பாளையங்கோட்டை மகாராஜ நகரில் உள்ள மாவட்டக் கழக அலுவலகத்தில் நடைபெற உள்ளது என நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன் தெரிவித்துள்ளார்.*



*இது தொடர்பாக அவர் அறிவிப்பில் தெரிவித்திருப்பதாவது:-*

*முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் வழிகாட்டுதலின்படி நெல்லை கிழக்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம் இன்று (14 ஆம் தேதி -புதன்கிழமை) காலை 10 மணி அளவில் நெல்லை கிழக்கு மாவட்டக் கழக அலுவலகத்தில் நடைபெறுகிறது.*

*இந்நிகழ்வில் மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு, உறுப்பினர்கள், மாநில அணி நிர்வாகிகள் , நகர, பேரூர், கழகச் செயலாளர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், உள்ளிட்டோர் தவறாமல் பங்கேற்று கருத்துக்களை வழங்கிட கேட்டுக் கொள்கிறேன்.*

*பொருள்:*

*1. தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்கள் பிறந்த நாள் மார்ச் 1 நிகழ்ச்சிகள் மற்றும் தொடர் நலத்திட்ட உதவிகள் வழங்குவது சம்பந்தமாக.*

*2. "உரிமைகளை மீட்க ஸ்டாலினின் குரல்" என்ற பெயரில் தலைமைக் கழகம் அறிவித்துள்ள நாடாளுமன்றத் தேர்தல் பரப்புரைக்கான கனிமொழி கருணாநிதி எம்.பி. பங்கேற்கும் மாபெரும் பொதுக்கூட்டம் (16.02.2024) சம்பந்தமாக.*

*3. நாடாளுமன்றத் தேர்தல் பணிகள்.*

*4. கழக வளர்ச்சி பணிகள்.*

*இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.*



இராமநாதபுரம் மாவட்டம், மண்டபம் ஊராட்சி ஒன்றியம், வேதாளை ஊராட்சியில் மாவட்டச் செயலாளர் காதர் பாட்ஷா முத்துராமலிங்கம், எம்.எல்.ஏ, ஆட்சித்தலைவர் பா.விஷ்ணு சந்திரன், ஆகியோர் ஆரம்ப சுகாதார நிலைய புதிய கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டினர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### பழக்கடை கி. ஜெயராமன்

### பிப்ரவரி 14 (1985)



**சென்னை, தியாகராய நகர் பகுதிக் கழகச் செயலாளராக தொடர்ந்து நான்கு முறை தேர்ந்தெடுக்கப்பட்டு சிறப்புற பணியாற்றியவர்.**

**நெருக்கடி நிலை காலத்தில் ஓராண்டு காலம் மிசா கைதியாக சிறையில் இருந்தவர். கழகம் அறிவித்த அனைத்து அறப்போராட்டங்களிலும் பங்கேற்று பலமுறை சிறை சென்றவர். சிறைப்பறவை என்றும் அஞ்சாநெஞ்சன் என்றும் தலைவரால் பாராட்டப்பட்டவர்.**

**"ஒரு தொண்டனுடைய படத்தை நான் திறந்து வைத்ததாக கருதவில்லை. ஒரு தலைவனுடைய படத்தை ஒரு தொண்டன் திறந்து வைத்திருக்கிறேன் என்று கருதிக் கொள்ள வேண்டும்" என்று தலைவர் கலைஞர் அவர்களால் புகழப்பட்டவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**



சென்னை–தலைமைச் செயலகத்தில், நேற்று முன்தினம் (12.02.2024) தமிழ் வளர்ச்சித் துறை சார்பில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், இலக்கிய இலக்கணப் படைப்புகளாகவும், ஆய்வாகவும் தமிழன்னைக்குத் தொண்டறம் பூண்டு வாழ்ந்து மறைந்த ஐந்து தமிழறிஞர்களின் அனைத்துப் படைப்புகளையும் அறிவுப் பொதுவுடைமை செய்யும் வகையில் மறைந்த தமிழறிஞர்களான சாகேப் கு.கோதண்டபாணி பிள்ளை, பேராசிரியர் முனைவர் இரா.மோகன், அறிஞர் கோ.முத்துப்பிள்ளை, இதழியல் வல்லுநர் மா.சு.சம்பந்தன், மகளிர் படைப்பாளராகிய திருமதி அம்சவேணி ஆகியோரது குடும்பத்தார்களுக்கு நூல்கள் நாட்டுடைமை செய்து நூலுரிமைத் தொகைக்கான காசோலைகளை வழங்கினார். இந்நிகழ்வின்போது, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அரசு செயலாளர் முனைவர் இல.சுப்பிரமணியன் மற்றும் தமிழ் வளர்ச்சி இயக்குநர் முனைவர் ஔவை அருள் ஆகியோர் உடனிருந்தனர்.




தலைமைச் செயலகத்தில், சமூக நலன் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் பி.கீதாஜீவன், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையின் கீழ் இயங்கும் சமூகப் பாதுகாப்புத்துறை, யூனிசெப் (UNICEF) மற்றும் சியாப் (SIAPP) அமைப்பும் இணைந்து குழந்தைகள் பெற்றோருடன் ஒரு குடும்பமாக வளர்வதன் முக்கியத்துவத்தை பற்றியும், வளர்ப்புப் பராமரிப்பு சேவையைப் பற்றியும் விழிப்புணர்வை ஏற்படுத்தி, தமிழ்நாட்டில் உள்ள அனைத்து குழந்தைகளும் குடும்ப அமைப்பில் வளர்வதை உறுதிப்படுத்த உருவாக்கப்பட்டுள்ள "விதை" மற்றும் "நிழல்" ஆகிய இரு குறும்படங்களை வெளியிட்டார். இந்நிகழ்வில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அரசுச் செயலாளர் திருமதி ஜெயஸ்ரீ முரளிதரன், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை கூடுதல் செயலாளர் திருமதி இரா.சீதாலட்சுமி, இணை இயக்குநர் தனசேகர பாண்டியன் மற்றும் சியாப் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் முனைவர் சியாமளா நடராஜ், திட்ட இயக்குநர் முனைவர் கே.சுவாமிநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### பெரம்பலூர் மாவட்டத்தில் ஒன்றிய அரசைக் கண்டித்து

# மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் சார்பில் ஆர்ப்பாட்டம்!

### கழகத்தினர் – கூட்டணிக் கட்சியினர் பங்கேற்பு!

பெரம்பலூர், பிப்.14- மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசுக்கு எதிராக ஆளுநரை வைத்து போட்டி அரசு நடத்துவதையும், ஆளுநர்களைப் பயன்படுத்தி உழைக்கும் மக்கள் நலத் திட்டங்களுக்கும், மசோதாக்களுக்கும் அனுமதி தர மறுப்பது, எதிர்க்கட்சி ஆளும் மாநிலங்களுக்கு பாரபட்ச நிதி பங்கீடு, புலனாய்வு அமைப்புகள் மூலம் எதிர்க்கட்சி தலைவர்களை மிரட்டுவது போன்ற, மாநில உரிமைகளை பறிக்கும் ஒன்றிய மோடி அரசைக் கண்டித்து, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பாக, பெரம்பலூர் புதிய பேருந்து நிலையத்தில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி பெரம்பலூர் மாவட்டச் செயலாளர் ரமேஷ் தலைமையில் கண்டன கோஷமிட்டு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இதில் பெரம்பலூர் தி.மு.க. மாவட்டச் செயலாளர் குன்னம் சி.இராஜேந்திரன், பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் எம். பிரபாகரன், மாநில ஆதிதிராவிடர் நலக்குழு துணைச் செயலாளர் பா.துரைசாமி, பொறியாளர் அணி மாநில துணைச் செயலாளர் இரா. ப.பரமேஷ்குமார், தலைமைச் செயற்குழு உறுப்பினர் வழக்கறிஞர் என். ராஜேந்திரன், காங்கிரஸ் கட்சி மாவட்ட தலைவர் சுரேஷ்,

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் மாநில கட்டுப்பாட்டு குழு உறுப்பினர் ஞானசேகரன், மாவட்ட செயலாளர் ஜெயராமன், ம.தி.மு.க. மாவட்ட செயலாளர் ஜெயசீலன்,

விடுதலைச் சிறுத்தைகள் கட்சி மேற்கு மாவட்டச் செயலாளர் ரத்தினவேல், கிழக்கு மாவட்டச் செயலாளர் கலையரசன், விவசாய பிரிவு மாநில செயலாளர் வீர. செங்கோலன்,

இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தலைவர் சர்புதீன், மனித நேய மக்கள் கட்சி மாவட்ட செயலாளர் முகமது இலியாஸ் அலி, பகுஜன் சமாஜ் கட்சி மாநில செயலாளர் காமராசு, திராவிட கழக மாவட்ட தலைவர் தங்கராசு, மாவட்ட செயலாளர் விஜேந்திரன்,

பெரியார் விடுதலை கழக மாவட்ட நிர்வாகி துரை. தாமோதரன்,

மக்கள் அதிகாரம் தலைவர் காவிரி நாடன்,

இந்திய தொழிலாளர் கட்சி தலைவர் ஈஸ்வரன் உள்ளிட்ட மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி தலைவர்கள் பலர் பங்கேற்று கண்டன உரையாற்றினார்கள்.

### 'எந்தவொரு தந்தையும் எதிர்கொள்ள இயலாத துயரம்!'

# முன்னாள் மேயர் சைதை துரைசாமியின் மகன் வெற்றி துரைசாமி மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, பிப்.14 -

முன்னாள் மேயர் சைதை துரைசாமியின் மகன் வெற்றி துரைசாமி உயிரிழந்த செய்தியறிந்ததும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்து இரங்கல் செய்தி வெளியிட்டுள்ளார். அதில் "எந்தவொரு தந்தையும் எதிர்கொள்ள இயலாத துயரம் என்றும்", மகனை இழந்து தவிக்கும் சகோதரர் சைதை துரைசாமி அவர்களுக்கு இத்துயர் மிகு நேரத்தில் தனது இதயப்பூர்வமான ஆறுதலையும், ஆழ்ந்த இரங்கலையும் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தி வருமாறு:-

இமாச்சல பிரதேசத்தில் நடந்த கார் விபத்தில் சென்னை மாநகராட்சி முன்னாள் மேயர் சைதை துரைசாமி அவர்களின் மகன் வெற்றி துரைசாமி உயிரிழந்து, அவரது உடல்கண்டெடுக்கப்பட்டது குறித்த செய்தியைப் பார்த்து அதிர்ச்சியும் மிகுந்த வேதனையும் அடைந்தேன்.

எந்தவொரு தந்தையும் எதிர்கொள்ளக்கூடாத, எதிர்கொள்ள இயலாத துயரம் இது. உயிருக்கு உயிரான மகனை இழந்து தவிக்கும் சகோதரர் சைதை துரைசாமி அவர்களுக்கு இத்துயர்மிகு நேரத்தில் எனது இதயபூர்வமான ஆறுதலையும் ஆழ்ந்த இரங்கலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

# ஆளுநர் ரவியை ஒன்றிய அரசு திரும்பப் பெறுக!

### மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் மாநிலச் செயலாளர் கே.பாலகிருஷ்ணன் வலியுறுத்தல்!




சென்னை, பிப். 14 - மார்க்சிஸ்ட் மாநிலச் செயலாளர் கே.பாலகிருஷ்ணன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு :-

தமிழ்நாடு சட்டப்பேரவையின் ஆளுநர் உரையுடன் கூடும் 2024ன் முதல் கூட்டத் தொடரில் மாநில அரசின் கொள்கை குறிப்பை படிக்க மறுத்து, அரசியல் உள்நோக்கத்துடன் வெளிநடப்பு செய்துள்ள ஆளுநர் ஆர்.என். ரவியின் நடவடிக்கையினை இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) தமிழ்நாடு மாநில செயற்குழு வன்மையாகக் கண்டிக்கிறது. ஆளுநர் உரை என்பது ஆளுநரின் தனிப்பட்ட கருத்துக்களின் தொகுப்பு அல்ல. அவரின் சொந்தக் கருத்துக்களை கூற சட்டப்பேரவை இடமும் அல்ல. ஆளுநர் ஆர். என். ரவி, தேசியகீதத்தை முதலில் பாட வேண்டுமென்று ஏற்கனவே கோரிக்கை விடுத்ததாகவும், அதற்கு தீர்வு இல்லை என்றும், உரையில் தெரிவிக்கப்பட்டுள்ள கருத்துக்களுடன் முரண்படுகிறேன் என்றும் கூறி கேரள ஆளுநர் பாணியில் 2 நிமிடங்களில் உரையை முடித்துக் கொண்டார்.

இந்நிலையில் பேரவை தலைவர், ஆளுநர் உரையை தமிழில் முழுவதும் வாசித்து நிறைவு செய்து விட்டு, தேசிய கீதம் இசைப்பது தொடர்பாக ஆளுநர் ரவிக்கு ஏற்கனவே கடிதம் வாயிலாக தெரிவிக்கப்பட்டுள்ளது என்று பதில் அளிக்கும் போது, ஆளுநர் ரவி கிஞ்சிற்றும் நாகரீகம் இல்லாமல், கடந்த ஆண்டைப் போலவே, தேசிய கீதம் இசைக்கும் முன்பே வெளியேறிச் சென்றது அரசியல் சாசனத்தை மீறிய செயலாகும். இதன் மூலம் தமிழக சட்டமன்றத்தையும் தமிழக மக்களையும் ஆளுநர் அவமதித்துள்ளார். இது கடும் கண்டனத்திற்குரியது. தேசிய கீதத்தை ஆளுநர் அவமரியாதை செய்தார் என்பதும் தெளிவாக வெளிப்பட்டது.

தமிழகத்தின் மாண்பையும், சட்டமன்றத்தின் மரபையும் நிலைநிறுத்தும் வகையில் அமைச்சரவை தயாரித்த முழு உரையும் அவைக்குறிப்பில் ஏற்றப்படும் என்று உடனடியாக அவை முன்னவர் நடவடிக்கை மேற்கொண்டது ஆளுநருக்கு அளிக்கப்பட்ட தகுந்த பதிலடியாக அமைந்தது. அரசமைப்பு சட்டத்திற்கு கட்டுப்பட்டு நடந்து கொள்ள வேண்டிய ஆளுநர், ஆர்.எஸ்.எஸ்.சின் தொண்டராக செயல்படுவதை வாடிக்கையாக வைத்துள்ளார். தமிழ்நாடு அரசுடன் தொடர்ந்து மோதல் போக்கைக் கடைபிடிக்கும் ஆளுநர் ஆர்.என்.ரவியை உடனடியாக திரும்பப் பெற வேண்டுமென இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) தமிழ்நாடு மாநில செயற்குழு வலியுறுத்துகிறது. ஆளுநரின் ஜனநாயக விரோத நடவடிக்கைகளுக்கும், தமிழக விரோதப் போக்கிற்கும் எதிராக தமிழக மக்களும், ஜனநாயக சக்திகளும் தங்களது வலுவான கண்டன குரலை எழுப்பிட வேண்டுமென சிபிஐ (எம்) வலியுறுத்துகிறது.

இவ்வாறு கே.பாலகிருஷ்ணன் வலியுறுத்தியுள்ளார்.

தியாகராயநகர் முன்னாள் பகுதிச் செயலாளர்

மறைந்த மாவீரன்

பழக்கடை

கி.ஜெயராமன்

(தோற்றம் : 15.10.1933 – மறைவு : 14.02.1985)

40-ம் ஆண்டு நினைவஞ்சலி

நாள் : 14-02-2024 புதன்கிழமை

இதயத்தை இனிய தலைவருக்கு தந்துவிட்டு
எங்களை விட்டுச்சென்ற சுயமரியாதை வீரரே!...
நீங்கள் காட்டிய

கலைஞரின்

பாதையில்...

உங்கள் வார்ப்புகள் நாங்கள் நடக்கும் போது
உங்கள் இலட்சிய பயணம் எப்படி முடியும்?

என்றும் உங்கள் நினைவில்

மகன். ஜெ.ஜானகிராமன் B.A.,
பொதுக்குழு உறுப்பினர்

சென்னை தென்மேற்கு மாவட்ட தி.மு.க.

## வரவிருக்கின்ற

# நாடாளுமன்றத் தேர்தல் “இந்தியாவையே காப்பாற்றும் தேர்தல்”!

## கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டத்தில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் எழுச்சி உரை!

**சென்னை, பிப்.14-**

**“வரவிருக்கின்ற நாடாளுமன்றத் தேர்தல் இந்தியாவையே காப்பதற்கான ஒரு தேர்தல்” என்று கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டத்தில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் எழுச்சி உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.**

மக்களவைத் தேர்தலை முன்னிட்டு கழகத்தின் சார்பில் ‘உரிமைகளை மீட்க ஸ்டாலினின் குரல் பாசிசம் வீழட்டும்! இந்தியா வெல்லட்டும்’ என்ற தலைப்பில் நாடாளுமன்றத் தொகுதிவாரியாக தேர்தல் பிரச்சார பொதுக் கூட்டங்கள் வரும் 16, 17 மற்றும் 18 ஆகிய தேதிகளில் நடைபெற உள்ளன.

இந்த பொதுக்கூட்டங்களை மிகச் சிறப்பாக நடத்துவது குறித்து நாடாளுமன்றத் தேர்தல் ஒருங்கிணைப்பு குழு, அனைத்து மாவட்டக் கழக செயலாளர்கள், மாவட்ட பொறுப்பு அமைச்சர்களுடன் காணொலிக் காட்சி வாயிலாக ஆலோசனை நடத்தியது.

இந்தக் கூட்டத்தில் கழக இளைஞர் அணி செயலாளரும் நாடாளுமன்றத் தேர்தல் ஒருங்கிணைப்பு குழு உறுப்பினருமான அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்துகொண்டு பேசினார்.

அப்போது அவர் பேசியதாவது:

“மக்களவைத் தேர்தல் நெருங்கி விட்டது. வரவிருக்கின்ற இந்த நாடாளுமன்றத் தேர்தல் என்பது மிக மிக முக்கியமான ஒரு தேர்தல். இதனை இன்னொரு தேர்தல் போல நாம் கடந்து விட முடியாது. இந்தத் தேர்தல் இந்தியாவையே காப்பதற்கான ஒரு தேர்தல்.

### மிக மிக முக்கியமான தேர்தல்!

மாநில உரிமைகளை மீட்பதற்கான இந்தத் தேர்தல் நமக்கு மிக மிக முக்கியமான தேர்தல். எனவேதான் நம் மாண்புமிகு முதலமைச்சர் கழகத் தலைவரின் ஆணைப்படி வருகின்ற 16, 17 மற்றும் 18 ஆகிய தேதிகளில் தமிழ்நாடு முழுக்க மக்களவைத் தொகுதி வாரியாக உரிமைகளை மீட்க தலைவரின் குரல் ‘பாசிசம் வீழட்டும் இந்தியா வெல்லட்டும்’ என்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டங்கள் நடைபெற இருக்கின்றன.

நம் கழகத்தின் மூத்த முன்னணியினர் இந்தக் கூட்டங்களில் பங்கேற்றுப் பேச இருக்கிறார்கள். இந்தக் கூட்டங்களை மிக மிக வெற்றிகரமாக நடத்த வேண்டும் என்ற நோக்கத்தோடுதான் இந்த ஆலோசனைக் கூட்டம் இங்கே நடந்து கொண்டிருக்கிறது.

எப்படி கடந்த சட்டமன்றத் தேர்தலில் `விடியலை நோக்கி தலைவரின் குரல்’ என்று நாம் அனைவரும் பிரச்சாரம் செய்தோமோ, அதே மாதிரி இந்த முறை `உரிமைகளை மீட்க, தலைவரின் குரல்’ என்ற முழக்கத்தோடு நாம் தேர்தல் களத்தைக் காண இருக்கிறோம்.

மிக முக்கியமான ஒரு கட்டத்தில் இந்தத் தேர்தலை நாம் சந்திக்கிறோம். அந்த விழிப்புணர்வோடுதான் நாம் இனி வருகிற ஒவ்வொரு நாளும் தேர்தல் பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கிட்டத்தட்ட பத்து நாட்களாக நம் அண்ணா அறிவாலயத்தில் அமர்ந்து கழகத்தின் சார்பாக நாடாளுமன்றத் தேர்தலை எதிர்கொள்வதற்காக அமைக்கப்பட்ட ஒருங்கிணைப்புக் குழு சார்பாக நாடாளுமன்றத் தொகுதிகள் சார்பில், ஆய்வுக் கூட்டங்களை வெற்றிகரமாக நடத்தி முடித்தோம். அந்தக் கூட்டங்களின்போது கழகம் சார்ந்தும், தேர்தல் சார்ந்தும் பல்வேறு கருத்துகளைக் கழக நிர்வாகிகள், மாவட்டக் கழகச் செயலாளர்கள், அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் தெரிவித்திருக்கிறீர்கள்.

அவற்றையெல்லாம் நம் முதலமைச்சரின் கவனத்துக்கு நாங்கள் எடுத்துச் சென்றுள்ளோம். முதலமைச்சர் அவர்கள் அந்தக் கருத்துகளுக்கெல்லாம் நிச்சயம் சரியான ஒரு தீர்வை அளிப்பார்கள் என்று நம்பிக்கை இருக்கிறது.

### திட்டங்களைக் கொண்டாடும் தமிழ்நாட்டு மக்கள்!

இன்றைக்கு நம்முடைய திராவிட மாடல் அரசுக்கு இந்திய ஒன்றியம் முழுவதும், மிகப் பெரிய வரவேற்பு இருக்கிறது. நம் தமிழ்நாட்டு மக்கள் நம் திட்டங்களையெல்லாம் கொண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். நம் கழக அரசுக்கு மிகப்பெரிய அளவில் ஆதரவும் வரவேற்பும் மக்கள் மத்தியில் இருக்கிறது.



குறிப்பாக, கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்துக்கு மிகப்பெரிய வரவேற்பு உள்ளது. இதுவரை ஒரு கோடியே 15 லட்சம் மகளிர் பயனடைந்து இருக்கிறார்கள். அதாவது தகுதியுள்ளவர்களில் 85லிருந்து 90 சதவிகித மகளிருக்கு உரிமைத் தொகை சென்றடைந்துள்ளது.

விண்ணப்பித்தவர்கள் ஒரு கோடியே 60 லட்சம் நபர்கள். நாம் ஏற்கெனவே ஒரு கோடியே 15 லட்சம் நபர்களுக்குக் கொடுத்திருக்கிறோம். நான்கைந்து மாதங்களாக இந்தத் திட்டத்தில் பயன்பெற்று வருபவர்களை அவர்களை எல்லாம் சந்தித்து, நம் அரசின் சாதனைகளை, ஒன்றிய அரசின் பாசிசப் போக்கை நீங்கள் எடுத்துச் சொல்ல வேண்டும்.

தேர்தல் மேற்பார்வை ஒருங்கிணைப்புக் குழு ஆலோசனைக் கூட்டத்தின் போது தகுதி இருந்தும் மகளிர் உரிமைத் தொகை கிடைக்காத மகளிர் விவரங்களைக் குடும்ப அட்டை, ஆதார் அட்டை, வருமானச் சான்று உள்ளிட்ட ஆதாரங்களோடு எங்களிடம் கொடுக்கச் சொல்லி இருந்தோம். அதை முழுமையாகக் கொடுத்து விட்டீர்கள் என்றால், அதைச் சரிசெய்வதற்கான பணிகளை நாம் மேற்கொள்ளலாம்.

### கடுமையான நிதி நெருக்கடி!

ஒன்றிய அரசு தமிழ்நாட்டை எப்படி எல்லாம் ஒரு மாற்றாந்தாய் மனப்பான்மையோடு நடத்துகிறது என்பது நம் அனைவருக்கும் தெரிந்த விஷயம். அப்படி இருந்தும் கடுமையான நிதி நெருக்கடிக்கு இடையில்தான் இந்த மகளிர் உரிமைத் திட்டம், மகளிருக்குக் கட்டணம் இல்லா பேருந்து வசதி போன்ற திட்டங்கள் செயல்படுத்தப் படுகின்றன. மகளிருக்குக் கட்டணம் இல்லா பேருந்துத் திட்டத்தின் மூலம் ஒவ்வொரு மகளிரும் மாதந்தோறும் கிட்டத்தட்ட 900 ரூபாய் சேமிக்கிறார்கள்.

**இன்றைக்கு நம்முடைய திராவிட மாடல் அரசுக்கு இந்திய ஒன்றியம் முழுவதும், மிகப் பெரிய வரவேற்பு இருக்கிறது. நம் தமிழ்நாட்டு மக்கள் நம் திட்டங்களையெல்லாம் கொண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். நம் கழக அரசுக்கு மிகப்பெரிய அளவில் ஆதரவும் வரவேற்பும் மக்கள் மத்தியில் இருக்கிறது.**

இரண்டு லட்சத்து 71 ஆயிரம் மாணவிகள், புதுமைப்பெண் திட்டத்தின் மூலம் இந்த இரண்டரை வருடங்களில் பயனடைந்து இருக்கிறார்கள். அதேபோல் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம். இதில் தினமும் 17 லட்சம் குழந்தைகள் பயன் பெற்று வருகிறார்கள். ‘நான் முதல்வன்’ திட்டம் வாயிலாக இதுவரைக்கும் 12 லட்சம் மாணவர்கள் பயன் பெற்று இருக்கிறார்கள்.

### நிதி ஒதுக்கீட்டில் ஒன்றிய அரசு துரோகம்!

எனவே, இப்படிப் பல்வேறு திட்டங்களை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சிறப்பாகச் செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். நிதி ஒதுக்கீட்டில் மிகப்பெரிய துரோகத்தை ஒன்றிய அரசு தமிழ்நாட்டுக்குச் செய்து வருகிறது.

கடந்த ஐந்து வருடத்தில் மட்டும் நாம் ஆறரை லட்சம் கோடி ரூபாய் வரி கட்டியிருக்கிறோம். ஆனால், ஒன்றிய அரசு நம் தமிழ்நாட்டுக்குத் திருப்பிக் கொடுத்தது எவ்வளவு என்று பார்த்தால், வெறும் ஒன்றரை லட்சம் கோடி ரூபாய்.

இதை மக்களிடம் எடுத்துக் கொண்டு சென்று பேசுங்கள். இதை ஒரு பேசு பொருளாக்குங்கள். நம் தமிழ்நாட்டு மக்கள் ஒரு ரூபாய் கொடுத்தால், நமக்குத் திருப்பி ஒன்றிய அரசு டெல்லியில் இருந்து நமக்குக் கொடுப்பது வெறும் 29 பைசா. மக்களிடம் தொடர்ந்து இதைப் பேசிக் கொண்டே இருங்கள்.

புயல், மழை, வெள்ளம் என எது வந்தாலும் ஒரு பைசா கூட நிவாரணமாகத் தர மறுக்கிறார்கள். எல்லோரும் வந்து பார்த்துவிட்டுப் போனார்கள். ஒன்றிய அமைச்சர்கள் எல்லாம் வந்தார்கள். ஆனால், நிதி மட்டும் இதுவரைக்கும் வரவே இல்லை. நிதி உரிமை மட்டுமல்ல, கல்வி உரிமை, மொழி உரிமை என மாநிலத்தின் அத்தனை உரிமைகளையும் ஒன்றிய அரசு பறிக்கிறது.

### இளைஞர் அணியின் 2வது மாநில மாநாடு!

சேலத்தில் கடந்த ஜனவரி 21ஆம் தேதி மிகப்பெரிய எழுச்சியோடு நடைபெற்ற கழக இளைஞர் அணியின் இரண்டாவது மாநில மாநாட்டில் சிறப்பான 25 தீர்மானங்களை நிறைவேற்றினோம். தமிழ்நாடு அரசின் திட்டங்களைப் பாராட்டியும், மாநில உரிமைகளைப் பறிக்கின்ற ஒன்றிய அரசின் பாசிசப் போக்கை கண்டித்தும்தான் நாம் தீர்மானங்களை நிறைவேற்றி அனுப்பினோம். அந்தத் தீர்மானங்களில் உள்ள அம்சங்களை, நீங்கள் படித்துப் பார்த்து தமிழ்நாட்டின் பட்டித்தொட்டியெங்கும் அதைப் பரப்ப வேண்டும்.

### உரையைப் படிக்க மறுத்த ஆளுநர்!

இன்றைக்குக் காலையில் கூட சட்டசபையில் ஒரு சம்பவம் நடைபெற்றது. அரசு கொடுத்த அறிக்கையையே கவர்னர் வாசிக்க மறுத்து விட்டார். அதனால் ஒன்றும் நடந்துவிடவில்லை. நம் சட்டப்பேரவைத் தலைவர் அவர்கள் ஆளுநர் உரையை முழுவதையும் வாசித்தார்கள். அவை அப்படியே அவைக் குறிப்பில் ஏறின.

ஆனால், உரையை படிக்காததற்கு ஆளுநர் என்ன காரணம் சொன்னார். ‘தேசிய கீதம் பாட வேண்டும். தேசிய கீதத்தை அவமரியாதை செய்கிறோம்’ என்ற தப்பான செய்தியைப் பரப்புகிறார்.

எப்போதும் நடப்பதுபோல் காலையில் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடி ஆரம்பிப்போம், நிகழ்ச்சியை முடிக்கும்போது தேசிய கீதம் பாடுவதுதான் வழக்கம். அது அவருக்கும் தெரியும். இருந்தாலும், இதை ஒரு பிரச்சினையாக்கினார்.

இதற்காகத்தான் ஆளுநர் என்ற பதவியே தேவையில்லை என்று, இளைஞர் அணி மாநாட்டில் நாம் தீர்மானம் நிறைவேற்றினோம். இப்படி எல்லா பக்கமும் தமிழ்நாட்டின் வளர்ச்சியைத் தடுப்பதற்கு ஒன்றிய பா.ஜ.க அரசு முட்டுக்கட்டை போட்டு வருகிறது. இதையெல்லாம் மக்களிடம் நாம் எடுத்துச் சொல்ல வேண்டும். ஒன்றிய பா.ஜ.க அரசு 2014 ஆம் ஆண்டில் ஆட்சிக்கு வந்தபோது என்ன சொன்னார்கள்.

`புதிய இந்தியா பிறக்கப் போகிறது’ என்று சொன்னார்கள். `புதிய இந்தியாவை உருவாக்குவோம்’ என்று சொன்னார்கள். ஏற்கெனவே, இருந்த இந்தியாவைச் சிதைத்ததுதான் இவர்களின் ஒரே சாதனை. அதேபோல் ஆட்சிக்கு வரும்போது, `2 கோடி பேருக்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்தித் தருவோம்’ என்று சொன்னார்கள். ஆனால், இதுவரைக்கும் இரண்டு லட்சம் பேருக்குக் கூட அவர்கள் வேலை வாய்ப்பை ஏற்படுத்தித் தரவில்லை.


2017இல் இந்தியா வல்லரசு ஆகிவிடும் என்று பிரதமர் அப்போது சொன்னார். இப்போது என்ன சொல்கிறார் 2047இல் இந்தியாவை வல்லரசு ஆக்கி விடுவோம் என்று திரும்பவும் அதே கதையைச் சொல்கிறார். `ஊழலை ஒழிப்போம், கறுப்புப் பணத்தை மீட்போம்’ என்றார்கள். பண மதிப்பிழப்பைக் கொண்டு வந்து ஆயிரக்கணக்கான மக்களைச் சாகடித்தார்கள். ஆனால், எதுவுமே நடக்கவில்லை.

### ஏழரை லட்சம் கோடி ரூபாய் ஊழல் செய்த ஒன்றிய அரசு!

ஊழல் ஒழிப்பு பற்றிப் பேசிய ஒன்றிய அரசு ஏழரை லட்சம் கோடி ரூபாய் ஊழல் செய்திருக்கிறது. இதனை நாம் சொல்லவில்லை, சி.ஏ.ஜி அறிக்கையே அம்பலப்படுத்தி இருக்கிறது. இந்த அரசால் பயனடைவது கார்ப்பரேட் கம்பெனிகள்தான். அதானி மட்டும்தான். இதுவரை கார்ப்பரேட் கடன்கள் மட்டும் 14 லட்சம் கோடி ரூபாய் தள்ளுபடி செய்திருக்கிறார்கள். ஆனால், விவசாயிகளின் கடனை தள்ளுபடி செய்ய மறுக்கிறார்கள்.

இன்றைக்குக் கூட டெல்லியில் விவசாயிகள் திரண்டு வந்து ஒரு மிகப்பெரிய போராட்டத்தை நடத்தி இருக்கிறார்கள். இஸ்லாமியர்களுக்கு, இலங்கைத் தமிழர்களுக்கு எதிரான குடியுரிமைத் திருத்தச் சட்டத்தைத் தேர்தலுக்குள் கொண்டு வருவோம் என அமைச்சர் கூறுகிறார்.

நீட் தேர்வைத் திணித்து நம் வீட்டு பிள்ளைகள் 21 பேர் இதுவரைக்கும் தற்கொலை செய்துகொண்டிருக்கிறார்கள். இவ்வளவு கொடுமைகளையும் செய்துள்ள பா.ஜ.கவிடம் இன்னொரு முறை நம் நாட்டைக் கொடுத்துவிட்டோம் என்றால், இந்தியாவே இல்லாமல் போய்விடும். மாநிலங்கள் எல்லாம் முனிசிபாலிட்டி அளவுக்கு ஆக்கிவிடுவார். இதையெல்லாம்தான் நாம் மக்களிடம் எடுத்துச் சொல்ல வேண்டும். இதற்காகத்தான் ‘உரிமைகளை மீட்க, தலைவரின் குரல்’ என்ற பெயரில், மிகப்பெரிய பொதுக் கூட்டங்களை எழுச்சியுடன் நாம் நடத்த இருக்கிறோம்.



கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டத்தில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் காணொலிக் காட்சி மூலம் உரையாடினார்.

### பா.ஜ.க. எதிரி என்று நாடகம் ஆடும் அ.தி.மு.க.!

உரிமைகளைப் பறித்தவர்கள் மட்டுமல்லாமல், பறிப்பதற்குத் துணை போன அடிமைகளையும் நாம் மக்களிடம் அம்பலப்படுத்த வேண்டும். இன்றைக்கு அ.தி.மு.கவினர் ஏதோ பா.ஜ.க கூட்டணியை விட்டு வெளியே வந்துவிட்டோம் என்று திடீரென சிறுபான்மையினர் மீது, திடீர்ப் பாசத்தைப் பொழிகிறார்கள். ஒரே நாளில் புனிதன் ஆகிவிட்டது போல ஒரே நாளில் நாங்கள் பா.ஜ.க.வுக்கு எதிரி என்று நாடகம் போடுகிறார்கள். ஆனால், மக்கள் அதை நம்பத் தயாராக இல்லை.

வேளாண் விரோதச் சட்டத்தை ஒன்றிய அரசு கொண்டு வந்தபோது அதை ஆதரித்தவர்கள் யார் என்றால், இதே அடிமை அ.தி.மு.கவினர்தான். நீட் தேர்வை பா.ஜ.க திணித்தபோது அதை அனுமதித்தது யார் என்று பார்த்தால், இதே அடிமை அ.தி.மு.கதான். குடியுரிமைத் திருத்தச் சட்டம் வந்தபோது மாநிலங்களவையில் அ.தி.மு.க எம்.பிக்கள் ஆதரவு கொடுத்ததால்தான் அந்தச் சட்டமே நிறைவேறியது.

அந்தச் சட்டத்தால் யாருக்கும் பாதிப்பு இல்லை என்று பா.ஜ.கவுக்கு வக்காலத்து வாங்கியவர்தான் நம் எடப்பாடி பழனிச்சாமி அவர்கள். ஆனால், இன்றைக்கு அவர்கள் பா.ஜ.க.வுக்கு எதிரானவர்கள் போல வேஷம் போடுகிறார்கள். இதை மக்கள் நம்புவதற்குத் தயாராக இல்லை. பத்தாண்டு காலம் பா.ஜ.க தமிழ்நாட்டைச் சீரழித்தது என்றால், நேரடியாக அவர்கள் வந்து செய்யவில்லை. அ.தி.மு.கவின் உதவியோடுதான் எல்லாவற்றையும் நமக்கு எதிராகச் செய்து முடித்தார்கள்.

இதையெல்லாம்தான் நாம் மக்களிடம் எடுத்துச் செல்லவேண்டும். நம் பிரச்சாரம் வெற்றிப் பிரச்சாரமாக அமைந்திட வேண்டும். வருகின்ற 16, 17 மற்றும் 18ஆம் தேதிகளில் நடைபெற உள்ள இந்தப் பிரச்சாரக் கூட்டத்தில் நான் 17ஆம் தேதி இராமநாதபுரத்தில் உங்களையெல்லாம் சந்திக்க இருக்கிறேன்.

ஒவ்வொரு மக்களவைத் தொகுதிக்கும் மையமாக உள்ள இடத்தில், நமது கழக முண்ணனியினர், அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் உரையாற்ற இருக்கிறீர்கள். இந்த மூன்று நாட்களில் சென்னை நீங்கலாக 37 மக்களவைத் தொகுதிகளில் இந்தக் கூட்டங்கள் நடைபெறுகின்றன.

### தலைவர் பிறந்த மார்ச் 1-இல் சென்னையில் பிரமாண்டக் கூட்டம்!

தென் சென்னை, மத்திய சென்னை, வடசென்னை ஆகிய மூன்று தொகுதிகளுக்கான மிகப்பெரிய, ஒரு பிரமாண்டக் கூட்டம் நம் தலைவரின் பிறந்த நாளான மார்ச் 1 அன்று நடைபெற இருக்கிறது. எனவே, இந்தக் கூட்டங்களையெல்லாம் மிகப்பெரிய வெற்றி அடையச் செய்ய வேண்டியது நம் கடமை.

விடியலை நோக்கி தலைவரின் குரலாக நாம் 2021இல் தமிழ்நாடு எங்கும் எதிரொலித்தோம். தமிழ்நாட்டுக்குப் புதிய விடியல் கிடைத்தது. அதேபோல் இப்போது உரிமைகளை மீட்க தலைவரின் குரலாக எதிரொலிப்போம். ஒட்டுமொத்த இந்தியாவுக்கும் விடியல் கிடைக்கும் நாள் தூரத்தில் இல்லை. கலைஞர் நூற்றாண்டில் ‘பாசிசம் வீழ்ந்தது, இந்தியா வென்றது’ என்ற வரலாற்றைப் படைத்திடுவோம் என்று கூறி விடைபெறுகிறேன்.”

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

முன்னதாக கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி அனைவரையும் வரவேற்று பேசினார். கழக முதன்மைச் செயலாளர் - அமைச்சர் கே.என்.நேரு தலைமையுரை நிகழ்த்தினார். அமைச்சர் எ.வ.வேலு அனைவருக்கும் நன்றி கூறினார்.

இந்தக் கூட்டத்தில் கழக துணைப் பொதுச்செயலாளர்கள், மாவட்டக் கழக செயலாளர்கள், அமைச்சர்கள் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# திராவிடப் போராளிகள்

54 ■ வழக்கறிஞர் அருள்மொழி

**ம**றைக்கப்பட்ட பங்களிப்பு, மறக்கப்பட்ட தியாகம், மறுக்கப்பட்ட அங்கீகாரம் என இந்திய வரலாறு நெடுகிலும் குறைந்தபட்சம் அடிக்குறிப்பாகக் கூட இல்லாமல் போன திராவிட இயக்க வீராங்கனைகள் எத்தனையோ பேர். அவர்களைப் பற்றி, திராவிட இயக்கம் மட்டுமே பதிவு செய்துள்ளது. இது அத்தகைய தியாகச் சுடர்களை அடையாளம் காட்டும் தொடர்...

## நாத்திக இயக்கத்தின் பெண் தலைமை; அன்னை மணியம்மையார்



*1957*-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 26 -ஆம் நாள் தந்தை பெரியார் அவர்கள் **‘இந்திய அரசியல் சட்டத்தில் சாதியைக் காப்பாற்றும் பிரிவுகள் கொளுத்தப்படும்’** என்று ஒரு மாபெரும் கிளர்ச்சியை அறிவித்தார். ஆயிரக்கணக்கான சாதி ஒழிப்புப் போராளிகள் தங்கள் பெயரைப் போராட்டப் பட்டியலில் சேர்க்குமாறு முன்கூட்டியே பதிவு செய்தனர்.

இந்திய பிரதமர் நேருவும் அன்றைய சென்னை மாநிலத்தின் (தமிழ்நாட்டின்) முதல்வர் காமராஜரும் அந்தப் போராட்டத்தைக் கட்டுப்படுத்த அடக்குமுறைகளைக் கையாண்டனர். பத்தாயிரம் பேர் பங்கேற்ற அந்தப் போராட்டத்தில் கைது செய்யப்பட்டு, திருச்சி சிறையில் அடைக்கப்பட்டிருந்த பட்டுக்கோட்டை ராமசாமி, மணல்மேடு வெள்ளைச்சாமி என்ற இரண்டு தோழர்கள், 1958-ஆம் ஆண்டு மார்ச் மாதம் முறையே 8-ஆம் நாள் மற்றும் 10- ஆம் நாள் சிறைச்சாலையிலேயே உடல்நலம் குன்றி இறந்துவிட்டனர்.

அவர்களின் சடலத்தை உறவினர்கள் மற்றும் தோழர்களிடத்தில் ஒப்படைக்க மறுத்தனர் சிறை அதிகாரிகள். அவர்களது உடல்கள் சிறையிலேயே அடக்கம் செய்யப்படும் என்று அறிவித்துவிட்டனர். அதைக் கேள்விப்பட்டு, வெகுண்டெழுந்த சிங்கமாய் தன் தோழர்கள் அணிவகுக்க, சிறை நோக்கிப் புறப்பட்டார் அன்னை மணியம்மையார். சிறைவாசலில் அமர்ந்து அவர் நடத்திய போராட்டத்தின் விளைவாக, முதல்வர் காமராஜர் தலையிட்டு தோழர்களின் உடல்களை ஒப்படைக்கச் செய்தார்.

கொள்கைக்காக உயிர்த்தியாகம் செய்த அந்தத் தோழர்களின் உடல்களைப் பெற்று, இறுதி ஊர்வலம் நடத்தி, அவர்களுக்கு உரிய மரியாதையுடன் அடக்கம் செய்யப்படும்வரை மணியம்மையார் ஓயவில்லை. தந்தை பெரியார் தொடங்கிய போராட்டத்தைத் தொடர்ந்து நடத்தும் தகுதிமிக்கத் தலைவராக அன்னை மணியம்மையார் வெளிப்பட்ட பெருநிகழ்வாக அந்தப் போராட்டம் அமைந்தது.

> **இந்தி ஆதிக்க எதிர்ப்புப் போரில் தடையை மீறிப் போராடியதற்காக கைது செய்யப்பட்டு, பாபநாசம் கிளைச் சிறையிலும், விசாரணைக்குப் பின் அவரது சொந்த ஊரான வேலூரில் இரண்டு மாதம் சிறைத்தண்டனையும் அனுபவித்தார்.**

### ‘திரும்பி வருகிறேன்’

தந்தை பெரியார் 1973-ஆம் ஆண்டு டிசம்பர் 24-ஆம் நாள் காலமானார். இனி, திராவிடர் கழகம் தன் வலிமையை, ஆற்றலை இழந்துவிடும் என்று உள்ளுக்குள் ஊற்றெடுத்த மகிழ்ச்சியை மறைக்க முடியாமல் கொண்டாடிக்கொண்டிருந்த இன எதிரிகளின் கனவில் இடி விழும் வண்ணம் **‘நான் இருக்கிறேன்’** என்று எழுந்து நின்ற அன்னை மணியம்மையார், 04.01.1974 அன்று ‘விடுதலை’ நாளேட்டில் ‘திரும்பி வருகிறேன்’ என்ற தலைப்பில் எழுதிய அறிக்கை அவரது ஆளுமையை முழுமையாக விளக்கியது.

“என்னுடைய இளம் வயதிலிருந்து அதாவது எனக்கு புத்தி தெரிந்த நாளிலிருந்து அய்யாவின் கொள்கையால் ஈர்க்கப்பட்டு, அதே பைத்தியமாகிப் பள்ளிப்படிப்பையும் செம்மையுற முடிக்காமல் பாதியிலேயே விட்டுவிட்டு, என் தந்தை இறந்த சிறிது நாள்களுக்குள்ளாகவே அய்யா அவர்களிடம் என்னை ஒப்படைத்துக் கொண்டேன். அவர் தொண்டுக்கு முழுக்க முழுக்க ஆளாகி, அவர் நலத்தைக் கண்ணெனப் பாதுகாக்க ஒரு தாயாக என்னைப் பாவித்துக்கொண்டு, அவரை ஒரு சிறு குழந்தையாகவே என் மனதிலிருத்தி, அக்குழந்தைக்கு ஊறு நேரா வண்ணம் பாதுகாப்பதிலேயே மகிழ்ச்சி கண்டேன்.

அவரும் என்னை ஒரு நாளும் பெயரிட்டு அழைக்காமல், அவர் உயிர் பிரியும் வரையிலும், “அம்மா! அம்மா!” என்று ஆயிரம் அம்மாக்களை தினமும் அழைத்த வண்ணமே இருப்பார். அந்த மழலைமொழியைத்தான் இனி நான் கேட்க முடியாதே தவிர, என் உள்ளம் மட்டும் மானசீகமாகக் கேட்டுக்கொண்டேதான் இருக்கிறது.”

மணியம்மையாரின் அறிக்கையின் இந்தப் பகுதியை மட்டும் படிப்பவர்கள் அவரைத் தந்தை பெரியாரின் செவிலியாகவோ பாதுகாப்பாளராகவோ கருதுவதற்கு வாய்ப்பிருக்கிறது. ஆனால், மணியம்மையார் என்ற திராவிடப் போராளியின் ஒருபக்கம்தான் அது. அவரது மறுபக்கம், ஒரு பகுத்தறிவுள்ள பெண்ணாக, சுயமரியாதைக்காரராக, தன் வாழ்வைத் தானே முடிவு செய்யும் தகுதியும் துணிச்சலும் வாய்ந்த உரிமைப் போராளியாக, திராவிடர் கழகத்தின் ஒவ்வொரு குடும்பத்தையும் தன் அன்பினால் இணைத்த, ஆனால் கண்டிப்புமிக்க அன்னையாக, திராவிடர் கழகம் என்ற இயக்கத்துக்கு வாய்த்த அரும்பெரும் தலைவராக உலகிலேயே நாத்திக இயக்கத்துக்குத் தலைமை ஏற்ற முதல் பெண்ணாக அவர் ஆற்றிய பணிகளும் சாதனைகளும் அவர் வாழ்க்கைப் பதிவுகளும் திராவிட இயக்கத்தினர் ஒவ்வொருவரும், குறிப்பாக இன்றைய இளம்பெண்களும் தெரிந்துகொள்ளவேண்டிய திராவிடப் போராளியின் வரலாறாகும்.

### சந்திப்பால் நேர்ந்த நீக்கம்

அன்னை மணியம்மையார் 1920-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 10- ஆம் நாள் பிறந்தார். பிறந்த ஊர் வேலூர். அவரது தந்தை வி.எஸ்.கனகசபை, தந்தை பெரியார் கொள்கையில் பற்று கொண்டவர். தாயார் பெயர் பத்மாவதி. பெற்றோர் மணியம்மையாருக்கு இட்ட பெயர் காந்திமதி. அவருக்கு இரண்டு சகோதரர்கள் ஒரு சகோதரி இருந்தனர்.

வேலூரில் உள்ள அரசு பெண்கள் பள்ளியில் படித்தார். அப்போதே அவருக்கு தந்தை பெரியாருடைய கருத்துகளும் கொள்கைகளும் ஈர்ப்பை ஏற்படுத்தின. பள்ளியில் நான்காவது பாரம் (ஒன்பதாம் வகுப்பு) படித்துக்கொண்டு இருந்தபோது 1936-ஆம் ஆண்டு வேலூருக்கு ஒரு திருமணத்தில் கலந்து கொள்வதற்காக வந்த தந்தை பெரியாரைச் சந்தித்தார். பெரியாரைச் சந்தித்த காரணத்துக்காகப் பள்ளி நிர்வாகத்தால் வகுப்பிலிருந்து வெளியேற்றப்பட்டார்.

ஆனாலும், கல்வி ஆர்வம் குறையாத மணியம்மையார் பள்ளி இறுதி வகுப்புவரை முடித்துத் தேர்ச்சி பெற்று, குலசேகரப்பட்டினத்தில் ‘தமிழர் காவலர்’ சி.டி. நாயகம் அவர்கள் தொடங்கிய தமிழ்க் கல்லூரியில் புலவர் கல்வியில் சேர்ந்தார். புலவர் பட்டப் படிப்பை முடிப்பதற்கு முன்னால் பொதுவாழ்வுக்கு வந்துவிட்டார்.

### அரசியல் மணி

1943-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் தந்தை பெரியாரின் தொண்டராக இயக்கத்தில் இணைந்தார். காந்திமதி என்ற பெயரை மாற்றிகொண்டு, கே.ஏ.மணி என்ற பெயரில் கட்டுரைகள் எழுதத் தொடங்கினார். அவர் எழுதிய கட்டுரை முதன்முதலாக 08.07.1944 நாளிட்ட ‘குடிஅரசு’ இதழில், ‘கந்தபுராணமும் இராமாயணமும் ஒன்றே’ என்ற தலைப்பில் வெளியானது. 27.08.1944 அன்று சேலத்தில் கூடிய நீதிக்கட்சி மாநாட்டில் பேரறிஞர் அண்ணா முன்மொழிந்த தீர்மானத்தின் மூலம் நீதிக்கட்சி, ‘திராவிடர் கழகம்’ என்று பெயர் மாற்றம் பெற்றது. அதே மாநாட்டில் கே.அரசியல் மணி என்ற பெயரில் மணியம்மையார் உரையாற்றினார்.

தொடர்ந்து, தந்தை பெரியாரின் பிரச்சாரப் பணிகளில் முழுமையாக ஈடுபட்டார். தந்தை பெரியாரின் உடல்நலன் பேணுவதையும் தன் பொறுப்பாக ஏற்றுக்கொண்டார். 1948-ஆம் ஆண்டு டிசம்பர் 20 ஆம் நாள் கும்பகோணத்தில் நடந்த இந்தி ஆதிக்க எதிர்ப்புப் போரில் தடையை மீறிப் போராடியதற்காக கைது செய்யப்பட்டு, பாபநாசம் கிளைச் சிறையிலும், விசாரணைக்குப் பின் அவரது சொந்த ஊரான வேலூரில் இரண்டு மாதம் சிறைத்தண்டனையும் அனுபவித்தார். 23.02.1949 அன்று சிறையிலிருந்து விடுதலை பெற்ற மணியம்மையார் மீண்டும் 31.03.1949 அன்று இந்தி எதிர்ப்பு மறியல் போராட்டத்தைச் சென்னையில் தலைமை தாங்கி நடத்தினார். அவரது வாழ்க்கையே பிரச்சாரம், போராட்டம் என்று அமைந்தது.

### இயக்கத்தைக் காப்பதற்கான ஏற்பாடு

மணியம்மையாரின் தன்னலமற்ற இயக்கப் பணி தந்தை பெரியாரின் உள்ளத்தில் பெரும் நம்பிக்கையை ஏற்படுத்தியது. தனது பரம்பரைச் சொத்துகளையும், தான் தன் காலத்தில் உருவாக்கிய சொத்துகளையும் இயக்க வளர்ச்சிக்குப் பயன்படுத்தவேண்டும் என்று நினைத்த பெரியார் அதனைப் பொறுப்பேற்று நடத்துவதற்கு மணியம்மையார் தகுதியானவர் என்று உறுதியாகக் கருதினார். இந்தக் காலகட்டத்தில் தந்தை பெரியாரின் தலை மகனாக, தளபதியாகத் திகழ்ந்த பேரறிஞர் அண்ணா அவர்கள் தேர்தல் பாதையைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்ற கருத்தைக் கொண்டிருந்தார். அதுகுறித்து பெரியாருக்கும் அண்ணாவுக்கும் இடையில் ஏற்பட்ட மன வேறுபாடுகளும் அதன் எல்லையைத் தொட்டன.

அந்தச் சூழ்நிலையில் தந்தை பெரியார் அன்னை மணியம்மையாரை சட்டப்படியான தன் வாரிசாக்க 09.07.1949 அன்று பதிவுத் திருமணம் செய்தார். அதனை இயக்கத்தைக் காப்பதற்கான ஒரு ஏற்பாடு என்று அறிவித்தார். அதுவே திராவிட முன்னேற்றக் கழகம் என்ற இயக்கத்தின் தொடக்கப் புள்ளியாக அமைந்து, பேரறிஞர் அண்ணா அவர்களால் 16.09.1949 அன்று தி.மு.கழகம் தோற்றுவிக்கப்பட்டது. வாழும்போதும் மறைந்த பின்னும் எதிர்ப்புகளையும் அவச்சொற்களை யும் மணியம்மையார் எதிர்கொண்ட முறை வியப்புக்குரியது.

தொடரும்...

(வருவார்கள்...)

---

### திராவிட மாடலுக்கு மற்றுமொரு மகுடம்!




அரசு, அரசு உதவி பெறும் கல்லூரி, பல்கலைக்கழகங்களில் பயிலும் மாணவர்களின் தனித்திறமைகளைக் கண்டறிந்து ஊக்குவிக்கும் நோக்கத்துடன் 2022-இல் தொடங்கப்பட்ட திட்டம் ‘நான் முதல்வன்’. இந்தத் திட்டத்தின் கீழ் 2022-23 நிதியாண்டில் 1.19 லட்சம் மாணவர்கள் வேலைவாய்ப்புப் பெற்றுள்ளனர். அதில் பொறியியல் மாணவர்கள் 61,920 பேர், கலை அறிவியல் பிரிவு மாணவர்கள் 57,315 பேர் வேலைவாய்ப்பு பெற்றுள்ளனர்.

லாஜிஸ்டிக்ஸ், தகவல் தொழில்நுட்பம், மேலாண்மை, சுகாதாரம், மின்னணுவியல் உள்ளிட்ட முன்னணித் துறைகளில் முன்னணி நிறுவனங்களில் இவர்கள் பணியமர்த்தப் பட்டுள்ளனர். 2 லட்சம் ரூபாய் முதல் 25 இலட்சம் ரூபாய் வரையிலான ஊதிய அளவுகளில் வேலைவாய்ப்பு பெற்றிருக்கின்றனர்.

மகளிர் உரிமைத் தொகை, புதுமைப்பெண் திட்டம், கட்டணமில்லா பேருந்துப் பயணம், இல்லம் தேடிக் கல்வி, மக்களைத்தேடி மருத்துவம், காலை உணவுத் திட்டம் என சரித்திரம் படைத்த திராவிட ஆட்சியின் சாதனைப் பட்டியலில் மற்றுமொரு மகுடமாய் சேர்ந்திருக்கிறது ‘நான் முதல்வன்’.

---

### ::ப்ளாஷ்பேக்



**ஓய்வில் சந்திப்பு!**

2002-ஆம் ஆண்டு ஆண்டிப்பட்டி இடைத்தேர்தல். அப்போது 20 நாள்களாக ஆண்டிப்பட்டியின் எல்லா இடங்களிலும் தொடர் பிரச்சாரம் மேற்கொண்டேன். அன்றைய இளைஞர் அணிச் செயலாளரும், இன்றைய கழகத் தலைவருமான தளபதி அவர்கள் பிரச்சாரம் செய்ய வந்தபோது மதியம் சர்க்கரை ஆலை ஓய்வு விடுதியிலே தங்கி இருந்தார். அந்த நேரத்தில் நமது தளபதி அவர்களை சந்திக்க நான் ஓய்வு விடுதிக்குச் சென்றேன். அருகிலிருந்த நம்முடைய முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அண்ணன் கம்பம் செல்வேந்திரன் அவர்கள் என்னை அவரிடம் அறிமுகம் செய்து வைத்தார். அப்போது எடுக்கப்பட்ட புகைப்படம் இது.



காமராஜ்

**-போடி காமராஜ்,**
**தலைமைக் கழகப் பேச்சாளர், போடி.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம் பேட்டை, சென்னை-600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

---


**கருவூலம்**

### கலைஞர் என்னும் நான்!

**1947-இல் கலைஞர் எழுதிய ‘தூக்குமேடை’ நாடகத்தை தஞ்சையில் எம்.ஆர்.ராதா அரங்கேற்றம் செய்தார். தூக்குமேடையிலிருந்து கதாநாயகன் பேசிய வசனங்கள், திராவிட இயக்கத்தின் சமூகப் புரட்சியை எடுத்துரைத்தன. அந்த மேடையில்தான் ‘அஞ்சா நெஞ்சன்’ பட்டுக்கோட்டை அழகிரி, கலைஞருக்கு ‘கலைஞர்’ என்ற பட்டத்தை வழங்கினார். அதுமுதல் கலைஞரே பெயரானது.**

---

### திராவிடத்தால் வாழ்கிறோம் 388




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by R.N.Murugan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.